
KALKI 1.5.88 ரூ. 2.

கல்கி



பறக்கும் நேரத்தைப் பணியச் செய்யுங்கள்!



குட்டிக்யூரா அழகி
Cuticura
TALCUM POWDER
SOOTHES
COMFORTS
BEAUTIFIES
குட்டிக்யூரா
டால்க்
இளம் பெண்கள் இதை
விரும்புவது இயற்கையே
CHAITRA-B-MP-2 TMR

யாழ்ப்பாண வீதியில் அமைதிப்படை வாகனங்கள்.



அமைதிப் படையால் மட்டுமே அமைதி திரும்பி விடாது!

கட்டுரை ஆசிரியர் பிரெஞ்சு பத்திரிகை ஏஜென்ஸி (APF) யின் நிருபர். பிப்ரவரி 23 முதல் இலங்கையில் இருந்துவருகிறார். யாழ்ப்பாணப் பகுதியில் விரிவாகச் சுற்றுப் பயணம் செய்து பலரையும் சந்தித்து விருப்பு வெறுப்பின்றி நடு நிலையிலிருந்து எழுதுகிறார்:

சரியாகக் காலை ஐந்து மணி. இரவில் அமுலிலிருந்த எட்டு மணி நேர ஊரடங்குச் சட்டம் முடிவுக்கு வர, யாழ்ப்பாண நகரின் பிரதான பஸ் நிலையம் மற்றும் மார்க்கெட்டில் கடைகள் ஒவ்வொன்றாகத் திறக்கப்படுகின்றன. துதி கீதங்களையும் சினிமாப் பாடல்களையும் ஒலி பெருக்கிகள் காது கிழியப் பரப்புகின்றன.

அருகே திருவள்ளுவர் சிலைக்குப் பின்னால் ஒரு வங்கியைக் காவல் காக்கும் சீக்கியச் சிப்பாய்கள் வீதிகளில் நடமாட்டம் அதிகமாக முன்னிலும் உஷாராகிறார்கள். அவர்களில் ஒருவரான ஹார்ஜிந்தர் சிங் ''இங்கே உள்ள ஜனங்கள் ரொம்ப நல்லவர்கள்'' என்று சான்றிதழ் வழங்குகிறார்.

ஹார்ஜிந்தர் சிங் அக்டோபரிலேயே இலங்கைக்கு வந்தவர். விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தை விடுவிக்கும் போது, தமது சகாக்கள் பலர் சாவதைக் கண்டிருக்கிறார். ஆயினும் அவருக்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் மீது வெறுப்பு இல்லை. பெரும்பாலான இந்திய ராணுவ வீரர்களின் நிலையும் இதுவேதான்.

யாழ்ப்பாணவாசிகளும் இந்திய வீரர்களைப் பற்றி நல்ல வார்த்தைகளையே கூறுகிறார்கள். ஆனால் புகார்களும் சில உண்டு. அவற்றில் முக்கியமானது, ''அடிக்கடி எங்கள் வீட்டைச் சோதனையிடுகிறார்கள். அது எங்களுக்குத் தொல்லையாக, நச்சரிப்பாக இருக்கிறது'' என்பதுதான்.



தமிழ் நாட்டிலிருந்து வந்த தொழில் நுணுக்க நிபுணர்கள், அமைதிப்படையினரின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் புதிய டெலிஃபோன் கம்பிகளைப் பொருத்துகிறார்கள்.

நான் மார்ச் இருபத்தேழாம் தேதி யாழ்ப்பாணம் சென்றேன். அங்கே நான்கு தினங்கள் இருந்தேன். பலதரப்பட்ட மக்களை, ராணுவ வீரர்களை, அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினேன். சாமானிய மக்களிடமும் பேசினேன். ஈழப் புலிகளிடம் அனுதாபம் உடையவர்களிடமும் உரையாடினேன். நகரைச் சுற்றிப் பார்த்ததுடன், இந்திய ராணுவத்தினர் பலரை விடுதலைப் புலிகள் கொன்று குவித்த இடமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் போயிருந்தேன். புறநகர் பகுதிகளான கோண்டாவில், உரும்பிறை ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்தேன். இவை அக்டோபர் மாதத்தில் பயங்கரப் போர்க்களமாக விளங்கிய பிரதேசங்கள்.

இன்று ஒரு லட்சத்து முப்பதாயிரம் மக்கள் தொகை கொண்ட யாழ்ப்பாண நகரை இந்திய அமைதிப்படைதான் நிர்வகித்து வருகிறது என்று கூறுவது தவறாகாது. விடுதலைப்புலிகளின் இயக்கத்துக்குப் பேராதரவு தந்த யாழ்ப்பாண தீபகர்ப்பம் முழுவதுமே இந்திய மேஜர் ஜெனரல் பாண்டேயின் கீழ்தான் இருக்கிறது. அவரை யாழ்ப்பாண நகரிலிருந்து இருபது கி.மீ. வடக்கே பலாலியில் சந்தித்தேன். நகர நிர்வாகம் பிரிகேடியர் கஹ்லான் வசம் உள்ளது. ஓர் அயல்நாட்டு நகரத்தின் நிர்வாகத்தை ஏற்று நடத்தும் முதல் இந்திய ராணுவ அதிகாரி இவர்தான்.

நான் யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்த மறுநாள் அங்குள்ள மக்கள் வங்கி, மூன்றாண்டுகளுக்கு முன் அதனிடம் மக்களால் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகளைத் திருப்பிக் கொடுக்க ஆரம்பித்தது. இந்த நகைகளைப் பாதுகாப்பு கருதி இந்நாள் வரை கொழும்புவில் கொண்டு போய் வைத்திருந்தார்கள். இந்திய அமைதிப் படைதான் இந்தப் பிரச்னையைக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் மூலம் ஈழ. அரசுக்கு நினைவூட்டியது. நகைகள் திரும்ப வினியோகிக்கப்படும் போது போதிய பாதுகாப்பு அளிப்பதாகவும் வாக்களித்தது. எனவே மார்ச் 28 முதல் நூறு நூறு பேர்களாக அழைத்துத் தங்க நகைகளை வங்கி திரும்பத் தந்தது.

மறுபடியும் பார்க்கப் போவதே இல்லை என்று நினைத்த அந்த தங்கத்தைத் தங்கள் கரங்களில் மீண்டும் காண, சில மக்கள் அழவே தொடங்கி விட்டார்கள்! ''தமிழர்கள் வாழ்க்கையில் தங்க நகை என்பது எவ்வளவு முக்கியமானது'' என்பதை நான் இப்போதுதான் நன்றாக உணர்ந்தேன் என்றார் பிரிகேடியர் கஹ்லான்.

மூன்று ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் திறந்திருந்த ஏழு வங்கிகளுக்குப் புறநகர்ப் பகுதிகளிலும், நகருக்குள் எட்டு வங்கிகளுக்கும் அமைதிப்படை பாதுகாப்பு அளித்து வருவதாகக் கஹ்லான் சொன்னார். ''யாழ்ப்பாணத்தில் இன்று வங்கிகள் செயல்படுகின்றன என்றால் அது அமைதிப்படையின் காரணமாகத்தான்'' என்றார். இவரை யாழ்ப்பாண நகர ''மேயர்'' என்று மக்கள் அன்புடனும் வேடிக்கையாகவும் குறிப்பிடுகிறார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து தபால்களை விமான நிலையத்துக்குக் கொண்டு போவதும் நகர டெலிஃபோன் நிலையத்தை நிர்வகிப்பதும் அமைதிப்படைதான்.

ஒவ்வொரு நாளும் அதிகாலையில் நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமியர் பள்ளிக் கூடம் கிளம்பிச் செல்வதைப் பார்க்கலாம். நீண்ட காலத்துக்குப் பிறகு பள்ளிகள் எண்பது சதவீத மாணவர்களுடன் இயங்குகின்றன. பாக்கி இருபது சதம் மாணவர்கள் கொழும்பு அல்லது சென்னைக்குப் போய் விட்டதாகச் சொன்னார்கள். பள்ளி மாணவர்கள் அமைதிப் படையினரைப் பார்த்துக் கையசைத்து முகமன் கூறுவதை அடிக்கடி காணலாம்! பத்தாம் வகுப்பு (''ஓ''லெவல்) பரீட்சைகள் இந்த ஆண்டு தாமதப்பட்டுப் போயின. அதைச் சீக்கிரம் நடத்துமாறு மாணவர்


களின் கோரிக்கை எழுந்துள்ளது. கால விரயத்தைத் தவிர்ப்பதில் இளைஞர்கள் குறியாக இருப்பதைக் காண மகிழ்ச்சியாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் போலீஸ் இல்லை. அந்த வேலையையும் அமைதிப்படையினரே செய்கின்றனர். ஆனால் இதில் அவர்களுக்குப் பயிற்சி தரப்படாததால் அவ்வளவு சிறப்பாகச் செயலாற்றுவதாகக் கூற முடியவில்லை. ஐம்பத்தொன்பது வயதான நெல்லைநாதன், "திருட்டுப் போனதாகப் புகார் தந்தால் உடனே அமைதிப்படை நடவடிக்கை எடுக்கிறது'' என்றார். ஆனால் இந்திராணி சிவகாட்சம் திருட்டுப் புரட்டுக்கள் அதிகரித்து வருவதாகப் புகார் செய்தார்.

சீக்கியப் பட்டாளத்தின் தலைவர் மேஜர் கோவிந்த சிங் ஸிஸோடியாவைச் சந்தித்தேன். மக்கள் தங்களிடையே எழும் சின்னச் சின்ன பூசல்களைத் தீர்த்து வைக்கக் கூட அமைதிப்படையை நாடுவதாக அவர் கூறினார். "நாங்கள் துரித நடவடிக்கை எடுப்போம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. அதனால் பிக்பாக்கெட் கேஸ் முதல் வாடகை பாக்கி தகராறு வரை பல பிரச்னைகள் எங்களைத் தேடி வருகின்றன'' என்றார். "நானே தினம் ஐந்தாறு வழக்குகளைத் தீர்த்து வைக்கிறேன். இரு தரப்பினரையும் அழைத்துப் பேசுகிறேன். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ஒரு முடிவுக்கு வந்து நண்பர்களாகத் திரும்பிப் போகச் செய்கிறேன்.'' இப்படி இவர் கூறிக் கொண்டிருக்கும் போதே இரண்டு வழக்குகள் வந்தன. ஒரு பெண்மணி தான் குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரர் மின்சாரம் உபயோகிக்கத் தன்னை அனுமதிப்பதில்லை என்று புகார் செய்தாள். இன்னொரு வழக்கு இரு நபர்களுக்கிடையே பத்தாயிரம் ரூபாய் தொடர்பாக எழுந்த பூசல்.

அமைதிப்படை பற்றிப் பல கதைகள் உலவி வருகின்றன. இவற்றில் பெரும்பாலானவற்றில் உண்மை கிடையாது என்றாலும் குற்றங்களே நடக்கவில்லை என்றும் கூறிவிட முடியாது. இந்திய ராணுவ அதிகாரிகள், நான்கு கற்பழிப்புச் சம்பவங்கள் நடந்திருப்பதை ஒப்புக் கொள்கிறார்கள். இவற்றில் சம்பந்தப்பட்ட அமைதிப்படை வீரர்கள் ராணுவக் கோர்ட்டில் நிறுத்தப்பட்டுத் தண்டனை பெற இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

சில சிப்பாய்கள் திருட்டுக் குற்றம், மோசமான நடத்தை, மற்றும் பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொண்டது ஆகியவற்றுக்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இங்குள்ள அமைதிப்படையினரின் எண்ணிக்கையுடன் ஒப்பு நோக்கும் போது, குற்றங்கள் மிகக் குறைவாகவே நடப்பதாகவும் பொதுவாக நமது வீரர்கள் கண்ணியமாகவும் இந்தியாவின் பெருமையை உயர்த்தும் வகையிலும்தான் நடந்து கொள்கிறார்



யாழ்ப்பாண மார்க்கெட் பகுதியில் வள்ளுவர் சிலை அருகே வங்கி ஒன்றுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சீக்கிய வீரர்கள்.

கள் என்றும் கூறலாம். அமைதிப்படையின் தமிழ் வீரர்களுக்கும் உள்ளூர்த் தமிழ்ப் பெண்களுக்கும் இடையே பெருமளவில் திருமணங்கள் நடப்பதாகப் பரப்பப்படுகிற செய்தியிலும் உண்மையில்லை.

''இந்திய வீரர்கள் செய்கிற சிறிய தவறுகளைக் கூடப் பெரிதாக்கிக் கொண்டு புகார் பண்ண மக்கள் என்னிடம் தினந்தோறும் வருகிறார்கள். அந்தப் புகார்களை விசாரித்து எச்சரிக்கிறேன்; அல்லது தேவைப்பட்டால் தண்டனை அளிக்கிறேன். மக்களுக்கு எங்களிடம் பயம் இருந்தால் இப்படி புகார் பண்ண முன் வருவார்களா? முன்பு ஸ்ரீலங்கா ராணுவம் இங்கு நிறுத்தி வைக்கப் பட்டிருந்த போது மக்கள் இப்படி புகார் பண்ணினார்களா?'' என்று ஓர் அதிகாரி என்னைக் கேட்டார்.

இது மட்டுமல்ல; இன்று யாழ்ப்பாணத்தில் அமைதிப்படையினர் ஆக்கிரமித்துள்ள வீடுகளுக்கும் இதர கட்டிடங்களுக்கும் அதன் சொந்தக்காரர்களுக்கு வாடகை தரப் படுகிறது. சொல்லப் போனால் ''வாடகையைக் கூட்டிக் கொடு'' என்று வேறு சொந்தக்காரர்கள் பேரம் பண்ண ஆரம்பித்திருக்கிறார்கள்! ஆனால் இதே வீடுகளை முன்பு விடுதலைப் புலிகள் ஆக்கிரமித்திருந்த போது யாராவது வாடகை பற்றிப் பேச்செடுக்கவும் முடிந்ததா? மாறாக விடுதலைப் புலிகளுக்கு மக்கள் வரியல்லவோ செலுத்திக் கொண்டிருந்தார்கள்! ஒரு நாளிதழை வாங்குவதென்றால் கூட வரி!

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் ரத்தச் சேமிப்பு வங்கி இன்று மறுபடி செயல்படத் தொடங்கியிருப்பது அமைதிப்படையின் முயற்சியால்தான். கர்னல் சத்யபாலன் சொன்னார்: ''அமைதிப்படையினர் ரத்த தானம் செய்திருப்பது மட்டுமல்ல; கோப்பை, தெரிபிள்ளை ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளைப் பழுது பார்த்து இயங்கச் செய்திருக்கின்றனர். யாழ்ப்பாண நகரில் மட்டும் இதுவரை 25,000 மக்களுக்கு அமைதிப்படை டாக்டர்கள் மருத்துவம் பார்த்திருக்கிறார்கள்!''

இளைஞரான ஒரு கடைக்காரர், ''வியாபாரம் முன்னைக்கிப்போது தேவலாம்'' என்றார் என்றாலும், வர்த்தக நடவடிக்கைகள் பெருக இன்னும் சில காலம் ஆகும். தங்கள் தொழிலகங்களும் பண்ணைகளும் விடுதலைப் புலிகளால் முன்பு கைப்பற்றப்பட்டது என்றும், இப்போது அமைதிப்படை அவற்றைத் திரும்பத் தந்து விட்டது என்றும் பலர் சொன்னார்கள்.

ஆனால், இவ்வாறெல்லாம் சொல்வதால் யாழ்ப்பாணம் சகஜ நிலைக்குத் திரும்பி விட்டதாகவோ அங்கு ஒரு பிரச்னையும் இல்லை என்பதாகவோ யாரும் எண்ணி விடக் கூடாது......

— எம். ஆர். நாராயண் சுவாமி.

ஏப்ரல் 7, 1988.

(அடுத்த இதழில் முடியும்)



உங்கள் குழந்தைக்கு ஊட்டுங்கள் காய்கறிகளின் சிறந்த சத்தூட்டத்தை!
முன்பே-பக்குவப்படுத்தப்பட்ட
:பாரெக்ஸ்®-வெஜ்
6 மாதம் முதல்
புதிய ஃபாரெக்ஸ்-வெஜ். இது, வைட்டமின் வளம் செறிந்த காய்கறிகளான காரட், தக்காளி மற்றும் பச்சைப் பயற்றின் இயற்கையான ஊட்டச்சத்துக்களைக் கொண்டதாகும்.
இது, நன்றாக, முன்பே - பக்குவப்படுத்தப்பட்டது. ஆகவே இது, குழந்தையின் மென்மையான வயிற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றதாகும்.
:பாரெக்ஸ்–சுவையுடன் வளரும் வழி
farex-veg

GX/41/203 TML

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களால் கவரப்பட்டு உங்கள் முதலீடுகளை இழந்து விடாதீர்கள்.

ஆயிரக்கணக்கானோர் நம்பகமற்ற முதலீடுகளில்
பணம்போட்டு தங்கள் சேமிப்புகளை இழந்திருக்கிறார்கள்.



நீங்கள் பாடுபட்டுத் தேடிய பணத்துக்கு நல்ல வருவாய் மற்றும்
முழுப் பாதுகாப்பு பெறுவதற்கு

பொதுத்துறை வங்கிகளின் சேமிப்புத் திட்டங்களில்

முதலீடு செய்யுங்கள்.

பணத்தை முதலீடு செய்யத்தூண்டும் வழிகள் எத்தனையோ இருந்து வருகின்றன. ஆனால், அவற்றில் சில ஏமாற்றக் கூடியவையாக இருக்கலாம். நீங்கள் பாடுபட்டுத் தேடிய பணத்துக்கு இந்த ஆபத்து தேவைதானா? பொதுத்துறை வங்கிகளில் உங்கள் பணத்துக்கு நல்ல வருவாய் கிடைப்பதோடு, முழுமையான பாதுகாப்பும் உள்ளது. மற்ற நன்மைகளையும் சற்றே கவனியுங்கள்:
• உறுதியான, அதுவும் காலத்தே கிடைக்கும் வருமானம். • வட்டி விகிதம் 10 சதவிகிதம் ஆனாலும், நீண்டகால மறுமுதலீட்டுத் திட்டங்களின்கீழ், 16.8 சதவிகிதம் வரை வருவாய் பெற வழியுள்ளது. • தேவைப்பட்டால், முதிர்வு காலத்துக்கு முன்பே, பணம் எடுக்க அனுமதிக்கப்படுகிறது. • ஆண்டுக்கு ரூ. 7,000 வரை கிடைக்கும் வட்டிக்கு வரிவிலக்கு உண்டு.
• இவை தவிர இன்னும் எத்தனையோ சேவைகள்—அனைத்தும் உங்களுக்காகவே. பொதுத்துறை வங்கிகளில் மறுமுதலீட்டுத் திட்டம், பிக்செட் டெபாசிட், ரெக்கரிங் டெபாசிட் போன்ற பல்வேறு இலாபகரமான டெபாசிட் திட்டங்கள் உள்ளன. இன்றே உங்கள் அருகாமையிலுள்ள பொதுத்துறை வங்கிகளின் ஏதாவதொரு கிளையை அணுகுங்கள்.

பொதுத்துறை
வங்கிகளின்
கூட்டு விளம்பரக் குழு.

பொதுத்துறை வங்கிகள்

எங்கும், என்றும் உங்கள் வாழ்வோடு இணைந்தவை.

செயலகம்: ஸ்டேட் பாங்க் ஆ:ப் இந்தியா பில்டிங்பொது ஜனத் தொடர்புப் பிரிவு, மத்திய அலுவலகம், பம்பாய் 400 021

28 உறுப்பினர் வங்கிகள்

- அலாகாபாத் பாங்க்
- ஆந்திரா பாங்க்
- பாங்க் ஆ:ப் பரோடா
- பாங்க் ஆ:ப் இந்தியா
- பாங்க் ஆ:ப் மகாராஷ்டிரா
- கனரா பாங்க்
- சென்ட்ரல் பாங்க் ஆ:ப் இந்தியா
- கார்பொரேஷன் பாங்க்
- தேனா பாங்க்
- இந்தியன் பாங்க்
- இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்
- நியூ பாங்க் ஆ:ப் இந்தியா
- ஓரியண்டல் பாங்க் ஆ:ப் காமர்ஸ்
- பஞ்சாப் நேஷனல் பாங்க்
- பஞ்சாப் & ஸிந்த் பாங்க்
- ஸ்டேட் பாங்க் ஆ:ப் இந்தியா
- ஸ்டேட் பாங்க் ஆ:ப் பிகானீர் & ஜெய்ப்பூர்
- ஸ்டேட் பாங்க் ஆ:ப் ஹைதராபாத்
- ஸ்டேட் பாங்க் ஆ:ப் இந்தூர்
- ஸ்டேட் பாங்க் ஆ:ப் மைசூர்
- ஸ்டேட் பாங்க் ஆ:ப் பாட்டியாலா
- ஸ்டேட் பாங்க் ஆ:ப் சௌராஷ்டிரா
- ஸ்டேட் பாங்க் ஆ:ப் திருவிதாங்கூர்
- ஸிண்டிகேட் பாங்க்
- யூனியன் பாங்க் ஆ:ப் இந்தியா
- யுனைடெட் பாங்க் ஆ:ப் இந்தியா
- யூகோ பாங்க்
- விஜயா பாங்க்

Imageads-JPC-87335 TAM



கண் சிமிட்டும் நேரம்

இருட்டு. இடி. மழை. மின்னல். தொப்பியும், கூலிங் கண்ணாடியும் அணிந்த கார்த்திக். கையில் சின்ன சூட்கேஸ். பார்வையில் பழி. அவர் கையில் உறை அவிழ்ந்த பளப்பளா கத்தி — என்று எடுத்தவுடனேயே நாற்காலி முனைக்கு இழுத்து விடுகிறார்கள்.

யாரைக் கொலை செய்ய வேண்டுமென்று புறப்பட்டு வந்தாரோ, அந்த டாக்டர் பெண் மணியின் வீட்டில் அவர் பராமரிப்பிலேயே அம்னீஷியா மறதியுடன் கார்த்திக் தங்க வேண்டியிருக்கிறது. டாக்டருக்கும் நோய் பிடிக்கிறது — காதல் நோய். அம்னீஷியா குணமாகி விட்டால் அம்பிகாவிற்கே ஆபத்து — என்று தெரியாமல் அவர் குணப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்க — "யோவ், நிறுத்துங்கய்யா விட்டா முழுக் கதையும் சொல்லிடுவீங்க போல இருக்கே" என்று டைரக்டர் மென்னியைப் பிடிப்ப தால் மற்ற விஷயங்களைப் பார்ப்போம்.

கதையில் சஸ்பென்ஸ் வைத்து அழுத்த மாக முடிச்சுப் போட்ட பின், அதைச் சிக்கல் விழாமல் அவிழ்ப்பதில் நிதானம் தெரிகிறது. சாதாரண மசாலாக்களிலிருந்து விடுபட முடியாத கவலை — டூயட்கள், சண்டைக் காட்சிகள், கதைக்குத் தொடர்பில்லாத நகைச்சுவை டிராக் இவற்றில் — பிரதி பலிக்கிறது.

எஸ். எஸ். சந்திரனும், செந்திலும் நாய் திருடி, நாய் விற்று, நாய் பிஸினஸ் பண்ணும் ஹாஸ்யம் பென்ச் தட்டுபவர்களுக்கு உற்சாகமாயிருக்கும்.

துடிப்பான சம்பவங்களுக்கு, துடிப்பான பின்னணி இசை. உழைப்பு: வி. எஸ். நரசிம்மன்.

இன்ஸ்பெக்டராக அறிமுகமாகும் (தயாரிப்பாளரும் அவரே) சரத்குமாருக்குக் கல்லில் வார்த்த முகம். மனிதர் சிரிக்கவே மாட்டார் போலிருக்கிறது. ஆனால் சண்டைக் காட்சிகளில் சுறுசுறு.

ஆவேசம், வெறி எட்செட்ராவைக் காட்டுவதில் கார்த்திக் தேறி விட்டார். ஆனால் அம்னீஷியா காலகட்டத்தில் அப்பாவித்தனத்தில் புதுமை எதுவும் சேர்க்கவில்லை என்பது வருத்தம்தான்.


பயப்பட வேண்டுமென்றால் — அம்பிகாவிடம் தான் கற்றுக் கொள்ள வேண்டும். எத்தனை அலறல்கள்! எத்தனை முகபாவங்கள்! ஜே!

கடைசி பதினைந்து நிமிடங்கள் நாற்காலி முனையிலிருந்து இறக்கியே விடுகிற சுறுசுறுப்பு, பரபரப்பு. டைரக்டர், காமிராமேன், இசையமைப்பாளர் மூன்று பேரும் ஏராள வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுகிறார்கள்.

டைரக்டர் கலைவாணன் கண்ணதாசனுக்குத் தைரியமாக வரவேற்புச் சொல்லலாம்!

— ஜெயமன்மதன்





தீபா
வைஜயந்தி
ராதா
ஸ்ரீதேவி
ராஜீவ் மஹாராஜ் கீ ஜெய்!
மறைமலை நகர் இ-காங்கிரஸ் மகாநாட்டிற்கு சினிமா'ஸ்டார்கள்' தாம் பிரச்சாரக்குழு!
சவால்!.. அமிதாபுக்கு!
வி.பி.சிங்
அலகாபாத் மக்கள்
அலகாபாத்
தொகுதி
ராஜீவ்
போட்டி போடய்யா!
அமிதாப்
குடிக்கத் தண்ணி கொடுக்க மொதல்ல ஒத்துங்க!
ஹெக்டே
கர்நாடகா
தெலுங்கு கங்கை
குடிநீர்
சென்னை வாசி



கல்கி

1988 மே 1
மலர் 46 இதழ் 40
விபவ சித்திரை 19



மந்திர ஜால நகர்!

மறைமலை நகர் மந்திர ஜால நகராக உருமாறியிருக்கிறது. கட்சிக்கும் ஆட்சிக்கும் வித்தியாசமின்றிப் பல காரியங்கள் நடந்திருக்கின்றன. அதிகார துஷ்பிரயோகம் நிறையவே நிகழ்ந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சியே இங்கே ஆட்சியில் இருந்தாலும் காங்கிரஸ் கட்சி மாநாட்டுக்காக அரசு இத்தனை சலுகைகளைக் காட்டுவதோ, போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்வதோ, பணம் செலவிடுவதோ குற்றமாகும். இங்கு நடப்பதோ ஜனாதிபதி ஆட்சி. எனவே, தமிழக அரசின் போக்கு மன்னிக்க முடியாத பெரும் குற்றமாகிறது.

ஆளுனர் அறியாதது அல்ல. அவர் எளிமையையும் சுறுசுறுப்பையும் விரும்புகிறவர். விமான நிலையத்திலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டதை வெறுத்தவர். மறுநாள் பதவி ஏற்பு வைபவ ஊர்வலத்தை ரத்து செய்து, தமக்காக நகரின் எந்தப் பகுதியிலும் போக்குவரத்து தடைப்படக் கூடாது என்று உத்தரவிட்டவர். அதிகாரத்தில் உள்ள குறுகிய காலத்தில் தமிழகத்தின் முன்னேற்றத்துக்கு முடிந்தவரை பாடுபட்டுவிடக் கருதி, அரசின் எல்லாத் துறையினரையும் எல்லாத் தரப்பினரையும் முடுக்கி விட்டிருப்பவர். கிண்டி தொழிற்பேட்டையில் சிறு தொழில் அதிபர்கள் விசேஷச் சலுகைகளைக் கேட்டபோது சீறியவர். சிறு தவறிழைத்த தம் மகன், தண்டனைக்குள்ளாகி அபராதம் செலுத்திவிட்டு வந்தது கண்டு மகிழ்ந்தவர். இதனாலெல்லாம் அலெக்ஸாண்டர் தி க்ரேட்டாக நமது மதிப்பில் உயர்ந்தவர். இன்று மறைமலை நகரில் நடக்கும் காரியங்களால் அவர் நமது கணிப்பில் சாணளவு சறுக்கி விழுந்திருக்கிறார் என்றாலும், அவருடைய ஒப்புதலுடனேயே அங்கு எல்லாக் காரியங்களும் நடப்பதாகவும், நாம் கருதுவதற்கில்லை. மறைமலை நகர் வட்டாரத்தில் பலர் துன்பத்துக்கு உள்ளாக நேர்ந்திருப்பதை உணர்ந்து அவர் விசனித்திருக்கிறார். அவரை லட்சியம் பண்ணாமல் தில்லி, காரியங்களை நடத்திக் கொண்டு போவதாக அனுமானிக்க இடமிருக்கிறது.

பிரதமரின் பாதுகாப்புக்குத் தக்க ஏற்பாடுகளை அவசியம் செய்ய வேண்டியதுதான். நாளை, தப்பித் தவறி ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் பிரதமரின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக உள்ளவர்களைத் தேசம் மன்னிக்காது. ஆனால் பாதுகாப்பு என்ற பெயரில் படாடோபத்துக்குத் துணை நிற்கக் கூடாது. மக்களை இதுபோன்ற செட் — அப்புக்களால் ஏமாற்ற முடியாது. அவர்கள் சினிமா செட்டிங்குகளை நிறையவே பார்த்தவர்கள். அடக்கமும் எளிமையும்தான் நல்லாட்சி மலரும் என்பதற்கு முக்கிய அடையாளங்கள். 'மற்ற கட்சிகளுக்கும் இதுபோன்ற வசதிகள், கேட்டால் செய்து தரப்படும்' என்ற தமிழக அரசின் விளக்கம், மாய்மாலமே. இருபது லட்சம், இருபத்தைந்து லட்சம் என்று வேறு எந்தக் கட்சியாலும் பணம் கட்டவும் முடியாது; அப்படியே கட்டினாலும் இத்தனை வசதிகளை அரசு செய்யும் தராது.

இந்தப் பெரும் குறை ஒருபக்கமிருந்தாலும் காங்கிரஸ் மாநாடு வெற்றிகரமாக நடந்து, நல்ல முடிவுகளுக்கு வந்தால், வாழ்த்தத் தமிழகம் தயங்காது. குறிப்பாக, எம்.ஜி.ஆர். புகழில் குளிர்காயும் இரு அணிகளில் எதனுடனும் கூட்டு இல்லை என்று திட்டவட்டமாகக் கூறி, தேர்தலைச் சந்திக்க ஒரு செயல் திட்டத்தையும் மக்கள் முன் பரிசீலனைக்கு வைக்கச் சிறந்ததொரு தேர்தல் அறிக்கையையும் வரவேற்கத் தக்கக் கொள்கை விளக்கத்தையும் உருவாக்கினால் இம்மாநாடு பயனுடையதாக விளங்கும். அப்போது ஜெ — ஜா அணிகள் ஓரம் கட்டப்பட்டு, மெய்யான திராவிட பாரம்பரியத்துக்கும் உண்மையான தேசிய உணர்வுக்கும் இடையில் நடக்கும் போட்டியாகத் தேர்தல் விளங்கும். யார் வெற்றி பெற்றாலும் மற்றொரு கட்சி பலமான எதிர்க்கட்சியாக விளங்கி, ஜனநாயகம் தழைக்கவும், தமிழகம் வளம் பெறவும் உதவலாம். இது ஓர் எதிர்பார்ப்பு.

மறைமலை நகர் வழியே மாநாடு நடக்கும் சமயத்தில் ஊர்வலம் விடப் போவதாகத் தி. மு. க. அறிவித்துள்ளது. ஜனநாயகத்தில் வாதங்கள் மோதலாமே தவிர மண்டைகள் மோதிக் கொள்ளக் கூடாது. கலைஞரும் அறிஞருமான கருணாநிதி, இதுபோன்ற அசம்பாவிதங்களைத் தவிர்த்து விடுவார் என்றே கருதுகிறோம். இது மற்றோர் எதிர்பார்ப்பு.

இந்த இதழ் வாசகர்களின் கரங்களை அலங்கரிக்கும்போது இந்த இரு நம்பிக்கைகளும் பலித்திருந்தால் நாமென்ன, தமிழகமே மகிழும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



° மஹிலா மண்டலி உறுப்பினர்களுடன் பரமேஸ்வர்

அணுசக்தி ஆராய்ச்சியில் இறங்கி அமெரிக்காவில் டாக்டர் பட்டம் பெற்றவர் பரமேஸ்வர். அந்தப் பல்கலைக்கழகத்தின் அணுசக்தித் துறைப் பேராசிரியரைச் சந்தித்துத் தாம் இந்தியாவிற்குக் குறிப்பாகத் தம் கிராமத்திற்குத் திரும்ப விரும்புவதாகத் தெரிவித்தார். அதிர்ந்து போனார் பேராசிரியர். ''என்ன முட்டாள்தனம் இது! ஏன் இந்தச் சொர்க்க பூமியை விட்டுப் போகிறாய்? உனக்கு இங்கே மூன்று நிறுவனங்கள் வேலை தரப் போட்டி போடுகின்றன தெரியுமா...?'' என்று கேட்டார்.

அது உண்மைதான். அவற்றுள் ஒரு நிறுவனம் வெற்றுக் காசோலையை நீட்டி, பரமேஸ்வர் விரும்பிய தொகையை அவரே எழுதிக் கொள்ளலாம் என்று கூடக் கூறியிருந்தது!

ஆனால் பரமேஸ்வருக்குத் தாய்நாடு திரும்பி, தமது கிராமப் பகுதி மக்களின் முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டும் என்ற தாகமே அதிகமாயிருந்தது. ''எனக்கு என் கிராமத்தில்தான் மன நிம்மதி கிடைக்கும்'' என்று அவர் பேராசிரியரிடம் சொன்னார்.

அடுத்த சில மணி நேரங்களில் இந்தியாவுக்கு விமானப் பயணம் மேற்கொண்டிருந்

பயிற்சி முகாமினால் பயன்பெற்ற சிலர்...

பி.ஸி.டி.யின் பயிற்சி முகாம்கள் இருபத்தோரு நாட்கள் நடைபெறுகின்றன. எல்லாம் வாய்மொழிப் பயிற்சிதான்.

பயிற்சி முகாம்களால் பயனடைந்த சிலரைச் சந்தித்தேன்.

யங்கையா என்ற மலைச்சாதிச் சிறுவன்.. இவன் சார்ந்திருக்கும் மலைப் பகுதியில் பசு உண்டு. ஆனால் பால் கிடையாது. ஏன்? பசுவிடமிருந்து பாலைக் கறந்து பயன்படுத்த வேண்டும் என்ற சிறிய விஷயம் கூட அவர்களுக்குத் தெரியவில்லை!

இப் பயிற்சி முகாமில் பதினைந்து மலைச் சாதி இளைஞர்கள் பயிற்சி முடிந்து போயிருக்கிறார்கள். யார் கண்டது, யங்கையா பால் பண்ணை கூட வைக்கலாம்!

அந்தக் கிராமத்தை ஒரு வீரியம் மிக்க சிற்றூர். அண்டை அசலிலிருந்து பிரித்து

"நாம் ஒவ்வொருவருமே காந்திதான்!"

தார் பரமேஸ்வர். தம் மனைவிக்கு நான்கு பக்கங்களில் தம் விருப்பத்தை எழுதியிருந்தார். அதற்குப் பதிலும் வந்திருந்தது. கணவரின் கருத்தைத் தாம் ஆமோதிப்பதாகவும், அவர் கொள்கைதான் முற்றிலும் சரியானது என்றும் பதில் எழுதியிருந்தார் மனைவி. இது அளவற்ற மகிழ்ச்சியை அளித்ததுடன் மனசில் உரத்தையும் ஏற்றியது பரமேஸ்வருக்கு.

ஆந்திர மாநிலத்தில் தமது சொந்தக் கிராமமான திமிலிக்குச் சென்றார். முதல் தீர்மானம் அங்கே ஒரு பள்ளிக் கூடம் கட்ட வேண்டும் என்பது. தமது அமெரிக்கச் சேமிப்பை அப்படியே அதற்காக எடுத்து வைத்தார். பணம் போதவில்லை. கிராம மக்களிடம் நிதி கேட்டார். அவர்கள் அவரை அலட்சியமாகப் பார்த்தார்கள். ஊருக்குப் பெரிய மனிதர் ஒருவர் — 'ஐயா சாமி தர்மம்' என்றால் முகத்தைத் திருப்பிக் கொள்பவர்; 'ஐயா, ஆயிரம் ரூபாய் கடன் வேண்டும்' என்றால் உடனே ஜிப்பா இடது பையிலிருந்து பணமும், வலது பையிலிருந்து புரோ நோட்டுமாக எடுப்பவர் — அவர் பரமேஸ்வரிடம் வந்து, ''நிதி வசூலிக்கிறாயே, எவ்வளவு தொகை வேண்டும்?'' என்று கேட்டார்.

''நாற்பதாயிரம் ரூபாயாவது வேண்டும்'' என்றார் பரமேஸ்வர்.

''அவ்வளவு பணம் சேர்ந்த பிறகு நீ எங்காவது ஓடி விட்டால்?''

''இதோ பாருங்கள்; அமெரிக்காவில் எனக்கு மாதம் இரண்டாயிரம் டாலர் சம்பளம் தர முன் வந்தார்கள். இப்போதைய (1962) மதிப்புப்படி இருபதாயிரம் ரூபாய். பள்ளிக்கூடம் கட்ட நான் கேட்கும் தொகை, என்னுடைய இரண்டு மாத சம்பளத்துக்குச் சமம். ஓடக் கூடியவனாக இருந்தால், அவ்வளவு பெருந்தொகை சம்பளத்தை விட்டு விட்டு நான் ஓடி வந்திருக்க மாட்டேன்.''

அவ்வளவுதான். அந்த மனிதர் பதில்



• பயிற்சி முகாமில் பெண்கள்



* பரமேஸ்வர்

பேசாமல் ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்தார். அவரே கொடுத்தது தெரிந்ததும், மளமளவென்று கிராம மக்கள் எல்லோரும் தத்தமது பங்குக்கு நன்கொடை தர, நிதி பெருகியது.

பள்ளி உருவாகியது — பகவதுலா பள்ளிக்கூடம்!

தலைமை ஆசிரியர் பொறுப்பு ஏற்றுக் கொண்ட ஏழாவது நாளில் மாவட்ட கலெக்டர் திமிலி கிராமத்திற்கும் மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களுக்கும் வருகிறார் என்பதைத் தெரிந்து கொண்டார் பரமேஸ்வர். கலெக்டருக்குக் கடிதம் எழுதினார்.

திமிலிக்கு வந்த கலெக்டர், ''எங்கே உங்கள் அமெரிக்கப் பட்டதாரி?'' என்று கேட்டபோது ஊரே திமிலோகப்பட்டது. 'கூப்பிடு, கூப்பிடு அவரை' என்று எல்லோரும் பரமேஸ்வரைத் தேடி ஓடினார்கள். அவரை அழைத்துச் சென்று கலெக்டர் முன் நிறுத்தினார்கள். நின்ற நிலையிலேயே தாம் கிராமத்திற்கு வந்திருக்கும் நோக்கம், தமது கொள்கைகள், அதற்குக் கலெக்டர் அளிக்கக் கூடிய ஆதரவு எல்லாவற்றைப் பற்றியும் கூறினார் பரமேஸ்வர்.

கலெக்டர் நின்று கொண்டே ஒரு தனி மனிதரிடம் நாற்பது நிமிடங்கள் பேசியதைக் கண்டு கிராமமே அதிசயித்தது. பரமேஸ்வரிடம் அவர்களுக்கு மதிப்பு உயர்ந்தது.

அதே சமயம் அவரும் கிராமத்து மக்களின் புத்திசாலித்தனத்தையும், அவர்களது ஆர்வத்தையும் கவனித்து வந்தார். அவர்களிடம் உள்ள சக்தி, முறையாக, நேர் வழியில் திசை திருப்பி விடப்பட்டால் அது அற்புதமான விளைவுகளைத் தரும் என்று கணித்தார்.

''நாம் ஒவ்வொருவரும் ஒரு காந்திதான். நமக்குள் இருக்கும் அளப்பறிய சக்தி நமக்கே தெரியாமல் இருப்பது விந்தைதான். அலுவலக வேலை, சம்பளம், அதன் மூலம் குடும்ப நிர்வாகம் என்ற இயந்திரத்தனத்திலிருந்து விடுபட்டுச் சுற்று முற்றும் நோக்கினால் எத்தனையோ காரியங்கள் நம்மால் சாதிக்கப்படக் காத்திருப்பதைக் காணலாம். கிராமப்புறங்களுக்கு வந்து சேருங்கள். விவரம் தெரிந்தவர்கள், படித்தவர்கள், கிராமத்து மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துங்கள். புதிய இந்தியாவை நீங்கள் உருவாக்குவீர்கள்'' என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகிறார் பரமேஸ்வர்.

கிராமப்புறங்களில் மனித வளத்தை முறைப்படுத்த அவர் மேலும் சில திட்டங்கள் தீட்டினார். மத்திய அரசின் கிராமப்புற வளர்ச்சித் திட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டார். ஆந்திர அரசுடன் தொடர்பு கொண்டார். பஞ்சதர்லா என்ற மலைச்சரிவுப் பகுதியில் தமக்குக் கொஞ்சம் நிலம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். அதில் விவசாயம் செய்து, கிராமப்புற மக்களுக்கு உதவ முடியும் என்றும் கூறினார். அரசு அதிகாரிகள் நகைத்தார்கள். ''போயும்

ஒதுக்கியிருந்தது. பொதுவாகவே அந்தக் கிராமத்தை விட்டுப் பெண்கள் வெளியே வருவதில்லை. ஆண்கள் மட்டும் விவசாய வியாபாரம் முன்னிட்டு வெளி கிராமங்களுக்குப் போய் வருவார்கள். அதுவும் மழைக் காலத்தில் சில சமயம் கழுத்து வரையில் நீரில் இறங்கி நடந்தே ஆற்றைக் கடந்து செல்ல வேண்டியிருக்கும்...

அக்கரைக்குப் போய் வரும் ஆண்களில் சிலர், பிற கிராமங்களில் திரம்படச் செயல்பட்டு வரும் பகவதுலா சாரிடபிள் டிரஸ்டின் மஹிலா மண்டலியைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள். அதைக் கேட்ட நாராயணம்மா தம் கிராமத்திலும் அது போன்ற ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கிராம மக்களின் மேம்பாட்டுக்கு வழிவகை செய்ய வேண்டும் என்று விரும்பினார்.

மழையால் சிற்றாறு புத்துணர்வு பெற்று ஓடிக் கொண்டிருந்தது. அதைக் கடக்க முயன்றார் நாராயணம்மா. பாதி தூரம் வரை போனவர் தம் கழுத்துக்கும் மேலாகத் தண்ணீர் மட்டம் வருவது கண்டு பயந்து கத்தினார். எதிர்க் கரையில் இருந்த சிலர் அவரைக் காப்பாற்ற ஓடி வந்தார்கள்.

உதவிக்கு வந்தவர்கள் நாராயணம்மாவை அவருடைய கிராமத்திற்கே அழைத்துச் செல்ல முயன்ற போது பிடிவாதமாக எதிர்ப்புறமே போக வேண்டும் என்று வாதிட்டு, பஞ்சதர்லாவுக்கு வந்து டாக்டர் பரமேஸ்வர் தலைமையில் இயங்கி வரும் மஹிலா மண்டலி பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டு மீண்டும் தம் கிராமத்திற்குச் சென்று அங்கும் ஒரு மாதர் சங்கம் ஆரம்பித்தார்.

சங்கத்தின் நோக்கங்களில் 'சேமிப்பு' ஒரு முக்கிய அம்சமாகும். ஒவ்வொருவரிடமிருந்

போயும் அந்தப் பகுதியிலா கேட்கிறீர்கள்? வெறும் பாறைகளும் கற்களும் நிறைந்த பகுதி அது. அதன்மேல் பகுதி மணல்கூட விவசாயத்திற்கு ஏற்றதல்ல'' என்றார்கள்.

பரமேஸ்வர் உறுதியாகச் சொன்னார்: ''இல்லை; இயற்கையைப் பழிக்காதீர்கள். அது என்றுமே மனிதனை ஏமாற்றுவதில்லை.''

''பரமேஸ்வர்! அந்த நிலப்பகுதி தரிசானது. உங்கள் படிப்பையும் அறிவையும் சிறப்பான முறையில் பயன்படுத்த ஏற்ற சத்து நிறைந்த நிலப்பகுதியைத் தருகிறோம்.''

''வேண்டாம். ஒன்றுக்கும் உதவாது என்று கைவிடப்பட்ட பகுதியிலும், பொக்கிஷம் இருக்கிறது என்று நிரூபிக்க இயலாவிட்டால் என் படிப்பினால் பயன் என்ன...?''

பரமேஸ்வருக்கு அவர் கோரிய பகுதி இருபது வருடக் குத்தகைக்குக் கிடைத்தது.

ஆரம்பத்தில் தோண்டிய போது எதிர்ப்பட்டவை பாறைகள்தான். கடின உழைப்பு தேவைப்பட்டது. ஆனால் கிராமத்தினரின் ஆதரவும், ஒத்துழைப்பும் அவருக்குக் கிடைத்தன. தோண்டத் தோண்டப் பெருகி வந்த சிறிய பெரிய பாறைகளை வைத்தே அந்த நிலத்திற்குச் சுற்றுச் சுவர் அமைத்து விட்டார்கள்.

இன்று —

பஞ்சதர்லாவில் முந்திரித் தோப்புகளும், மா, பலா, வாழை, தென்னை, பப்பாளி என்று முற்றிலும் பயன்தரத்தக்க 120 வகைத் தாவரங்களும் ஆண்டுதோறும் சுமார் மூன்று லட்ச ரூபாய் வருமானம் பெற்றுத் தந்து கொண்டிருக்கின்றன. இதில் முந்திரி மட்டும் ஒன்றரை லட்சம் தருகிறது!

மண்வள மேம்பாடு ஒரு பக்கம் இருக்கட்டும். மனிதவளம்?

பரமேஸ்வர் இதற்குத்தான் தீவிரமாக முயன்று வருகிறார் இப்போது. ''நாம் ஓர் எரிமலை மீது உட்கார்ந்திருப்பது போல இருக்கிறோம். இளைஞர்கள்— குறிப்பாகக் கிராமப்புற யுவதிகளும் இளைஞர்களும் ஓர் இலக்கு இல்லாமல், போகும் திசை தெரியாமல் எங்கோ போய்க் கொண்டிருக்கிறார்கள். எதிர்கால இந்தியாவின் கதி என்ன வாகும் என்று நினைக்கவே பயமாக இருக்கிறது. இந்த இளம் உள்ளங்களை நல்ல பாதையில் திருப்ப வேண்டும். அவர்களுடைய சக்தியை அவர்களே பரிபூரணமாக உணரச் செய்ய வேண்டும்'' என்று கூறுப



வர் கிராமப்புறங்களில் 'மஹிலா மண்டலி' என்ற பெண்கள் சங்கங்களை பகவதுலா சாரிடபிள் ட்ரஸ்ட்டின் மேற்பார்வையில் நடத்தி வருகிறார். இச் சங்கத்து மாதர்கள், தத்தமது கிராமங்களை வளம் பெறச் செய்கிறார்கள். அவர்களில் சிலரோ அல்லது அவர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பும் வேறு கிராமத்தவர்களோ, பஞ்சதர்லாவில் நடைபெறும் பயிற்சி முகாமுக்கு வந்து பயிற்சி பெறுகிறார்கள். மத்திய அரசின் கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சிக்கு நிதி ஒதுக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சிக்குப் படிப்பு முக்கியமில்லை; ஆர்வம்தான் முக்கியம். பி.ஏ.,

• பெண்கள் திரிவிக்கும் ரெனி கள்



• பயிற்சியில் ஆடல் பாடலும் உண்டு.



பி.எட்., படித்தவர் தொடங்கி முதல் வகுப்பு மட்டுமே படித்தவரும் பயிற்சி பெறுகிறார்கள். கையெழுத்து கூடப் போடத் தெரியாமல் வருபவர்கள் பலர்.

கிராம மக்கள் தரிசாக விட்டுவிட்ட நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு அந் நிலத்தை விவசாயத்துக்குப் பயன்படக் கூடியதாக மாற்றும் பணியையும் பகவதுலா அறக்கட்டளை செய்கிறது. இத் திட்டம், பஞ்சதர்லா, கோகிவாடா, ஹரிபுரம், கோர்லே தர்மாவரம் என்று நான்கு பகுதிகளில் செம்மையாகச் செயல்பட்டு நற்பலன்களை அளித்து வருகிறது. தொழிற் கல்விப் பயிற்சி நிலையம் ஒன்றினையும் எல்லமஞ்சலி கிராமத்தில் துவக்கியிருக்கிறார்கள். பகவதுலா டிரஸ்டின் ஆதரவில் ரேஷன் கடைகளை அந்தந்த கிராமத்துப் பெண்களே நிர்வகிக்கிறார்கள்! மருத்துவ உதவி அளிக்க அலோபதி, ஆயுர்வேத, ஹோமியோபதி மருத்துவர்கள் தினமும் கிராமம் கிராமமாகச் சுற்றி வருகிறார்கள்.

திமிலி மற்றும் அதை அடுத்துள்ள சுமார் ஏழெட்டு கிராமங்களைச் சுற்றிப் பார்க்கும் போது, பரமேஸ்வரின் மன உறுதி உருவாக்கிக் கொடுத்திருக்கும் அற்புதங்கள் யாரையுமே பிரமிப்பில் ஆழ்த்தும்.

விடைபெறும் போது அவரிடம் கேட்டேன்: ''பஞ்சதர்லாவை இருபது ஆண்டுகளுக்கு 'லீஸ்' எடுத்திருக்கிறீர்கள். இப்போதே பத்து வருடங்கள் முடிந்து விட்டன. மீதி பத்து வருடங்கள் கழித்து அரசு இந் நிலத்தைப் பிடுங்கிக் கொண்டால்?''

''எடுத்துக் கொள்ளட்டுமே. வேறு யாராவது கைவிட்ட 'தரிசு' நிலம் இருக்காதா? அதனுடன் போய் உறவு வைத்துக் கொள்கிறேன்.'' என்று கூறிச் சிரித்தார்.

ஒவ்வொருவரும் பங்குதாரர்

கோர்லே தர்மாவரம் என்ற கிராமத்து மக்களுக்கு வம்சா வழியாகச் சொந்தமான நிலம் சுமார் ஐம்பது ஏக்கர்கள். ஆனால் சரியாகப் பராமரிக்கப்படாததால் அந்நிலம் தரிசானது. அதனைக் கொடிய விலங்குகள் தங்களுடைய இருப்பிடமாக்கிக் கொண்டன. கிராமத்துப் பெண்கள் சிலரும், வயது முதிர்ந்த ஆண்களும் வேதனையடைந்தார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்னால் பகவதுலா சாரிடபின் டிரஸ்ட் (பி.ஸி.டி.) நிறுவனம், பஞ்சதர்லாவில் தரிசு நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து வளம் கொழிக்கும் நிலமாக மாற்றியதை அறிந்து, அந்த டிரஸ்டை அணுகினார்கள்.

இன் முகத்துடன் அவர்களுடைய குறையைக் கேட்டது அறக்கட்டளை. நிலத்தைப் பண்படுத்துவதாகப் பொறுப்பு மேற்கொண்டது. ஆனால், கவனித்துக் கொள்ள டிரஸ்ட் இருக்கும் போது நமக்கென்ன வேலை என்று கிராமத்தார் அலட்சியமாக ஒதுங்கி விடக் கூடாது அல்லவா?

அதனால் பி. ஸி. டி. ஓர் உபாயம் செய்தது. அதன்

படங்கள், கட்டுரை: **பிரபு சங்கர்**

தும் பணம் திரட்டி நிதி ஏற்படுத்தி, தேவைப்பட்டோருக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுத்து, திரும்பப் பெற்று, வெற்றிகரமாக அச் சேமிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தினார் நாராயணம்மா. பணம் கொஞ்சம் சேர்ந்த பிறகு அவர் செய்த முதல் வேலை — சிற்றாறுக்குக் குறுக்காக ஒரு தற்காலிகப் பாலம் அமைத்ததுதான்!

பவானிக்கு வயது பன்னிரண்டுதான். ஒன்றாம் வகுப்புதான் படித்திருக்கிறாள். மாவிடு பாலம் கிராமத்தைச் சேர்ந்த அவள், தன் கிராம மஹிலா மண்டலி தலைவியிடமும், கிராமப் பெரியவர்களிடமும் சொல்லிப் பயிற்சி முகாமுக்கு வந்தாள்.

இங்கே பதினெட்டு வயதுக்குட்பட்டவர்களைப் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்வதில்லை என்று ஒரு விதி.

''எனக்கும், நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் மற்ற பயிற்சியாளர்களுக்கும் ஒரு சோதனை வையுங்கள். எங்கள் கிராமத்தில் இருக்கும் பிரச்னைகள், அவைகளில் சிலவற்றிற்கு நான் கொடுக்கும் தீர்வுகளைக் கேளுங்கள். நான் சொல்வதை விடப் பிறர் சாமர்த்தியமாகப் பதிலளித்தார்கள் என்றால், நான் விலகிக் கொள்கிறேன்'' என்று சவால் விட்டாள்.

இந்த மன உறுதியே அவளுக்குப் பயிற்சி முகாமில் சேர வழி வகுத்துத் தந்து விட்டது.

பயிற்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக, விவசாய நிபுணர்கள், வங்கி அதிகாரிகள் போன்றோர் பயிற்சி முகாமிற்கு வந்து விளக்கங்கள் தந்து, சில செயல்முறைகளும் கற்றுக் கொடுத்தார்கள். அச் சமயத்தில் பவானி, வங்கி அதிகாரிகளிடம் கேட்ட கேள்விகள்:

''பாங்க்கில் கடன் எவ்வளவு கொடுக்கிறீர்கள்?''

படி கிராமத்தார் ஒவ்வொருவரும் அந்நிலத்தின் பங்குதாரர் ஆக்கப்பட்டார். எனவே எல்லோருமே முழு மனத்துடன் நிலத்தைப் பண்படுத்தும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

இப்போது கோர்லே தர்மாவரம் கிராமத்தில் மக்கள் ஒற்றுமையாகப் பணியாற்றிச் சுகமாக வாழ்ந்து வருகிறார்கள். இக்கிராமத்தில், பி.எஸ்.டி.யின் உதவியுடன் தோற்றுவிக்கப்பட்ட மஹிலா மண்டலி (மாதர் சங்கம்)யை ஜவணம்மா, வீரபாலம்மா என்ற இரு பெண்கள்தான் தாசில்தார் அலுவலகம் சென்று பதிவு செய்து வந்தார்கள்!

இந்த மண்டலியின் முயற்சி காரணமாக, இந்தக் கிராமத்தில் இப்போது யாருமே குடிப்பதில்லை! ஆண்களை இப்பழக்கத்திற்கு அடிமைப்படுத்த, ஒரு பெண் தினமும் வேற்று ஊரிலிருந்து பானையில் கள், சாராயம் கொண்டு வந்து விற்று வந்தாள். கிராமத்துப் பெண்கள் பார்த்தார்கள். அவள் வருவதால்தானே இவர்கள் குடிக்கிறார்கள்? அவளை வரவிடாமல் [illegible] வளவு தான். அவ [illegible] ண்டு போய்கள். சாரா [illegible] களை உடைத்து எறிந்து அவளையும் [illegible] அனுப்பி வைத்தார்கள். அதற்குப் பிறகு



இன்று வளம் கொழிக்கிறது...

அந்தப் பெண் அந்தக் கிராமப் பட்டியிலிருந்து வேறு எந்தக் கிராமத்திற்குமே போக முயலவில்லை. காரணம், பானைகளை உடைத்த பெண்கள், அவளுக்குத் தக்க நஷ்ட ஈடுத் தொகையையும் கொடுத்தே அனுப்பி வைத்ததுதான்! ''அந்தப் பெண் அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு வேறு நல்ல தொழில் செய்து பிழைத்துக் கொண்டிருப்பாள்'' என்று கிராமத்துப் பெண்கள் நம்புகிறார்கள்!



இவர்கள் முயற்சியால்...

''செய்யும் தொழிலுக்கு ஏற்ப இரண்டாயிரமோ, மூவாயிரமோ தருவோம்.''

''அடேயப்பா! அவ்வளவு பணத்தை எங்களால் எப்படித் திருப்பித் தர முடியும்?''

''தரத்தான் வேண்டும்!''

''ஏங்க, நாங்க நூறு ரூபாய் நோட்டையே அதிசயமாகப் பார்க்கறவங்க; இவ்வளவு பெரிய தொகையை எங்களுக்குக் கொடுத்தீங்கன்னு நாங்க அப்படியே ஸ்தம்பிச்சுப் போயிடுவோம். பைத்தியம் கூடப் பிடிச்சுடும். அவ்வளவு பணத்தைப் பார்த்த பிறகு, நீங்க குறிப்பிடற தொழில்ல நாட்டம் இல்லாமப் போயிடலாம்; பணத்தை வீணாச் செலவு செய்ய அந்தப் பணமே தூண்டலாம். அதுக்குப் பதிலா ஓர் அம்பது ரூபாய் குடுங்க; நாலு கோழி வளர்த்து, முட்டை விற்றுச் சம்பாதித்துக் கொள்கிறோம். கடனாக வாங்கிய தொகை குறைவாக இருப்பதால் எங்களால் சுலபமாகத் திருப்பித் தர முடியும். ஆடு வாங்க இருநூறு ரூபாய் கொடுங்க, போதும். எங்கள் தேவைக்கு மட்டும்தான் அந்தக் கடன் பயன்பட வேண்டுமே தவிர, விரயத்துக்கு வழிவகுக்கக் கூடாது!''

பொட்டில் அடித்தாற் போன்ற அவளுடைய பேச்சு, இந்திய அரசின் கடன் வழங்கு திட்டத்தையே சாடியது. பைத்தியக்காரப் பொருளாதாரக் கொள்கைகளை எள்ளி நகையாடியது. வந்திருந்த நிபுணர்களும் அதிகாரிகளும் மலைத்துத் திக்குமுக்காடிப் போனார்கள்.

பவானி இப்போது பயிற்சியை முடித்து விட்டு இட்லி வியாபாரம் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

தளபதி திடமதி பற்றிய இரண்டு துணுக்குகள் எழுதிப் பிரசுரமாவதில் வெற்றி பெற்றுள்ள லட்சுமி நரசிம்மன் மற்றும் கு. கணேசன் ஆகியோருக்குப் பரிசும் இரட்டிப்பாகிறது. அவர்கள் ஒவ்வொருவரும் ரூ. 50 பரிசு பெறுகின்றனர்.



"ஒரு காரியம் ஆக வேண்டுமென்றால் பல ஆயிரங்களிலிருந்து சில லட்சங்கள் வரை காரியத்துக்கு ஏற்ப லஞ்சம் தர வேண்டியிருக்கிறது. வசதியற்றவர்கள், பாவம், என்ன செய்வார்கள்? எனவே, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சுலபமான தவணைகளில் லஞ்சத்தைச் செலுத்தி, தவணைகள் பூர்த்தியானதும் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வழிவகை செய்வோம் என்று உறுதி கூறுகிறேன்!"

— டி. லட்சுமி நரசிம்மன், கும்பகோணம்.

இங்கு தவணை முறையில் லஞ்சம் பெறப்படும்!



"அரசியல் சட்டத்தை இப்படி அடிக்கடி திருத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தால், மிகவும் வேதனையாக இருக்கிறது. நாங்கள் மத்தியில் ஆட்சியில் இருந்திருந்தால் நன்றாகப் படித்துப் பார்த்து, புரூஃபிலேயே தேவையான திருத்தங்களைச் செய்து, பிறகு அரசியல் சட்டத்தை அச்சடிக்கக் கொடுத்திருக்க மாட்டோமா! இப்போது ஆட்சியில் உள்ளவர்களுக்குச் சரியாகப் புரூஃப் பார்க்கக் கூடத் தெரியவில்லையே! இதை யாரிடம் சொல்லி அழ?"

— கு. கணேசன், சென்னை — 15.

நிருபர்: நீங்க கட்சியின் தேர்தல் நிதிப் பணம் ஐந்து லட்சத்தை அபேஸ் பண்ணிவிட்டதாகப் பேசிக்கிறாங்களே?

திடமதி: இன்றுவரை நான் வேறு, கட்சி வேறு என்று நான் நினைத்ததே கிடையாது. அப்படியிருக்க ஐந்து லட்சத்தை நான் விழுங்கி ஏப்பம் விட்டதாக எந்த அடிப்படையில் குற்றம் சாட்டுகிறார்கள் என்றுதான் புரியவில்லை!

— சா. ஆனந்தராவ், கடலூர்.





மைக்கேல்ராஜ் ஒரு சட்டதாரி. அதாவது தமக்குச் சரி என்று தோன்றும் நியாயங்களைத் தாமாகவே தடாலடியாய் வழங்கும் ஊர்ப் பெரிய மனிதர். எம்.பி.யின் மகன், காதலித்த பெண்ணை ஏமாற்ற, அவனை மைக்கேல்ராஜ் தெரு முனையில் நிற்க வைத்துப் புரட்டி எடுக்கிறார். (நன்றி: நாயகன்).

இந்த மைக்கேல் ராஜின் கொட்டத்தை அடக்கியே தீருவேன் என்று புறப்பட்டிருக்கும் இன்ஸ்பெக்டர் வீராங்கனை ஷீலா. தர்மங்களுக்காக வாதிடுவார். அநியாயங்களைக் கண்டு குமுறுவார். பெண்களைத் தொழிலில் ஈடுபடுத்திப் பெரிய மனிதர்களை (போலீஸ் கமிஷனரும் அடக்கம்) ஜாலியாய் இருக்கிறார்கள் என்பதால் வயிற்றுக்குப்போதாமல்தொழிலுக்குவரும்ஏழைப் பெண்களைப்'பாவம்' என்றுவிடுதலை செய்து விடுவார் (நன்றி: கடமை, கண்ணியம், கட்டுப்பாடு).

முதல் பாராவின் மைக்கேல் ராஜ் விஜய்காந்த். அவர் நல்லவரா, கெட்டவரா, நல்லவராய் இருக்கும் கெட்டவரா, கெட்டவராய் இருக்கும் நல்லவரா என்பது பற்றி டைரக்டருக்கே குழப்பமாயிருக்கும் போது, அவர் என்ன செய்வார் பாவம்! புகுந்து புகுந்து அடிக்கிறார். வெடிக்கிறார். ஆண்மையின் திமிரையும், காதலின் அவஸ்தையையும் நன்றாகக் காட்ட முடிந்திருக்கிறதே. அந்த மட்டில் சந்தோஷம்.

இரண்டாவது பாரா நாயகி ஷீலா — ஹர்ரே, நம்ம ராதா. காக்கி டிரெஸ்ஸின் சிக்சிக்கில் மிடுக்கிற்கு இணையாகக் கவர்ச்சி.

ஜனகராஜ் என்று ஒரு மனிதர். கோமாளி வரா என்கிறார்கள், எல்லாவற்றையும் உதறி விட்டுக் காவல் கூர்க்காவாக நிற்கிறாராம். அவருடையபூர்வீகம்தெரிந்திருந்தும்(ஒட்டுக் கேட்டும்) இன்ஸ்பெக்டர் ராதா ஆக்ஷன் எடுக்காதது ஏனோ அறியோம் பராபரமே!

உள்ளத்தில் நல்ல உள்ளம்



விஜய்காந்த்என்னதான் சின்ஸியராக நடந்து கொண்டாலும், அதற்குப் பின்னே ஏதோ நாடகம் இருக்கும் என்று நினைத்து ஒவ்வொரு முறையும் சீறும் போதும் போலீஸின் சந்தேகப் புத்தியை என்னமாய்ப் பிரதிபலித்திருக்கிறார்! ஹுர்ரே ராதா!

பாடல்கள் இருக்க வேண்டியதுதான். அதற்காக? இதோ முடியப் போகிறது என்று க்ளைமாக்ஸிற்காக நரம்புகளைத் தயார் பண்ணிக்கொள்ளும் போதா டூயட்டையும், க்ளப் டான்ஸையும் செருகுவது? நல்ல இடம் பார்த்தார்கள், போங்கள்!

ராதா ரவி, இந்தப் படத்தில் சாதா ரவி.

போலீஸ் கமிஷனர் வினு சக்கரவர்த்தி — நறுக்.

சர்ச், பாதிரியார், மாதுரி — பசை போதாது — மனத்தில் ஒட்டுகிற அளவிற்கு.

நடிப்பு: விஜயன், மாதுரி, கமலா காமேஷ், ஜனகராஜ் — இவர்கள் எல்லாம் படத்தில் தலைகாட்டினார்களா என்ன?

காமிரா: ஏ. சபாபதி — டைரக்டருக்குக் காமிராமேன் எவ்வளவோ பரவாயில்லை.

சொத்தைக் காய்களைப் போட்டு அடைத்த கோணி மூட்டையைக் கவிழ்த்த மாதிரி இருக்கிறது.

— ஜெயமன்மதன்

ஒரு ரூபாய் சம்பளத்தில் ஒருவர்!



அமெரிக்காவில் படித்து முன்னேறி, கோடீசுவரரான பிட்ரோடோ, தாய் நாட்டுக்குப் பணியாற்ற இந்திரா காந்தி காலத்திலேயே முயன்றார். ராஜீவ் காலத்தில்தான் அது காரிய சாத்தியமாகியிருக்கிறது. டெலிஃபோன் போன்ற தகவல் தொடர்பு சாதனங்களை (டெலிகம்யூனிகேஷன்) நவீனப்படுத்தும் முயற்சியில் பெருவெற்றி பெற்ற இவரிடம் ஐந்து புதிய பொறுப்புக்கள் இப்போது ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதற்காக மாதம் ஒரு ரூபாய் சம்பளம் பெறும் பிட்ரோடா, நிறைவேற வேண்டிய தமது பணிகள் குறித்துப் பேசுகிறார்:

கேள்வி: முதலில் உங்களை அறிமுகம் செய்து கொள்வதுபோல் ஒரு கேள்வி. உங்கள் பிறப்பு, வளர்ப்பு, கல்வி பற்றிச் சுருக்கமாகக் கூறுவீர்களா?

பதில்: குஜராத்தில் தச்சுத் தொழில்புரியும் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தவன் நான். முழுப்பெயர்: சத்யன் கங்காராம் பிட்ரோடோ. எனக்கு ஏழு சகோதர சகோதரிகள். பௌதிகத்தில் எம். எஸ்ஸி. படித்த பிறகு மேற்படிப்புக்கு அமெரிக்கா சென்றேன். அங்கு தகவல் தொடர்பு சம்பந்தப்பட்ட பலகருவிகளைக்கண்டுபிடித்தும்தொழிலகங்கள் அமைத்தும் வளர்ந்தேன். இப்போது எனக்கு வயது நாற்பத்தியாறு. பிரதமரின் தொழில்நுட்ப ஆலோசகராகத் துணை அமைச்சர் அந்தஸ்தில் பணியாற்றுகிறேன்...

கேள்வி: நாலாயிரம் கோடி பட்ஜெட்டில் தங்கள் தலைமையில் இயங்கும் ஐந்து தொழில்நுட்பத் துறைகளின் (Technology Missions) குறிக்கோள்களை விளக்க முடியுமா?

பதில்: சில முக்கியமான சமூக நலப் பணிகள் இத்திட்டங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.


1) தண்ணீர் — சுமார் ஒரு லட்சம் கிராமங்களுக்கு 1990 — ஆம் வருடத்திற்குள் குடிநீர் வழங்குவது. இந்தத் திட்டத்திற்காக இரண்டாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

2) நோய்த் தடுப்பு — இத்திட்டத்தின் கீழ் எல்லாக் கர்ப்பிணிப் பெண்களுக்கும் டெடனஸ் போன்ற தடுப்பு ஊசிகளும், ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளில் எண்பத்தைந்து சதவிகிதத்தினருக்குக் காச நோய், இளம் பிள்ளை வாதம், தட்டம்மை, டிபிடி போன்ற தடுப்பு மருந்துகளும், 1990— ஆம் ஆண்டிற்குள் கொடுக்கப்படும். தடுப்பு மருந்துகள், உற்பத்தியை அதிகரித்து, தன்னிறைவு காணவும் வழி வகுக்கப் போகிறோம். இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை இருநூற்றைம்பது கோடி ரூபாய்.

3) எழுத்தறிவித்தல் — எழுதப் படிக்கத் தெரியாத எட்டு கோடி முதியோர்களுக்கு (பதினைந்திலிருந்து முப்பத்தைந்து வயது வரை) ஓரளவிற்குக் கல்வி புகட்டுவது. இதற்கு ஐந்நூறு கோடி ரூபாய் செலவாகும்.

4) எண்ணெய் வித்துக்கள் உற்பத்திப் பெருக்கம் — நம் நாட்டில் எண்ணெய் வித்துக்களின் பற்றாக்குறையால் கடந்த சில ஆண்டுகளில் (1981 — லிருந்து 1986 வரையில்) சுமார் நாலாயிரம் கோடி ரூபாய் அந்நியச் செலாவணி சமையல் எண்ணெய் தானியங்கள் இறக்குமதி செய்வதற்காகச் செலவழித்திருக்கிறோம். இத்திட்டம் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரித்துத் தன்னிறைவு காண முயலும்.

5) டெலிகம்யூனிகேஷன் — தகவல்



தொடர்புத் துறையில் பல முன்னேற்றங்களை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் அமுல்படுத்துவதாக இருக்கிறோம். இந்தியாவின் நான்கு பெரு நகரங்களிலும், இன்னும் பல முக்கியமான சிறு நகரங்களிலும் மாவட்டத் தலைநகரங்களில் பதினைந்து சதவிகித ஊர்களிலும் டயல் சுற்றும் தொலைபேசிகள், நவீன, பட்டன் அமுக்தும் முறைக்கு மாற்றப்படும். பொதுத்தொலைபேசிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது, தந்திகள் துரிதமாகப் போய்ச் சேர வழிவகுத்தல், கிராமங்களுக்குத் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்துதல் போன்ற பல பணிகள் இத்திட்டத்தில் அடக்கம். இதற்கான செலவு மதிப்பீடு ஆயிரம் கோடி ரூபாய்.

கே: இன்றைக்குத் தமிழ்நாட்டினரைப் பாதிக்கும் பிரச்னைகளில் முக்கியமானது குடிநீர்ப் பிரச்னைதான். அதனால் குடிநீர் விநியோகத் துறை பற்றி மேலும் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

ப: அந்தந்த மாநிலங்களின் குடிநீர் வாரியங்களின் உதவியுடன் குடிநீர்ப் பிரச்னை உள்ள கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, நாள் ஒன்றுக்குத் தலைக்கு நாற்பது லிட்டர் குடிநீரும், வறண்ட பாலைவனப் பிரதேசங்களில் கால்நடைகளுக்கென்று முப்பது லிட்டர் தண்ணீரும் வழங்குவதாக இருக்கிறோம். இதுவரையில் நினைத்த இடத்தில் கிணறுகள் வெட்டிக் கொண்டிருந்தோம். ஆனால் இத்திட்டத்தின் கீழ் விஞ்ஞான முறைப்படி பூமியை ஆய்ந்தும், சாட்டிலைட்களின் உதவியுடனும் சரியான இடத்தைக் கண்டுபிடித்துக் கிணறுகள் தோண்டுவதன் மூலம் வீண் செலவும், கால விரயமும் தவிர்க்கப்படும். குஜராத்தில் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் **hit ratio** 53 சதவீதமாக இருந்தது. அதாவது ஏராளமாகச் செலவு செய்து கிணறு வெட்டினால், 53 சதவிகித முயற்சிகளில் மட்டுமே பயன் இருந்தது. ஏனைய முயற்சிகள் விரயம்தான். இப்பொழுது விஞ்ஞான பூர்வமான அணுகுமுறை காரணமாக இந்தச் சதவிகிதம் 93 ஆக உயர்ந்திருக்கிறது!

கே: ஏன் கிராமப் புறங்களின் குடிநீர்ப் பிரச்னையை மட்டும் எடுத்துக் கொண்டீர்கள்? சென்னை, மதுரை போன்று எத்தனையோ நகரங்களிலும் குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிறதே?

ப: உண்மைதான். ஆனால் நகரங்களின் குடிநீர்ப் பிரச்னை எங்கள் திட்டத்தில் சேரவில்லை. இத்திட்டத்தின் கீழ் கிராமங்களின் குடிநீர்ப் பிரச்னையைத்தான் கவனிக்கப் போகிறோம். பெரும்பாலும் பெருநகரின் பிரச்னைகளை நகராட்சி மற்றும் மாநகராட்சிகள் தற்காலிகமாகவேனும் சமாளித்து விடுகின்றன. கிராமங்கள்தான் கவனிப்பாரின்றிப் போகின்றன.

கே: சமீபத்தில் உங்கள் குழு சென்னைக்கு வந்திருந்த பொழுது, உப்பு நீரைக் குடிநீராக்கும் நூறு மையங்கள் நாடெங்கிலும் நிறுவப் போவதாகவும், அவற்றில் இருபது தமிழ்நாட்டில் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. சமீப காலம் வரையில் **desalination plant** கள் எட்டாக்கனி என்றும், நம்மால் அவ்வளவு செலவு செய்ய முடியாது என்றும் கருத்து நிலவியதே... இப்பொழுது



° இரண்டாவதாக நோய்த் தடுப்பு...

எப்படித் திடீரென்று நூறு இடங்களில் இயந்திரங்கள் அமைக்கப் போகிறோம்?

ப: கடல்நீரைக் குடிநீராக மாற்றுவதுதான் உண்மையிலேயே மிகவும் கடினம்; அதற்குச் செலவு மிகுதியும் கூட.... சில இடங்களில் உப்புக்கரிக்கும்நிலத்தடி நீர் உள்ளதே, அதைத்தான் குடிக்கின்ற தரத்ததாக மாற்றப் போகிறோம். இப்பொழுது நாங்கள் நிறுவப் போகும் இயந்திரங்கள் 'மினி' பிளாண்டுகள். ஒவ்வோர் இயந்திரமும் ஆறிலிருந்து ஏழு லட்சம் ரூபாய் விலை. ஒரு லிட்டர் நல்ல தண்ணீர் பெற இரண்டு பைசா செலவழியும். இதுவே அதிகம்தான். இந்த இயந்திரங்களுக்கு எரிபொருள் தேவையும் அதிகம். ஒரு சோதனை முறையில்தான்நூறு இயந்திரங்களை,நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப் போகிறோம். இப்படிச் சுத்தப்படுத்திக் கொடுக்கப்படும் தண்ணீரின் ருசி மக்களுக்குப் பிடிக்கிறதா, எவ்வளவு எரிபொருள் தேவைப்படுகிறது, செலவைச் சரிக்கட்ட முடியுமா என்பதையெல்லாம் பார்த்துக் கொண்டுதான் மேற்கொண்டு செயல்பட வேண்டும்.

கே: இந்த இயந்திரங்களை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்கிறோமா அல்லது இறக்குமதி செய்ய வேண்டுமா?

ப: நம் நாட்டிலேயே BHEL போன்ற நிறுவனங்கள் இந்த இயந்திரங்களை உற்பத்தி செய்கின்றன. இவைகளை இயக்குவதற்குத் தேவையான பொறியியல் வல்லுநர்களும் நம் நாட்டிலேயே இருக்கிறார்கள். கூடிய வரையில் எல்லாத் துறைகளிலும், உள்நாட்டுத் தொழில் நுட்பங்களையே உபயோகிப்பது எங்கள் இலட்சியம்.

கே: குடிநீர் பிரிவில் சில மாவட்டங்களைப் பரிசோதனை முறையில் தேர்ந்தெடுத்து, அதற்கான பிரத்தியேகத் திட்டங்கள் வகுத்திருக்கிறீர்களே? அதன் நோக்கம் என்ன?

ப: மக்களுக்குத் தேவையான அளவு குடிநீர் வழங்குவதோடு சுத்தமான நீரை வழங்க வேண்டும் என்பதும் எங்கள் குறிக்கோள். இந்நாட்டில் சுமார் ஆறுயிரம் கிராமங்களில் **guinea worms** என்று சொல்லப்படும் புழுக்கள் தண்ணீரில் உள்ளன. சில இடங்களில் தண்ணீரில் தேவைக்கு அதிகமாக இரும்புச் சத்து; ப்ளோரைட் போன்றவை இருக்கின்றன. இக்குறைகளை நீக்கி விஞ்ஞான முறைப்படி குடிநீரைச் சுத்தப்படுத்தி வழங்க இருக்கிறோம். இத்திட்டத்திற்கு எல்லா மாநிலங்களிலும் இரண்டு மூன்று மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். தமிழ்நாட்டில் ராமநாதபுரம், சேலம், தென்னாற்காடு மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

கே: நாடு சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகளாக நாம் சாதிக்க முடியாத பல திட்டங்களைத் தாங்கள் இரண்டு வருட காலத்திற்குள் எப்படிச் செய்து காட்ட முடியும் என்று நினைக்கிறீர்கள்? உங்களிடம் அப்படி என்ன மந்திர சக்தி இருக்கிறது? இந்நாட்டு அரசாங்கத்தின் சிவப்பு நாடாக்களையெல்லாம் கடந்து அவ்வளவு விரைவில் காரியங்கள் நடந்து விடுமா, என்றெல்லாம் சந்தேகங்கள் கிளம்பியுள்ளனவே? இவற்றிற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?

ப: என்னால் எல்லாம் சாதிக்க முடியும் என்று நான் சொல்லிக் கொள்ளவில்லையே! முயற்சி செய்கிறோம். உதாரணமாக எல்லாக் கிராமங்களுக்கும் 1990 – ஆம் ஆண்டிற்குள் குடிநீர் வசதி செய்து தரப்படும் என்று பரவலாகப் பேசப்படுகிறது. எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்வது அவ்வளவு சுலபமான விஷயம் அல்ல. முதலில் குடிநீர்ப் பிரச்னை உள்ள கிராமங்கள் என்று ஒரு லட்சம் கிராமங்களைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மேலும், நம் நாடு ஒரு திட்டத்திலும் வெற்றி காணவில்லை என்று சொல்லிவிட முடியாதே! அணு சக்தி, விண்வெளி ஆராய்ச்சி போன்ற துறைகளில் நாம் சாதனைகள் புரியவில்லையா? விவசாயத்தில் பசுமைப் புரட்சியைச் செய்து காட்டவில்லையா?

நான் தலைமை தாங்கும் இந்த ஐந்து துறைகளும் ஏற்கெனவே ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டிருந்த பணிகளைத்தான் மேற்கொண்டுள்ளன. இத்திட்டங்களைத் தில்லியிலிருந்து மாநிலங்களுக்கும், மாவட்டங்களுக்கும் எடுத்துச் சென்று மக்களிடையே விழிப்புணர்ச்சியையும்,ஈடுபாட்டையும்உண்டாக்குவதுதான் என்னுடைய பணி. இதை ஒரு போர்க்கால வேகத்தில் செய்ய முயன்று வருகிறேன். சிவப்பு நாடாக்களால் இடையூறு ஏற்படாமல் அதிகாரிகளுக்குப் புத்துணர்ச்சியூட்டி ஒத்துழைப்பைப் பெற்று இயங்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் நியமிக்கப்பட்டிருக்கிறேன். இதைப் போன்ற பணிகளை எடுத்து நடத்த, சிரத்தை, உழைப்பு, பரந்த நோக்கம், எல்லாவற்றிற்கும் மேலாக, விமர்சனங்களையும் தோல்விகளையும் ஏற்கத் துணிவு... எல்லாம் வேண்டும். நான் தோல்விகளைக் கண்டு அஞ்ச மாட்டேன். அவற்றை வெற்றிக்கு நாட்டப்பட்ட அஸ்திவாரங்களாகக் கருதுவேன்.

பேட்டி: **ரமாமணி சுந்தர்**

புகைப்படங்கள்: **தில்லி ராஜு**




CLARION/B/GS/49/173 TAM

“அண்ணா, அவரிடமிருந்து இரண்டாவது முறையாகக் கடிதம் வந்துவிட்டது. இதற்கு மேலும் நான் பிறந்த வீட்டில் சீராடிக் கொண்டிருப்பது நன்றாயிராது. அதனால் வருகிற ஞாயிற்றுக்கிழமையே என்னை அனுப்பிவிடு” — என்று முடிவாகக் கூறி விட்டாள் ரம்யா.

அவள் அண்ணா ரங்கநாதன் யோசனையில் ஆழ்ந்து விட்டான். பெண்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் ஆயிரம் பொருள் பொதிந்திருக்கும் என்று புகழ்பெற்ற கவிஞர் ஒருவர் கூறியதைத் தன் தங்கையிடம் ஆயிரம் முறையாவது கூறியிருப்பான். ஆனால், இன்றோ, அது தன்னையே பாதிக்கும் என்று அவன் நினைக்கவில்லை.

இப்படியும் ஒரு சகோதரி



''அண்ணா ஞாபகம் இருக்கட்டும். ஞாயிற்றுக்கிழமை என்பது நாளைய மறுநாள்'' — என்று மறுபடியும் ரம்யா கூறிய போது தான், உண்மையிலேயே அவன் பயந்து போனான்.

அவள் வந்த மறுநாளே அண்ணனிடம் முறையிட்டு விட்டாள்.

''அண்ணா எனக்கு இரண்டு புடைவைகள் எப்படியாவது இந்த முறை வாங்கிக் கொடுத்துவிட வேண்டும். போன தடவை கூட நீ ஏமாற்றி விட்டாய். இந்த முறையாவது...'' — சொல்லி முடிக்கும் முன்பே, எப்படித்தான் அவள் கண்களிலிருந்து குற்றால அருவி பெருக்கெடுத்து விடுகிறதோ!

''சீ..., ரம்யா, என் செல்லக் கிளியே! இதற்கெல்லாமா அழுவது? இந்தத் தடவை, உன் அண்ணன் ஏமாற்ற மாட்டானம்மா...'' — என்று அவன் சொன்ன மறு கணமே, அகத்தியருக்குக் கட்டுப்பட்ட காவிரியைப் போல, இரண்டு நிமிடங்களுக்கு முன் வெளிப்பட்ட குற்றாலம் அடங்கி ஒடுங்கி விட்டது. இந்திர ஜால வித்தை கூட இவ்வளவு வேகமாக நிகழ முடியாது!

ஆனால் ரங்கநாதனின் மனமோ, 'அடிப்பாவி! எப்படியம்மா இப்படித் துணிந்து பொய் சொல்கிறாய்? உனக்கா புடைவைகள் இல்லை? எத்தனை புடைவை, ரவிக்கை இருந்தாலும் மேலும், மேலும் வாங்கிக் குவித்துக் கொள்ள வேண்டும் என்ற பேராசையும், முடிந்த வரையில் பிறந்தகத்திலிருந்து சுரண்டிக் கொண்டு போய்விட வேண்டும் என்ற எண்ணமும், நம் பெண்மணிகளை விட்டு உலகம் உள்ளளவும் அகலாதோ?' என்று வருந்தித் தவித்தது.

ஏதோ நினைவாகச் சமையலறைப் பக்கம் திரும்பியவன் அடுத்த விநாடியே ஆயிரம் தேள்கள் ஒருசேரக் கொட்டிய அதிர்ச்சிக்கு ஆளானான். அங்கே... அவன் மனைவி வர்தினி... அவள் உடுத்திக் கொண்டிருந்த வாயில் புடைவையின் முதுகுப் புறத்திலும், இடுப்புப் பகுதியிலும் கிழிசல்கள் பளிச்சென்று தெரிந்தன. பெருகி வந்த துயரத்தை அவனால் அடக்க முடியவில்லை. மனத்திற்குள்ளேயே அழுதான்.



தன் அண்ணி கிழிசல் புடைவைகளைக் கட்டிக் கொண்டு நிற்பதைக் கண்கூடாகப் பார்த்தும், அவளுக்குப் புதுப் புடைவை ஒன்று வாங்கிக் கொடுக்கக் கூட அவனுக்கு வசதி இல்லை என்பதை நேரில் கண்டுங்கூட ரம்யா தனக்குப் புடைவை வாங்கிக் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்தியது அவனுக்குத் தாங்கொணாத வேதனையைத்தான் அளித்தது. சொல்லப் போனால், அவன் இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டதற்குக் காரணமே ரம்யாதான்.

ஏழு வயதில் தாயையும், பத்து வயதில் தந்தையையும் இழந்த அவளுக்கு ஏற்பட்ட, தகுதிக்கு மீறிய ஆசைகளையெல்லாம் வட்டிக்குக் கூடக் கடன் வாங்கி, நிறைவேற்றினான். 'தாயிருந்தால் என் ஆசையைக் கண்டிப்பாக நிறைவேற்றியிருப்பாளே' — என்ற ஏக்கம் அவள் மனத்தில் ஏற்படக் கூடாதே என்ற கவலை அவனுக்கு. கடைசியில், தன் சக்திக்கும் மீறி, அநியாய வட்டிக்குக் கடன் வாங்கி, அவளுடைய திருமணத்தையும் நடத்தி வைத்த பின்தான், இந்த நிலைமைக்கு ஆளாகிவிட்டான்.

''யார் எப்படிப் போனால் எனக்கு என்ன? நான் சந்தோஷமாக இருக்க வேண்டும். என் காரியம் ஆனால் சரி!'' — என்ற சுயநல மனப்பான்மை அருமைத் தங்கைக்கு ஏற்பட்டு விட்டதைக் கண்டு மனம் நொந்து தவித்தான்.

இரண்டே புடைவைகள்தான் என்றாலும் — சாதாரண நூல் புடைவைகளாக இருந்தாலும் குறைந்தது நூறு ரூபாயாவது ஆகுமே! மற்ற பழக்க வழக்கங்களை எப்படிக் காற்றில் பறக்க விட்டாலும், இதில் மட்டும் சாஸ்திர சம்பிரதாயங்களை மறக்கவில்லை ரம்யா. பிறந்த வீட்டிலிருந்து எதையும் ஒற்றையாக, அபசகுனமாக எடுத்துக் கொண்டு போகக் கூடாதாம்! —

ஏற்கெனவே 'இனிமேல் இந்த மாதம் இதற்கு மேலும் உனக்குக் கொடுக்க முடியாது' — என்று நண்பர்கள் தூற்றுமளவிற்குக் கடன் வாங்கியாகி விட்டது. கடைசியில், வெட்கத்தைவிட்டு, ரம்யாவிடமேபேரம் பேசினால் என்ன?' —

திடீரென்று சிந்தனை கலையப் பெற்றவனாய், 'ரம்யா' என்று குரல் எழுப்பவே, அடுத்த வினாடி அவன் மனைவி வர்தினி தான் அவன் எதிரில் வந்து நின்றாள்.

''இதோ பாருங்கள். ஏன் இப்படி மண்டையை உடைத்துக் கொள்கிறீர்கள்? அலை ஓய்ந்து சமுத்திர ஸ்நானம் செய்வது என்ற அதிசயம் மற்றவர்கள் வாழ்க்கையில் என்றாவது ஒரு நாள் நிகழ்ந்தாலும் நிகழலாம். ஆனால், நம்மைப் பொறுத்த வரையில், அது இல்லை என்பது கண்கூடான விஷயம். ஒரு பெண்ணுக்கு அவள் புக்ககத்தில் ஆயிரம்தான் ரத்தினமாக இழைத்துப் போட்டாலும், கணவன் பட்டுப்புடைவைகளாகவே பீரோவில் வாங்கி அடுக்கினாலும், 'இது என் பிறந்தகத்தில் வாங்கிக் கொடுத்தார்கள்' — என்று ஒரு சாதாரணப் பொருளைப் பற்றிச் சொல்லிப் பெருமைப்படுவதில்தான் மகிழ்ச்சி. இதுவரை நீங்கள் எவ்வளவோ கடன் வாங்கிவிட்டீர்கள். பத்தோடு, பதினொன்றாக இருக்கட்டும் என்று, இன்னும் நூறு ரூபாய் கடன் வாங்கி விடுங்கள்.''

'எத்தகைய உயர்ந்த மனுஷி இவள்! எனக்கு ஒரு புடைவையாவது வாங்கிக் கொடுங்கள் என்று ஒரு பேச்சுக்குக் கூடக் கேட்காமல் அரக்கத்தனமே உருவாகக் கொண்ட நாத்தனாருக்காக வாதாடும் இத்தகைய பெண்களுக்காகத்தான் உலகம் இன்னும் அழியாமல் இருக்கிறதோ?'

மறுநாள் மாலை, அலைந்து திரிந்து பெற்ற நூறு ரூபாய் பணத்துடன் அவன் வீட்டுக்குள் மகிழ்ச்சியாக நுழைந்ததுமே,

''ரம்யா, சீக்கிரமாக அண்ணாவுடன் கிளம்பிப் போய், புடைவைகளை வாங்கிக் கொண்டு, இருட்டுவதற்குள் வந்து சேர்'' என்று சொன்ன அவன் மனைவியிடம்,

''நன்றாயிருக்கிறதே, அண்ணா வீட்டில் இருக்கட்டும். நீங்களும் நானும் போய் வரலாம்'' — என்றாள், அவன் அருமைத் தங்கை.

தன் குசேல வஸ்திரத்துடன் தயங்கி நின்ற தன் அண்ணியை நன்றாகவே புரிந்து கொண்டாள் ரம்யா. புடைவை ஒன்றை எடுத்து, அண்ணியைக் கட்டாயப்படுத்திக் கட்டிக் கொள்ளச் சொன்னாள். கண்ணெதிரிலேயே

பார்வையற்றவர்கள் பங்கேற்ற கார் ரேஸ்!

கடினமான கார் பயணங்களை மேற்கொள்வதில் உள்ள 'திரில்' நாம் அறிந்த ஒன்று. ஹிமாலயன் ராலி என்று சொன்னால் மலைப்பாங்கான அப்பகுதிகளில் ஒரு வழி வகுத்து, ரூட் மேப்பைக் கையில் கொடுத்து விடுவார்கள். காரில் இருவர் போகலாம். மாறி மாறி ஓட்டலாம். ஒருவர் ஓட்டும் போது இன்னொருவர் ரூட் மேப்பை வைத்துக் கொண்டு வழி சொல்லுவார். 'நேரே போ; இங்கே வலப்பக்கம் திரும்பு' என்று மேப்பைப் பார்த்துக் கூறி வருவார்.

ஆனால் பம்பாயில் வித்தியாசமான விதத்தில் அண்மையில் நடைபெற்றது, பிளைண்ட் கார் ராலி! ஓட்டுகிறவர் ஒருவரே; அவருக்கு வழிகாட்டுகிறவரும் நாவிகேட்டர் — ஒருவர் மட்டுமே. ஆனால் வழிகாட்டும் இவருக்குப் பார்வை கிடையாது! எண்பத்தெட்டு கார்கள் பங்கு கொண்டன. பந்தயம் ஆரம்பமாவதற்கு அரை நிமிஷத்துக்கு முன்பாகத்தான் நாவிகேட்டருக்கு ப்ரெய்ல் முறையில் அச்சான பன்னிரண்டு பக்க 'ரூட்' அட்டவணை தரப்பட்டது! எண்பது கிலோ மீட்டர் பயணம் பம்பாய் நகரின் சந்து பொந்துகளின் வழியே புகுந்து புறப்பட்டது! பல பார்வையற்ற நாவிகேட்டர்களுக்கு இது தான் முதல் கார் பயணமே! டிரைவரை அவர்களுக்கு முன்பின் தெரியாது! வழி காட்டுவதுடன், செல்கின்ற பாதைகளில் உள்ள வேகக் கட்டுப்பாடுகள், ஒரு வழிப் பாதை போன்ற கட்டுப்பாடுகளையும் டிரைவருக்கு நாவிகேட்டர் உணர்த்த வேண்டும்.

கார் ஓட்டியவர்களில் அஷோக் தல்ரேஜா ஊனமுற்றவர் — முடமானவர் — என்பதும், நாவிகேட்டர்களில் ஒரு பார்வையற்றவர், சென்னை, அமிஞ்சிக் கரை, வ. உ. சி. நகரைச் சேர்ந்த எஸ். செல்வராஜ் என்பதும் குறிப்பிடத்தக்கன. மேலும், பார்வையற்றவர்களில் பதினாறு பேர் முதுநிலைப் பட்டமும் இருபத்தாறு பேர் இளநிலைப் பட்டமும் பெற்றவர்கள்! பல நிறுவனங்களில் பணியாற்றி வருகிறவர்கள்.

முடிவில் பரேஷ் வர்மாவும் நாவிகேட்டர் சுகாஸ் கர்நிக்கும் வெற்றி பெற்ற ஜோடியாக அறிவிக்கப்பட்டனர்.

— பி. கிருஷ்ணமூர்த்தி.



அதிக சக்தி, அதிக போஷாக்கு,

அதிக சாக்கலேட் சுவை..



அருந்துங்கள்

கேம்ப்கோ வின்னர்

இது ஒரு சுவை மிகுந்த மாறுபட்ட சாக்கலேட் பானம். அதிக சக்தியை அளிப்பதற்காக குளுக்கோஸ் நிறைந்தது. போஷாக்கினை அளித்திட வைட்டமின்கள் மற்றும் தாதுச் சத்துக்களைக் கொண்டது.

மேலும் குழந்தைகள் மிகவும் விரும்பிடும், இதுவரைக் கிடைத்திராத அதிக சாக்கலேட் சுவை.

அருந்திப் பாருங்கள். இதைவிடச் சிறந்ததொரு சுவை மற்றும் சக்திமிக்க சாக்கலேட் பானம் இல்லை என்பதைக் கண்டுகொள்வீர்கள்.



இந்தியாவின் மிகப்பெரிய அதிநவீன ஆலை அளிப்பது.

கேம்ப்கோ லிமிடெட்
மங்களூர்.

R K SWAMY/CL/5828



சுயகார்யப் புலியாகத் தோன்றும் பெண்ணைக் கண்டபின்பும், அருவையே படாத வர்தினியும் பெண் இனத்தைச் சேர்ந்தவள் தானு என்று சந்தேகப்பட்டான் ரங்கனாதன்.

இரவு பத்து மணிக்குத்தான் வீட்டிற்குத் திரும்பி வந்தனர்.

"ஐயோ போதுமே, நாத்தனார் புராணம்" — என்று அவன் கோபப்படும் வரை பேசித் தீர்த்து விட்டாள் அவன் மனைவி. ஒரு வேளை தன் இல்லாத கொடுமையையும், ஆதங்கத்தையும் மூடி மறைக்கத்தான் இப்படிப் பேசுகிருளோ என்று கூட அவன் சங்கடப்பட்டான்.

ஞாயிற்றுக்கிழமை எழும்பூர் ரயில் நிலையத்தில் ஸ்ரீரங்கம் செல்லும் மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் ரயிலினுள் உட்கார்ந்து விட்டாள் ரம்யா. வண்டி புறப்பட இன்னும் இரண்டு நிமிடம்தான் இருந்தது.

ஏதோ வழக்கமாகக் கேட்பதைப் போல், "எதற்கும் ஒரு முறை எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு விட்டாயா பார்" என்று ரங்கனாதன் கேட்ட மறுவினாடி,

"அண்ணா... அந்தப் புடைவைகள்..." — என்றாள் அமைதியாக.

அவனுக்கு வந்த ஆத்திரத்திற்கு அளவே இல்லை.

"என்ன பெண்ணம்மா நீ! இறங்கு கீழே. ராத்திரி கடைசி பஸ்ஸில் போகலாம்" — என்றான்.

ஆனால் ரம்யாவோ, அமைதியாக, "வேண்டாம், அண்ணா! அவற்றை அண்ணிக்காகத் தான் வாங்கச் செய்தேன்!" — புன்னகையுடன் கூறினாள்.

அதிர்ச்சியுடன், "அண்ணிக்காகவா?" என்ற ரங்கனாதனிடம்,

"ஆமாம், அண்ணா! அண்ணி இப்படிக் கிழிசலைக் கட்டிக் கொண்டு எத்தனை நாள் தான் நிற்பது? அவளுக்கு முதலில் புடைவை வாங்கிக் கொடு என்று நான் சிபாரிசு செய்தால், 'அதற்கென்ன பார்க்கலாம்! அடுத்த மாதம் வாங்கிக் கொடுக்கிறேன். அங்கே பணம் கேட்டுப் பார்க்கிறேன். இங்கே பணம் கேட்டுப் பார்க்கிறேன் என்று அசட்டையாக இருந்து விடுவாய் நீ. அதனால், எனக்குப் புடைவை வேண்டும் என்று நச்சரித்து, அழுது, ஆகாத்தியம் செய்து வாங்கச் செய்தேன்," என்றாள்.

பேசும் சக்தியை இழந்து நின்ற அவனிடம், மீண்டும் அவளேதான் சொன்னாள்:

"உன் தற்போதைய நிலைமை எனக்கு நன்றாகத் தெரியும் அண்ணா! இந்த நூறு ரூபாய்க்கு எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாய் என்று எனக்குத் தெரியும். இன்னும் இரண்டு நாட்களிலேயே அவர் 'போனஸ்' பணத்திலிருந்து நான் அனுப்பி விடுகிறேன்."

ரயில் புறப்பட்டு விட்டது! ரம்யா புன்னகையுடன் கையசைத்தது ரங்கனாதனின் பனித்த கண்களுக்குக் கலங்கலாகத் தெரிந்தது.

அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி-1988

முதல் பரிசு	ரூ.	1500
இரண்டாவது பரிசு	ரூ.	750
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 375 விதம்	ரூ.	750



ஆக மொத்தம் ரூ. 3000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

• கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் வேறு எந்த உருவிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.

• அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லைஎன்றும்போட்டிமுடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.

• நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.

• உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

• பிரசுரத்துக்குஏற்கப்படாதகதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

• கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

• எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

• சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

• போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 7 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

• எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை— 600 032.


எல்லோரும்...
..எல்லோரும்...
..எல்லோரும்...
நியூட்ரின் "ட்விங்க-உல்லாசப் பயணம்" போட்டி* விபரங்கள் விற்பனையாளர்களிடம்
எல்லோருமே விரும்புவது நியூட்ரின் ட்விங்க்
Twink
SOFT DRINK CONCENTRATE
Orange
• ஆரஞ்சு
• லெமன்
• மேங்கோ
• பைனாப்பிள்
• கிரேப்
ட்விங்க்
ஸாஃப்ட் டிரிங்க் கான்ஸன்ட்ரேட்
nutrine
சுவைகளும் புதுமை, சுவைத்திட இனிமை
*போட்டி தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் பாண்டிச்சேரி பிரஜைகளுக்கு மட்டுமே
ACIL/090/87-Tam

பொன்னியின் செல்வன்



ஏழாம் அத்தியாயம்
காற்றில் எழுந்த கீதம்

பூங்குழலி கோபத்துடன் ஓடுவதை நிறுத்தித் திரும்பி நின்ற அதே சமயத்தில், இருள் சூழ்ந்த அக்காட்டகத்தே, ஓர் இனிய கீதம் எழுந்தது:

''பொன்னார் மேனியனே
புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடை மேல்
மிளிர்கொன்றைஅணிந்தவனே!''

அந்தக் குரல் சேந்தன் அமுதனுடைய குரல் என்பதைப் பூங்குழலி உடனே அறிந்து கொண்டாள். கலகலவென்று சிரித்தாள். காலடிச் சத்தம் வந்த திசை வேறு என்பதைக்கூட அச்சமயம் அவள் மறந்து போனாள்.

''அத்தான்! நீதானா?''

''ஆமாம்! பூங்குழலி!''

''எங்கே இருக்கிறாய்? இப்படி வா!''

''இதோ வந்துவிட்டேன்!'' என்று சொல்லிக்கொண்டு சேந்தன் அமுதன் அவள் முன்னால் வந்தான்.

''நன்றாய் என்னைப் பயமுறுத்தி விட்டாய்! எதற்காக இப்படி என்னைத் தொடர்ந்து வந்தாய்?''

''பூங்குழலி! உன்னைப் பார்ப்பதற்காகவும் உன் இனிய கானத்தைக் கேட்பதற்காகவும் தஞ்சையிலிருந்து பல நாள் பிரயாணம் செய்து வந்தேன். இங்கே வந்த பிறகும் உன்னைக் காணாமல் இத்தனை நாள் காத்துக் கொண்டிருந்தேன்! தற்செயலாக உன்னைப் பார்த்துவிட்டுத் தொடர்ந்து ஓடி வந்தேன். எங்கே, ஒரு கீதம் பாடு கேட்கலாம்!''

''பாடுவதற்கு நல்ல இடம்; அதைவிட நல்ல சந்தர்ப்பம்!''

''நீ பாடா விட்டால் நானே இன்னொரு பாட்டுப் பாடுகிறேன். இந்தக் காட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் மிருகங்களையெல்லாம் விழித்தெழுந்து ஓடச் செய்கிறேன், பார்!

பித்தா! பிறைசூடி
பெருமானே அருளாளா!''

''போதும், அத்தான்! கொஞ்சம் பாட்டை நிறுத்து!''

அமரர் கல்கி

"அப்படியானால் நீ பாடுகிறாயா?" — இவ்விதம் இரைந்து கேட்டு விட்டுச் சேந்தன் அமுதன் உடனே மெல்லிய குரலில், "பூங்குழலி! உன்னைத் தொடர்ந்து இன்னொருவன் வந்து கொண்டிருந்தான். உனக்கு எச்சரிக்கை செய்வதற்காகவே சத்தம் போட்டுப் பாடினேன். அவனுக்கும் உன் அண்ணன் மனைவிக்கும் இன்று சாயங்காலம் ஏதோ இரகசிய சம்பாஷணை நடந்தது. அவன் யார் என்று உனக்குத் தெரியுமா?" என்றான்.

பிறகு மீண்டும், உரத்த குரலில், "என்ன சொல்கிறாய்? நீ பாடுகிறாயா? நான் பாடட்டுமா? சிவபெருமான் சுடுகாட்டில் ஆடினார்; நீ வெறுங் காட்டில் பாடக் கூடாதா?" என்று இரைந்தான்.

"இதோ பாடுகிறேன்; கோபித்துக் கொள்ளாதே!" என்று சொல்லி விட்டுப் பூங்குழலி பாடினாள்.

"பறக்கும் எம் கிள்ளைகாள்! பாடும் எம் பூவைகாள்!
அறக்கண் எனத்தகும் அடிகள் ஆரூரரை
மறக்ககில்லாமையும் வளைகள் நில்லாமையும்
உறக்கமில்லாமையும் உணர்த்த வல்லீர்களே!"

இவ்விதம் பாடிவிட்டு, மெல்லிய குரலில், "அமுதா! நான் வந்தது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

"பூங்குழலி! கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து படகு வருவதைப் பார்த்தேன். நீயாக இருக்கலாம் என்று உத்தேசமாக எண்ணி இங்கே உன்னைத் தேடி வந்தேன். அதே சமயத்தில் பழுவூர் ஆட்கள் சிலரும் இந்தப் பக்கம் வந்தார்கள். படகில் உன்னைக் காணவில்லை. ஆனால் என் நண்பன் வல்லவரையனையும் இளவரசரையும் பார்த்தேன். வல்லவரையனிடம் பழுவூர் ஆட்கள் வருவது பற்றிக் கூறினேன். பிறகு இளவரசரை நாங்கள் இருவருமாகத் தூக்கிக் கொண்டு போய் மறைந்த மண்டபத்தில் சேர்த்தோம்..."

"ஐயோ! என்ன தவறு செய்து விட்டீர்கள்? படகு என்ன ஆயிற்று?"

"படகை யாராவது பார்த்தால் சந்தேகம் ஏற்படும் என்று ஓடை நீரில் கவிழ்த்து விட்டோம்! — ஏன்! பூங்குழலி! பாட்டை ஏன் நிறுத்தி விட்டாய்! மிச்சத்தையும் பாடு!" என்று பிற்பகுதியை உரத்த குரலில் கூறினான் சேந்தன் அமுதன்.

"மறந்து விட்டது, அமுதா! இந்தக் கோடிக் கரைக் குழகரைப் பற்றி ஒரு பாடல் உண்டே! உனக்கு அது நினைவிருக்கிறதா? — நினைவிருந்தால் பாடு!"

"ஓ! நினைவிருக்கிறது!" என்று சேந்தன் அமுதன் இரைந்து சொல்லி விட்டுப் பாடினான்:—

"கடிதாய்க் காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதானயலே இருந்தால் குற்ற மாமோ?
கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே!"

பாட்டு முடிந்தவுடனே பூங்குழலி "அத்தான்! என்னைத் தொடர்ந்து வந்தவன் போய் விட்டானா? பக்கத்தில் மறைந்து நின்று கொண்டிருக்கிறானா?" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"நாம் இங்கே நின்ற பிறகு காலடிச் சத்தம் கேட்கவில்லை; அவன் இங்கேதான் பக்கத்தில் எங்கேயோ மறைந்து நிற்க வேண்டும். அவன் யார் என்று உனக்குத் தெரியுமா?"

பூங்குழலி இரைந்து "தெரியாமல் என்ன? நன்றாய்த் தெரியும். கோடிக் கரை ஆந்தைகளைப் பற்றிச் சுந்தரர் பாடியிருப்பதுதானே? இதோ கேள்!

காடேன் மிகவால் இது காரிகை யஞ்சக்
கூடிப் பொந்தில் ஆந்தைகள் கூகை குழற
வேடித் தொண்டர் சாலவுந் தீயர் சழக்கர்
கோடிக் குழகா இடங்கோயில் கொண்டாயே!

பார்த்தாயா! அமுதா! சுந்தர மூர்த்தியின் காலத்தில் ஆந்தைகளும் கூகைகளும் இன்று போலவே இக்காட்டில் கத்தியிருக்கின்றன. ஆனால் இப்போது இக் காட்டில் மனிதர்கள் கூட ஆந்தை போலச் சத்தமிடுகிறார்கள். சற்று முன் அத்தகைய குரல் ஒன்று கேட்டேன். அந்தத் தீய சழக்கர் யாராயிருக்கும் என்று உனக்கு ஏதாவது தெரியுமா?'' — இப்படி உரத்த குரலிலேயே பூங்குழலி கேட்டாள். கேட்டு விட்டு, ''எனக்கு அம் மாதிரி கத்த வருகிறதா என்று பார்க்கிறேன். ஆந்தைக் குரல் மாதிரி இருக்கிறதா கேட்டுச் சொல்லு!'' என்றாள்.

பின்னர், ஆந்தை மாதிரியே மூன்று தடவை குரல் கொடுத்தாள்.

''அப்படியே ஆந்தைக் குரல் மாதிரியே இருக்கிறது! தேனினும் இனிய குரலில் தெய்வீக கீதங்களைப் பாடுவாயே! இதை எங்கே கற்றுக் கொண்டாய்?'' என்று அமுதன் கேட்டான்.

''மந்திரவாதி ஒருவனிடம் கற்றுக் கொண்டேன். மந்திரம் பலிப்பதற்கு இப்படி ஆந்தை போலக் கத்தத் தெரிந்திருக்க வேண்டுமாம்!''

''உனக்கு மந்திர வித்தை கூடத் தெரியுமா, என்ன?''

''ஏதோ கொஞ்சம் தெரியும். என்னுடைய மந்திர சக்தியைப் பரீட்சித்துப் பார்க்கிறாயா?''

''எப்படி பரீட்சிக்கிறது?''

''இப்போது நாம் பேசுவதையெல்லாம் நமக்குப் பக்கத்தில் ஒருவன் மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருக்கிறான். நீ வேணுமானால் தேடிப் பார்!''

இவ்விதம் பூங்குழலி கூறி வாய் மூடுவதற்குள்ளே காட்டில் சலசலப்புச் சத்தம் கேட்டது. மந்திரவாதி ரவிதாஸன் மறைவிலிருந்து வெளியே வந்தான். ''ஹாஹா ஹா!'' என்று சிரித்துக் கொண்டே வந்தான்.

''பெண்ணே! அப்படியா சமாசாரம்? உனக்குத் தந்திரம்தான் தெரியும் என்று நினைத்தேன்; மந்திரம் கூடத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''அட பாதகா! நீதானா?''

''பெண்ணே! நான் யார் என்று உனக்குத் தெரியுமா?''

''இலங்கையில் இளவரசரைக் கொல்லப் பார்த்தவன் நீ! அது உன்னால் முடியவில்லை. ஆகையால் நடுக் கடலில் மந்திரம் போட்டுச் சுழற் காற்றை வரவழைத்து இளவரசரையும் அவருடைய சிநேகிதனையும் மூழ்க அடித்து விட்டாய்!''

''அவர்கள் மூழ்கியது உனக்கு எப்படி நிச்சயமாய்த் தெரியும்? நீ பார்த்தாயா?''

''இரண்டு பேருடைய உடல்களும் கரையில் வந்து ஒதுங்கின. பூதத் தீவிலே குழிதோண்டி அவர்களைப் புதைத்து விட்டு வந்தேன். துரோகி! உன் மந்திரத்தில் இடி விழ!''

''பெண்ணே! என்னை ஏமாற்றப் பார்க்காதே! என்னுடைய மந்திரத்துக்குப் பதில் மந்திரம் போட்டு நீ அவர்களை உயிர் பிழைக்கச் செய்யவில்லையா?''

''ஐயோ! அது எப்படி உனக்குத் தெரிந்தது?''

''இந்த ரவிதாஸனுக்குப் புறக் கண்ணைத் தவிர அகக் கண்ணும் உண்டு. நூறு காத தூரத்தில் நடப்பதையும் என்னுடைய மந்திர சக்தியினால் தெரிந்து கொள்வேன்.''

''அப்படியானால் என்னை எதற்காகக் கேட்கிறாய்?''


''உன்னைப் பரிசோதிப்பதற்காகக் கேட்கிறேன். அவர்களை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்பதைச் சொல்லி விடு! இல்லாவிட்டால் உங்கள் இருவரையும் இங்கேயே எரித்துச் சாம்பலாக்கி விடுவேன்!'' என்றான் ரவிதாஸன்.

அவனுடைய புறக்கண்கள் அச்சமயம் நெருப்புத் தணல்களைப் போல்



அனல் வீசி ஜொலித்தன.

"என்ன? உண்மையைச் சொல்லு கிறாயா, மாட்டாயா? ஓம் ஹ்ரீம் ஹ்ராம் வஷட்! — இதோ என் மந்திரத் தின் சக்தியைக் காட்டப் போகி றேன்."



பூங்குழலி பயத்தினால் நடுநடுங்கிச் சேந்தன் அமுதனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அவனிடம் மெல்லிய குரலில் "நான் இப்போது ஓடப் போகிறேன். நீ அவனைத் தடுத்து நிறுத்தப் பார்!" என்றாள்.

மந்திரவாதியைப் பார்த்து உரத்த குரலில், "என்னை ஒன்றும் செய்ய வேண்டாம். அவர்கள் இருக்கும் இடத்தைக் காட்டி விடுகிறேன்!" என்று கூறினாள்.

"என்னுடன் வா! காட்டுகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் பாழடைந்த மண்டபத்துக்கு நேர்மாறான திசையை நோக்கி நடந்தாள்.

மந்திரவாதி அவளைப் பின் தொடரப் பார்த்தான்.

சேந்தன் அமுதன் பின்னாலிருந்து அவனைப் பிடித்து நிறுத்த முயன்றான்.

பூங்குழலி ஓடத் தொடங்கினாள்.

மந்திரவாதி சேந்தன் அமுதனை ஒரே தள்ளாகத் தலைகுப்புறத் தள்ளி விட்டுப் பூங்குழலியைத் தொடர்ந்து ஓடினான்.

பூங்குழலி மானைப் போல் விரைந்து பாய்ந்து ஓடினாள்.

மந்திரவாதி மானைத் துரத்தும் வேடனைப் போல் அவளைப் பிடிக்க ஓடினான். ஆனால் அவளைப் பிடிப்பது எளிதில் முடிகிற காரியமாயில்லை.

மந்திரவாதி அவளைத் துரத்துவதை விட்டு நின்று விடலாமா என்று எண்ணிய போது பூங்குழலியும் களைத்துப் போனவளைப் போல் நின்றாள். மந்திரவாதி மறுபடியும் அவளைத் துரத்தினான்.

இருவருக்கும் பின்னால் சேந்தன் அமுதனும் தட்டுத் தடுமாறி விழுந்தடித்து ஓடி வந்து கொண்டிருந்தான். ஓடும் போது, மறைந்த மண்டபத்துக்குப் போய் அங்குள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்யலாமா என்று அவன் அடிக்கடி நினைத்தான். அதே சமயத்தில் பூங்குழலியை மந்திரவாதியிடம் தனியாக விட்டு விட்டுப் போகவும் அவனுக்கு மனம் வரவில்லை.

பூங்குழலி ஒரு மேட்டின் மீது ஏறி நின்றாள். அங்கு சற்றுக் காத்திருந்ததோடு அல்லாமல் திரும்பிப் பார்த்து மந்திரவாதியைக் கைதட்டி அழைத்தாள். மந்திரவாதி மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க அவள் அருகில் போய் நின்றான். அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவள் கன்னத்தில் நாலு அறை கொடுக்க வேண்டும் என்று அவன் எண்ணிய சமயத்தில் பூங்குழலி ''அதோ பார் என் காதலர்களை!'' என்றாள்.

அவள் சுட்டிக் காட்டிய திசையை மந்திரவாதி பார்த்தான்.

முன்னொரு தடவை வந்தியத்தேவன் கண்ட காட்சியை அவனும் கண்டான்.

சதுப்பு நிலத்தில் ஆங்காங்கு தீப்பிழம்புகள் குப் குப் என்று தோன்றுவதும் கப் கப் என்று மறைவதுமாயிருந்தன. ரவிதாஸனுக்கு அந்தப் பயங்கரத் தோற்றத்தின் காரணம் என்னவென்று தெரியுமென்றாலும், அச்சமயம் அவனுக்கு ரோமம் சிலிர்த்தது.

''மந்திரவாதி! உனக்கு மந்திரம் தெரியும் என்றால், இந்தக் கொள்ளி வாய்ப் பிசாசுகளை ஓட்டுவதற்கு ஒரு




மந்திரம் போடு, பார்க்கலாம்! அவை என்னைப் பாடாய்ப் படுத்தி வைக்கின்றன!'' என்றாள்.

ரவிதாஸனுக்கு அளவில்லாக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

''பெண்ணே! என்னை ஏமாற்றலாம் என்று பார்க்கிறாயா?'' என்று கர்ஜித்தான்.

''உன்னை எதற்காக நான் ஏமாற்ற வேண்டும்?''

''இளவரசரும் வல்லவரையனும் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன் என்று சொல்லி நீ என்னை இழுத்து அடிக்கவில்லையா?''

''அவர்கள் இறந்து விட்டார்கள் என்று நான் சொன்னதை நீ நம்பவில்லை. வேறு என்ன செய்யட்டும்?''

''இளவரசர் இறந்தது உண்மைதானா? ஆணையிட்டுச் சொல்வாயா?''

''ஆணை எதற்கு? அதோ ஆகாசத்தைப் பார்!''

ரவிதாஸன் வானத்தை நோக்கினான். வால் நட்சத்திரம் தெரிந்தது.

''வால் நட்சத்திரம் தோன்றினால் அரச குலத்தில் மரணம் என்று உனக்குத் தெரியாதா? அப்படியே நடந்து விட்டது!'' என்றாள் பூங்குழலி.

''பெண்ணே! அப்படியானால் உன் கையில் உள்ள கெண்டியை இப்படிக் கொடு! அதில் ஏதாவது மிச்சம் இருக்கிறதா? உன்னோடு ஓடி வந்ததில் எனக்குத் தாகம் எடுத்து விட்டது!.....''

பூங்குழலி திடீரென்று மறுபடி ஓட்டம் பிடித்தாள். மேட்டிலிருந்து தாவிக் குதித்து இறங்கிக் கொள்ளி வாய்ப் பிசாசுகள் தோன்றி மறைந்த சதுப்பு நிலப் பரப்பை நோக்கி ஓடினாள்.

ரவிதாஸன் ஆத்திரத்தினால் அறிவை இழந்தான். பூங்குழலியைப் பிடித்து அவளுடைய கழுத்தை நெரித்துக் கொன்று விட வேண்டும் என்ற வெறியை அடைந்தான். தலைகால் தெரியாமல் அவளைப் பின் தொடர்ந்து ஓடினான்.

சிறிது தூரம் ஓடிய பிறகு பூங்குழலி சட்டென்று கொஞ்சம் குனிந்து நாலைந்தடி ஒரு புறமாக நகர்ந்து கொண்டாள்.

அதிவேகமாக அவளைத் துரத்தி வந்த ரவிதாஸனால் அவள் நின்ற இடத்தில் நிற்க முடியவில்லை. அவளுக்கு அப்பால் சில அடி தூரம் வரையில் சென்று நின்றான். திரும்பி அவளைப் பிடிப்பதற்காகப் பாயப் பார்த்தான். ஆனால் முடியவில்லை. கால்களுக்குத் திடீரென்று என்ன நேர்ந்து விட்டது? அவை ஏன் இப்பொழுது நகரவில்லை? அவை ஏன் சில்லிட்டிருக்கின்றன?

இது என்ன? உள்ளங்காலிலிருந்து சில்லிப்பு மேலே மேலே வந்து கொண்டிருக்கிறதே? இல்லை, இல்லை! கால்கள் அல்லவா கீழே கீழே போய்க் கொண்டிருக்கின்றன!

ரவிதாஸன் குனிந்து பார்த்தான். ஆம், அவனுடைய கால்கள் கீழே புதை சேற்றில் அமிழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். ஒவ்வொரு அணுவாக, ஒவ்வொரு அங்குலமாக, அவன் கால்கள் கீழே சேற்றில் மெதுவாகப் புதைந்து கொண்டிருந்தன.

ரவிதாஸன் தன்னுடைய அபாயத்தை உணர்ந்தான். சேற்றிலிருந்து வெளிவர முயன்றான். கால்களை உதறி எடுக்கப் பிரயத்தனம் செய்தான். அவனுடைய பிரயத்தனம் பலன் தரவில்லை.

கீழே சேற்றுக்கடியில் ஏதோ ஒரு பெரும் பூதம் இருந்து அவனைப் பற்றி இழுப்பது போலத் தோன்றியது.

பூங்குழலி கலகலவென்று சிரித்தாள்.

''மந்திரவாதி! என்ன விழிக்கிறாய்? பூதத்தின் வாயில் அகப்பட்டுக் கொண்டாயா? மந்திரம் போட்டுப் பார்ப்பது தானே?'' என்றாள்.

மந்திரவாதி ஒரு பக்கம் பீதியினாலும் ஒரு பக்கம் கோபத்தினாலும் நடுநடுங்கினான்.

''அடி பாவி! உன் வேலையா இது?'' என்று கையை நெரித்தான்.

''என் கழுத்தைப் பிடித்து நெரிக்க வேண்டும் என்று நீ ஆசைப்பட்டாயல்லவா? அதற்குப் பதிலாகக் கையை நெரித்துக் கொள்!'' என்றாள்.

ரவிதாஸன் கோபத்தை அடக்கிக் கொண்டு ''பெண்ணே! சத்தியமாய்ச் சொல்கிறேன். உன்னை நான் ஒன்றும் செய்யவில்லை. சற்றுக் கை கொடுத்து என்னைக் கரையிலே தூக்கி விடு!'' என்றான்.

பூங்குழலி ஹா ஹா ஹா என்று சிரித்தாள். ''உன்னைக் கரையேற்றி விட என்னால் ஆகாது! உன் மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட பேய் பிசாசுகளையெல்லாம் கூப்பிடு!'' என்றாள்.

ரவிதாஸன் இதற்குள் தொடை வரையில் சேற்றில் புதைந்து போயிருந்தான்.

அவன் முகத்தைப் பார்க்கப் பயங்கரமாயிருந்தது. அவனுடைய கண்கள் கொள்ளிக் கட்டைகள் போலச் சிவப்புத் தணல் ஒளியை வீசின.

கைகளை நீட்டிப் புதை சேற்றுக்கு அப்பால் இருந்த கரையைப் பற்றினான். அங்கே நீண்டு வளர்ந்திருந்த கோரைப் புல்களின் அடிப்பகுதியைப் பிடித்துக் கொண்டான். மறுபடியும் சேற்றிலிருந்து வெளிவரப் பிரயத்தனம் செய்தான். ஆனால் புதைந்திருந்த கால்களை அசைக்கவும் முடியவில்லை.

''பெண்ணே! உனக்குப் புண்ணியம் உண்டு! என்னைக் காப்பாற்று!'' என்று ஓலமிட்டான்.

இதற்குள்ளே அங்கே சேந்தன் அமுதன் வந்து சேர்ந்தான். ரவிதாஸனுடைய நிலைமை இன்னதென்பதை அவன் ஒரு நொடியில் அறிந்து கொண்டான். அவனுடைய கண்களில் இரக்கத்தின் அறிகுறி புலப்பட்டது.

பூங்குழலி அவனைப் பார்த்து ''வா, போகலாம்!'' என்றாள்.

''ஐயோ! இவனை இப்படியே விட்டு விட்டா போகிறது!''

''ஏன்? சேற்றில் இவன் முழுதும் புதைகிற வரையில் இருந்து பார்க்க வேண்டுமென்கிறாயோ?''

''இல்லை, இல்லை! இவனை இப்படியே விட்டு விட்டுப் போனால் வாழ்நாளெல்லாம் கனவு காணுவேன். இவனைக் கரையேற்றி விட்டுப் போகலாம்.''

''அத்தான்! இவன் என்னைக் கழுத்தை நெரித்துக் கொல்ல நினைத்தான்.''

''அவனுடைய பாவத்துக்குக் கடவுள் அவனைத் தண்டிப்பார். நாம் காப்பாற்றி விட்டுப் போகலாம்.''

''அப்படியானால் உனது மேல் துண்டைக் கொடு!'' என்றாள் பூங்குழலி.

அமுதன் தன் மேல் துண்டைக் கொடுத்தான். அதன் ஒரு முனையைப் புதை சேற்றுக் குழிக்கு அருகில் இருந்த ஒரு புதரின் அடிப் பகுதியில் பூங்குழலி கட்டினாள். இன்னொரு முனையை ரவிதாஸனிடம் கொடுத்தாள்.

''மந்திரவாதி! இதோ பார்! இந்தத் துண்டின் முனையைப் பிடித்துக் கொண்டிரு! அதிக பலங்கொண்டு இழுத்தால் புதர் வேரோடு வந்துவிடும். ஆகையால் மெள்ளப் பிடித்துக் கொண்டிரு. நீயாகக் கரையேற முயலாதே! பொழுது விடிந்ததும் யாராவது இந்தப் பக்கம் வருவார்கள். அவர்கள் உன்னைக் கரையேற்றுவார்கள்!'' என்றாள்.

''ஐயோ! இரவெல்லாம் இப்படியே கழிக்க வேண்டுமா? என்னால் முடியாது. அதைக் காட்டிலும் என்னைக் கொன்று விட்டுப் போய்விடு!''

பூங்குழலி அவன் கூக்குரலைப் பொருட்படுத்தவில்லை. சேந்தன் அமுதனைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, வந்த வழியே திரும்பி ஓடத் தொடங்கினாள். அவர்கள் மேட்டின் மேல் ஏறி அப்பால் காட்டில் இறங்கும் வரையில் மந்திரவாதியின் ஓலக் குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

அந்தக் குரல் மறைந்த பிறகு, ''அத்தான்! நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தாய்! நீ எப்படி இங்கு வந்தாய்? எதற்காக?'' என்று பூங்குழலி கேட்டான்.

''பாதாளச் சிறை அனுபவத்துக்குப் பிறகு தஞ்சாவூரில் இருக்க எனக்

குப் பிடிக்கவில்லை. அடிக்கடி பழுவூர் வீரர்களும் ஒற்றர்களும் வந்து தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆகையால் பழையாறைக்குப் போனேன். குந்தவை தேவி என்னை இவ்விடம் அனுப்பினார். இளவரசருக்கு அபாயம் அதிகமாகியிருப்பதாகவும், ஆகையால் அவரை நாகப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் கொண்டு சேர்த்து விட்டு வரும்படியும் வந்தியத்தேவனிடம் சொல்லும்படி கூறினார். எனக்கும் உன்னைப் பார்த்து உன் பாட்டைக் கேட்க வேண்டும் என்று ஆசையாயிருந்தது....''

''பாட்டுக் கேட்பதற்கு நல்ல சமயம் பார்த்தாய்! இளையபிராட்டி கூறியது உண்மைதான். இளவரசருக்கு ஏற்பட்டிருக்கும் கண்டங்கள் இப்படி அப்படியல்ல. பகைவர்களின் சூழ்ச்சிகளோடு குளிர் காய்ச்சல் வேறு வந்து விட்டது...''

''ஆமாம்; நானுந்தான் பார்த்தேன். நாங்கள் இரண்டு பேருமாக அவரைத் தூக்கிக் கொண்டு போய் மறைந்த மண்டபத்தில் சேர்த்தோம். அதற்கு ரொம்பக் கஷ்டப்பட்டுப் போனோம். பூங்குழலி! நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துப் புத்த பிக்ஷுக்கள் வைத்திய சாஸ்திரம் நன்கு அறிந்தவர்கள். இளவரசரைக் குணப்படுத்தி விடுவார்கள்.''

''நாகைப்பட்டினத்துக்கு எப்படிக் கொண்டு போய்ச் சேர்ப்பது?''

''கால்வாய் வழியாகத்தான்!''

''கால்வாய் வழியாக எப்படிப் போவது? படகைத் தொலைத்து விட்டீர்களே?''

''படகு தண்ணீரில் முழுகித்தானே இருக்கிறது? திரும்ப எடுத்து விட்டால் போகிறது!''

''அப்படியானால், இன்று இராத்திரியே கிளம்பி விட வேண்டியது தான். அந்தச் சிறிய படகில் நாம் எல்லாரும் போக முடியாதே!''

''வேண்டியதில்லை, பூங்குழலி! அதெல்லாம் நாங்கள் பேசி முடிவு செய்து விட்டோம். வல்லவரையன் இங்கிருந்து நேரே பழையாறைக்குப் போவான். நானும் நீயும் இளவரசரைப் படகில் ஏற்றி நாகைப்பட்டினம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது.''

பூங்குழலிக்குப் புல்லரித்தது. மீண்டும் இளவரசருடன் பிரயாணம்! கால்வாயில், படகில், நாகைப்பட்டினம் வரையில். வழியிலே அபாயம் ஒன்றும் ஏற்படாமல் இருக்க வேண்டும்.

இருவரும் மறைந்த மண்டபத்தை அடைந்தார்கள். மண்டபத்தை நெருங்கியதும் சேந்தன் அமுதன் பலமாகக் கையைத் தட்டினான்.

''யார் அங்கே?'' என்று வந்தியத்தேவனுடைய கடுமையான குரல் கேட்டது.

''நான்தான்; சேந்தன்!''

''இன்னும் யார்!''

''என் மாமன் மகள்!''

வந்தியத்தேவன் மண்டபத்தின் வாசலில் வந்து எட்டிப் பார்த்தான்.

''வேறு யாரும் இல்லையே?''

''இல்லை! ஏன் சந்தேகம்?''

''மெள்ளப் பேசுங்கள்; இளவரசர் தூங்குகிறார். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இங்கே யாரோ ஒருவன் வந்தான். நீதானாக்கும் என்று நினைத்து வெளியில் வந்தேன். நீ இல்லை. மந்திரவாதியைப் போல் தோன்றியது.''

''அப்புறம்?''

''அச்சமயம் உன் பாட்டின் குரல் கிளம்பியது. பாடுவதற்கு நல்ல நேரம் பார்த்தாய் என்று எண்ணிக் கொண்டேன். நல்ல வேளையாக அதை மந்திரவாதியும் கேட்டு விட்டுத் திரும்பிப் போனான். அவனை நீங்கள் பார்த்தீர்களா!''

''பார்த்தோம்.''

''அவனை என்ன செய்தீர்கள்?''

''நான் ஒன்றும் செய்யவில்லை! இவள்தான் அவனைப் புதை சேற்றுக் குழியில் இடுப்பு வரையில் இறக்கி நிறுத்திவிட்டு வந்திருக்கிறாள்!''

''இவளுடைய குரல் கூடக் கேட்டதே!''

''ஆம்; இவளும் ஒரு பாட்டுப் பாடினாள்.''

''அதைக் கேட்டதும் இளவரசருக்குச் சுய உணர்வு வந்தது போலத் தோன்றியது. 'யார் பாடுகிறது?'

என்று கேட்டார். 'ஓடக்காரப் பெண்!' என்றேன். பாட்டைக் கேட்டுக் கொண்டே தூங்கி விட்டார்.''

பூங்குழலிக்கு மீண்டும் மெய் சிலிர்த்தது.

''இவன் பாட்டு மட்டுந்தானா பாடினான்? ஆந்தை போலவுங் கத்தினானே?''

''அதுவும் என் காதில் விழுந்தது. காட்டில் ஏதோ அதிசயம் நடைபெறுகிறதென்று நினைத்துக் கொண்டேன். நீங்கள், — அத்தானும் மாமன் மகளும், வசந்தோத்ஸவம் கொண்டாடுகிறீர்களோ என்று நினைத்தேன்.....''

''இது என்ன வீண் பேச்சு?'' என்றாள் பூங்குழலி.

''வேறு என்ன செய்வது? இரவை எப்படியேனும் கழித்தாக வேண்டுமே?'' என்றான் வந்தியத்தேவன்.

''இல்லை; பொழுது விடிந்து இங்கே இருந்தால் தப்பிப் பிழைக்க முடியாது. இராத்திரியே புறப்பட்டாக வேண்டும்.''

அச்சமயம் எங்கேயோ வெகு தூரத்தில் நரிகள் ஊளையிடத் தொடங்கின. அந்த ஊளைச் சத்தத்துக்கு இடையில் ஆந்தைக் குரல் ஒன்றும் கேட்டது.

சேந்தன் அமுதன் நடுங்கினான். அவன் மனக் கண்ணின் முன்னால் மந்திரவாதி சேற்றில் புதைந்திருப்பதும், அவனைச் சுற்றி நரிகள் ஊளையிட்டுக் கொண்டு நெருங்கி நெருங்கி வருவதும், மந்திரவாதி ஆந்தை போல் கத்தி நரிகளை விரட்டப் பார்ப்பதும் தென்பட்டன.

வந்தியத் தேவனும் சேந்தன் அமுதனும் இளவரசரின் தூக்கம் கலையாமல் தூக்கிக் கொண்டார்கள். பூங்குழலி பின் தொடர்ந்து சென்றாள்.

கால்வாயின் கரையை அவர்கள் அடைந்த போது சந்திரன் உதயமாகியிருந்தது.

கரையில் இளவரசரை ஒரு மரத்தின் பேரில் சாய்ந்து படுக்க வைத்தார்கள். பூங்குழலியை அவர் பக்கத்தில் இருக்கச் செய்துவிட்டு வந்தியத்தேவனும் சேந்தன் அமுதனும் தண்ணீரில் இறங்கினார்கள். முழுகிப் போயிருந்த படகை மிகப் பிரயாசையுடன் மேலே எடுத்துக் கரையோரமாகக் கொண்டு வந்தார்கள்.

இளவரசர் கண் விழித்தார். மிக மெல்லிய குரலில், ''தாகமாயிருக்கிறது!'' என்றார்.

பக்கத்தில் இருந்து அவரைப் பார்த்துக் கொண்டிருந்த பூங்குழலி கெண்டியிலிருந்த பாலை அவருடைய வாயில் ஊற்றினாள்.

சிறிதளவு பால் அருந்திய பிறகு இளவரசர் ''பூங்குழலி! நீதானா? சொர்க்கலோகத்தில் யாரோ ஒரு தேவ கன்னிகை என் வாயில் அமுதத்தை ஊற்றுவது போலத் தோன்றியது'' என்றார்.

(தொடரும்)

தண்டிக்கப்படும் நியாயங்கள்

"காம்ரெட் ப்ரஸிடெண்ட், இப்ப நீங்க கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானம் — அதாவது சம்பள உயர்வும், அதிக சதவிகித போனஸும் கேட்கிற இந்தத் தீர்மானம் — எனக்குச் சரியாப் படலே!"

— புதிதாகச் செயற்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ராமகிருஷ்ணன், இப்படிச் சொன்னவுடன், அந்த வங்கி ஊழியர்களின் தொழிற்சங்கச் செயற்குழு ஸ்தம்பித்தது. அடுத்து அவன் பேசியது அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

"இப்ப நாமெல்லாம் ஓரளவு நல்ல சம்பளம் வாங்கிண்டுதான் இருக்கோம். நாமே இன்னும் அதிகச் சம்பளம், அதிக போனஸ்னு போராட்டம் நடத்தினா, நிர்வாகம்தான் என்ன செய்யும், அரசாங்கம்தான் என்ன செய்யும்?" என்று கேட்டான் ராமகிருஷ்ணன்.

"...இப்ப நம்ப கூட்டத்திலேயே பாருங்க. யாரு கையிலே மோதிரமும் கடிகாரமும் இல்லே? யாரு விலையுயர்ந்த பேண்ட், ஷர்ட் போட்டுக்கலே? யார் வீட்டிலே டீ.வி., மிக்ஸி, கிரைண்டர்னு நவீன வசதிகள் இல்லே? இப்படி ஓரளவுக்கு வசதியா வாழுற நாமே இன்னும் இன்னும் கேட்டுக்கிட்டிருந்தா, மத்த ஏழை ஜனங்களை அரசாங்கம் கவனிக்கிறதெப்போ?"

அதிர்ச்சியிலிருந்து முதலில் விடுபட்ட ரவி, "என்ன இது காம்ரெட், இப்படி கேட்டுட்டீங்க? விலைவாசியெல்லாம் நாளுக்கு நாள் விஷம் போல ஏறிண்டேயிருக்கு. தெரியுமில்லே? உங்க வீட்லேயே போய் கேட்டுப் பாருங்க! போன மாசம் நானூறு ரூபாய்க்கு வாங்கின அதே மளிகைச் சாமான்கள் இந்த மாசம் ஐந்நூறு ரூபாய் ஆயிடுச்சுன்னு சொல்லுவாங்க. விலைவாசி ஏறச்சே அதிக சம்பளம் கேக்கறதால என்ன தப்பு இருக்கு?" என்று கொஞ்சம் நிதானமாகவே கேட்டான்.

"நீங்க சொல்றது சரின்னே வச்சிப்போம் ரவி. விலைவாசியெல்லாம் ஏன் ஏறுது? நம்ப சம்பளத்தை அவன் கூட்டித் தர்றான். ஆனா நாம்ப வேலை நேரத்தைக் கூட்டிக்கிறோமா? இல்லையே? நாம மட்டும் எப்பவும் செய்யற அதே வேலையைத்தான் செய்யணும். ஆனா சம்பளம் மட்டும் கூடிகிட்டே போகணும்னா எப்படி? பணவீக்கத்துக்குச் சமமாக உற்பத்தி பெருகாது. விலைவாசி ஏறத்தான் செய்யும்" என்ற ராமகிருஷ்ணன், "அது மட்டுமில்லே, விலைவாசி நமக்கு மட்டும்தானா ஏறுது? பிளாட்பாரத்திலே வசிக்கிற சுப்பனுக்கும் குப்பனுக்கும் கூடத்தான் ஏறுது! அவங்க யார்கிட்டே போய்ச் சம்பள உயர்வு கேப்பாங்க?" எனக் கேட்டான்.

அதைக் கவனிக்கறது நம்ப வேலையில்லே. அதுக்குத்தான் அரசாங்கம்னு ஒண்ணு இருக்கு" இடக்காகப் பதில் வந்தது குருவிடமிருந்து.

"அங்கேதான் உங்களோட என்னாலே ஒத்துப் போக முடியலே காம்ரெட்" என்ற ராமகிருஷ்ணன் "நமக்கு, — அதாவது — பேங்க்ஸ், எல்.ஐ.ஸி., மத்திய அரசு நிறுவனங்கள், அரசு ஊழியர்கள் — எல்லாருக்கும் பெரிய பெரிய ஸ்ட்ராங்கான யூனியன் இருக்கு. அரசாங்கத்தையே அடிபணிய வைக்கக் கூடிய அளவுக்குச் சக்தி இருக்கு — என்பதாலேயே நாமே இன்னும் அதிக அதிகமாகக் கேட்டு வாங்கிட்டேயிருக்கிறது.

மற்ற நம்ப சகோதர பொது மக்களைப் பற்றிக் கவலையேபடாமல் இருக்கிறது எனக்குச் சரியாப் படலே. இது எப்படியிருக்குத் தெரியுமா? நாலு குழந்தைகள் இருக்கிற ஒரு வீட்லே, கொஞ்சம் வளர்ந்த பெரிய குழந்தை, தந்தை கொண்டு வரும் தின்பண்டங்களை எல்லாம், மற்ற குழந்தைகளுக்குக் கொடுக்க விடாமல் தானே அடம் பிடித்து வாங்கிச் சாப்பிட்டு விடுவதைப் போல் உள்ளது. ஒரு நாள் நிச்சயம் அப்பாவுக்குக் கோபம் வரும். அடிச்சுடுவார். இல்லேன்னா, மற்ற நோஞ்சான் குழந்தைகள் ஒண்ணா சேர்ந்து இவனை அடிச்சுடும் ஞாபகம் வைச்சுக்குங்கோ" என்ற ராமகிருஷ்ணன், "நமக்கு, நமக்கு என்கிற குறுகிய வட்டத்துக்குள்ளேயிருந்து விடுபட்டு, சமுதாயத்தின் மற்ற பகுதியினரையும் கொஞ்சம் கவனிக்கணும்னு நான் நினைக்கிறேன்" என்று முடித்ததும் அதுவரை பேசாமல் அமர்ந்திருந்த தலைவர் பஞ்சாபகேசன் எழுந்தார்.

தம்பி ராமகிருஷ்ணன்" என ஆரம்பித்

சத்யா ஸ்ரீனிவாசன்

தார். "இப்பதான் நீங்க கமிட்டியிலே புதுசா சேர்ந்திருக்கீங்க. முதல்லே 'யூனியன்'னு என்ன? அதனோட கடமைகள் என்னன்னு தெரிஞ்சுக்கணும்'' என்று தொடர்ந்தார். ''நம்முடைய 'அரசியல் நிர்ணயச் சட்டம்' அரசாங்கத்திற்கு இரண்டு கடமைகளைக் கொடுத்திருக்கு. முதலாவது, 'வயது வந்த திறமையுள்ள எல்லோருக்கும் வேலை; இரண்டாவது வேலைக்கேத்த ஊதியம். இரண்டையும் தர வேண்டியது அரசின் கடமை. அரசாங்கம் தன்னுடைய முதல் கடமையைச் செய்யத் தவறிடுச்சு — இரண்டாவது கடமையையாவது ஒழுங்கா செய்யணும் இல்லையா? அதைக் கண்காணிக்கிறதுதான் நம்மோட வேலை. அதைத்தான் நாம்ப இப்ப செய்யறோம். போதுமா? இப்ப இந்தத் தீர்மானத்தைப் 'பாஸ்' பண்ண விடுங்க'' என்று ஒரு சொற்பொழிவு நிகழ்த்தி முடித்தார். உடனே பலமான கைத்தட்டல்களும் எழுந்தன. கைத்தட்டல்கள் அடங்கும் வரை பொறுமையாக நின்றிருந்த ராமகிருஷ்ணன் மீண்டும் ஆரம்பித்தான்.

"மன்னிக்கணும் தலைவரே. நான் அப்படியெல்லாம் நினைக்கலே. யூனியன்னாலே எப்பவும் அதிக சம்பளத்துக்காகக் கூச்சல் போடற கும்பல். ஸ்டிரைக், போராட்டம்னு கலாட்டா பண்ற கும்பல்னு ஜனங்க நினைக்கறாங்க. அதுக்குக் காரணமே நாமதான். தொழிலாளர்களுக்கு அதிக வருமானம் வாங்கித் தர்றது யூனியனோட ஒரு வேலை மட்டுமே. அதுமட்டுமே வேலை அல்லன்னு மக்களுக்குக் காட்டணும். யூனியன்கறது மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தணும்னு நான் நினைக்கிறேன். அப்பத்தான் பொது மக்களிடையே யூனியன்களைப் பத்தி ஒரு நல்ல அபிப்ராயம் ஏற்படும். எதற்கெடுத்தாலும் ரஷ்யாவைப் பார், ஜப்பானைப் பார்ன்னு பேசற நாம், இந்த விஷயத்திலே ஏன் ரஷ்யாவைப் பாத்துக் கத்துக்கக் கூடாது? ரஷ்யா போன்ற நாடுகள்லே யூனியனோட வேலை என்ன தெரியுமா? நிர்வாகத்தோட தோளுக்குத் தோள் சமமா நின்னு, உற்பத்தி பெருகச் சகலவிதமான முயற்சிகளையும் செய்யணும். அங்கே போராட்டம், ஸ்டிரைக், மெதுவாக வேலை செய்தல் என்பதெல்லாம் கிடையாது.''

இடையே புகுந்தார் தலைவர் பஞ்சாபகேசன்.

''அங்கேயெல்லாம் தொழிலாளர்கள் நிர்வாகத்திலேயும் பங்கெடுத்துக்கறாங்க. மானேஜ்மெண்ட் கமிட்டியிலே இருக்



காங்க. நிர்வாகத்தோட ஒவ்வொரு நடவடிக்கையும் 'ஜாயிண்ட் கன்ஸல்டேஷன் கமிட்டியிலே தீர்மானமாவுது. அதுலே தொழிலாளர்கள் பங்கு வகிக்கிறாங்க. நம்ப நாட்லே அப்படியில்லேயே?'' என்றார்.

''ஏன் இல்லே தலைவரே? நம்ப பாங்க்லே கூடத்தான் போர்ட் அப் டைரக்டர்ஸ்லே நம்ப இரண்டு பிரதிநிதிங்க இருக்காங்க. ஆனா அவங்க என்ன பண்றாங்க? ஒட்டு மொத்தமா நிர்வாகத்தோட எல்லா விஷயங்கள்லேயும் தங்களை ஈடுபடுத்திக்காமே, எந்தவிதமான பொறுப்பையும் ஏத்துக்காமே, சும்மா ஊழியர்களைப் பற்றிய விஷயம் இருந்தா மட்டுமே பேசறாங்க. அது யாரோட தப்பு?''

விஷயம் திசை திரும்பி எங்கெங்கோ போவதைக் கண்ட உதவித் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, ''இப்ப என்னடா சொல்றே தொழிலாளத் துரோகி! இந்தத் தீர்மானத்தை பாஸ் பண்ண விடப் போறியா இல்லையா?'' என்று உரக்க கத்த, மற்றவர்களும் ஒரு சேர்ந்து ''தொழிலாளத் துரோகி; தொழிலாளத் துரோகி; நிர்வாகத்தினரின் கைக்கூலி'' எனச் சப்தமிட, தலைவர் ஒரு சின்ன புன்னகையுடன், அவர்கள் கூறுவதை ஆமோதிப்பது போல் இருந்தார்.

அது வரையில் பொறுமையாகப் பேசிக் கொண்டு வந்த ராமகிருஷ்ணன் பொறுமை யிழந்தான்.

''தொழிலாளின்றது யார் தெரியுமா உனக்கு? நாம எல்லாம் தொழிலாளின்னு சொல்லியிருக்கிறதே தப்பு. நாள் பூரா வெயில்லே உட்கார்ந்து கல்லு உடைக்கறவன் தொழிலாளி, காலையிலே அஞ்சு மணியிலேர்ந்து இரவு ஒன்பது மணி வரைக்கும் கரும்புத் தோட்டத்திலேயும், வயல்களிலும் வேலை செய்யறவன் தொழிலாளி, ராத்திரி பத்து மணிக்கு மேலே, வாழைத் தோட்டங்களுக்கு நடுவே, பாம்புங்களோட போராடிக்கிட்டே மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சறானே, அவன் . தொழிலாளி, நாள் முழுதும் வெயில்லே வெந்து பஸ் ஸ்டாண்டலேயும், ரயில்வே ஸ்டேஷன்லேயும் மூட்டைத் தூக்கறானே, அவன் தொழிலாளி, ஏ.ஸி. ஹால்லே உக்கார்ந்து பக்கத்து ஸீட் லேடி க்ளார்க்கிட்டே அரட்டை அடிச்சுகிட்டே கால்குலேட்டர்லே கூட்டி, கழிக்கற நாமும் தொழிலாளின்னா, தொழிலாளிங்கற வார்த்தைக்கே அர்த்தமில்லாமே போயிடும். நாம் எல்லாம் 'தொழிலாளீ'ங்கற போர்வையிலே புகுந்துண்டு, பெரிய பெரிய யூனியன்களை வெச்சுக்கிட்டு, அரசாங்கத்தை மிரட்டி, அதிக லாபம் சம்பாதிச்சுட்டு வர்றோம். நம்பளையெல்லாம் 'தொழிலாளி'ன்ற வார்த்தையாலே குறிப்பிடறதே சரியல்ல. வேறு ஏதாவது வார்த்தையைக் கண்டுபிடிக்கணும்.''

— ஆவேசம் வந்தவன் போல் அவன் கத்தி முடித்ததும் 'ஹூம் இவன் உருப்பட மாட்டான். இவனை ஏதாவது பண்ணினாத் தான் முடியும்' என்ற முடிவுக்கு வந்து விட்ட தலைவர் பஞ்சாபகேசன் உதவித் தலைவரிடம் ஏதோ முணுமுணுத்தார்.

உப தலைவர் 'ஆமாம்' என்பது போல் பலமாகத் தலையசைத்தார். அன்றைய கூட்டம் அதோடு முடிந்தது.

பத்து நாட்களுக்குள் ராமகிருஷ்ணனுக்கு அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள ஒரு குக்கிராமத்திற்கு மாற்றல் உத்தரவு வந்த போது அவன் வியப்படையவில்லை. அவனுக்குத் தெரியும் நிர்வாகம் யூனியனுக்கு அடிபணிந்தே தீரும் என்று..

அருள்வாக்கு

ஜீவனத்துக்குப் பணமும் அவசியந்தான். வைராக்கியம், ஸந்நியாஸம் என்று உபதேசித்தால் பிரயோஜனமில்லையென்றே அர்த்த சாஸ்திரத்தைக் கொடுத்தாற்போலவே, சரீர பலத்தாலும் ஆயுத பலத்தாலும் ரக்ஷித்துக் கொள்ள வேண்டியதும் அவசியந்தான் என்றே தநுர் வேதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆயுதமில்லாமலே குத்துச் சண்டை, மல்யுத்தம் முதலியனவும் தன்னுடைய சரீர பலம் ஒன்றை மாத்திரமே கொண்டு செய்வதுண்டு. ''மல்லர்கள்'' என்று மல்யுத்த வீரர்களைச் சொல்வார்கள் மஹாமல்லன், மாமல்லன் என்றே நரஸிம்ஹவர்மா என்கிற பல்லவ ராஜா பட்டப் பேர் வைத்துக் கொண்டிருந்தான். ''என்ன, மல்லுக்கு நிற்கிறே?'' என்று கேட்பதிலிருந்து இது பெரியயுத்த தந்திரமாயிருந்தது தெரிகிறது. கிருஷ்ண பரமாத்மா சாணூரன், முஷ்டிகன் என்பவர்களோடு மல்யுத்தம் பண்ணிக் கம்ஸ சபையில் ஜயித்திருக்கிறார். ஜராஸந்தனோடு பீமஸேனன் மல்யுத்தந்தான் பண்ணி அவனைக் கொன்றான்.



தர்ம ரக்ஷைக்காகவே இப்படிப் பல நிறுவில் சரீரத்தைக் கொண்டும், ஆயுதத்தைக் கொண்டும் தன்னுடைய சரீரத்தையும் தன் நாட்டு மக்களின் சரீரத்தையும் ரக்ஷித்துக் கொள்வதற்கு தநுர் வேதம் வழி சொல்லிக் கொடுக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

தி மயிலாப்பூர் இந்து சாசுவத நிதி லிமிடெட்

ஸ்தாபிதம் 1872

பதிவு அலுவலகம் : 32 & 33, தெற்கு மாடவீதி
மயிலாப்பூர், சென்னை - 600 004.
போன் : 71099.

கிளைகள் :

பார்க் டவுன் கிளை:
207, தங்கசாலை தெரு,
சென்னை - 600 003.
போன் : 563588

வண்ணாரப்பேட்டை கிளை:
528, திருவொற்றியூர்
நெடுஞ்சாலை
சென்னை - 600 021.
போன் : 551346

சைதாப்பேட்டை கிளை:
41, சுப்பிரமணிய
முதலி தெரு,
சென்னை - 600 015.
போன் : 440841

பிக்செட் டெபாசிட்டுகள்

6 மாதங்களுக்கு	10½% வீதம் வட்டி
1 வருடத்துக்கு	12% வீதம் வட்டி
2 வருடத்துக்கு	13% வீதம் வட்டி
3 வருடத்துக்கு	14% வீதம் வட்டி

ரூ. 5000/— க்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டிற்கு வட்டி மாதந்தோறும் வழங்கப்படும்.

மறுமுதலீடு திட்டம்

டெபாசிட் தொகை	36 மாதங்கள்	54 மாதங்கள்	72 மாதங்கள்
ரூ.	ரூ.	ரூ.	ரூ.
500	780	1,000	1,260
1,000	1,560	2,000	2,520
5,000	7,800	10,000	12,600

கேஷ் சர்டிபிகேட்

இன்றே ரூ. 757/-ஐ எங்கள் பணப் பத்திரங்களில் முதலீடு செய்து 24 மாதங்கள் கழித்து ரூ. 1000/-ஐ பெற்றுக் கொள்ளுங்கள்

ரெக்கரிங் டெபாசிட்டுகள்

டெபாசிட் தொகை	மாதங்கள் 12	24	36	48	60	72
ரூ. 10	128	275	438	620	830	1,050

எம்.ஜி. மோகன்ராஜ்
தலைவர்.

கே. சுவாமிநாதன்
துணைத் தலைவர்

எம். கோதண்டராமன்
ஆக்டிங் செயலாளர்

(பங்குதாரர்களுக்கு மட்டும்)

ஆகவே, செக்ஷன் 302படி...

பட்டுக்கோட்டை பிரபாகர்

16

மார்புக்குக் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டு இலக்கியக் கூட்டத்தில் தமிழ்த் தாய் வாழ்த்துக்கு நிற்பவனாய், சாதுவாய் நின்றான் ஷியாம். ஆனால் விழிகளுக்குக் காமம் சாமரம் வீசிக் கொண்டிருக்க... உதடுகளில் வெற்றிப் புன்னகை சிம்மாசனம் இட்டு அமர்ந்திருந்தது.

நிவிதாவுக்கு அவன் செயலும் புரியவில்லை. சொல்லும் புரியவில்லை. முக்கியமாகப் பேச வேண்டும். அதனால் ஓவர் டைம் செய்வதாய்ச் சொல்லிவிட்டு, அலுவலக நேரம்முடிந்த பின்னும் காத்திருக்கச் சொன்னார். ஒப்புக் கொண்டேன். வருகிறார். என் கைப்பையைக் கேட்கிறார். நான் இயல்பாக எடுத்துத் தருகிறேன். அதில் ஏதோ கவரை வைத்து மூடி என் மேஜைக்குள் வைத்துப் பூட்டி, சாவியைப் பாக்கெட்டில் போட்டுக் கொள்கிறார். என்னவோ உண்மைகள் பேசுவோமா என்கிறார், டார்லிங் என்கிறார்.

என்ன இதெல்லாம்?

"நிவிதா, அதிர்ச்சியா இருக்கா? குழப்பமா இருக்கா?"

"ரெண்டும்."

"உக்காரு. உக்காரு. விவரமா சொல்றேன்."

இதுவரைக்கும் மரியாதையாக, வாங்க, போங்க என்றே பேசிக் கொண்டிருந்தவர் இப்போது ஒருமையில் பேசுகிறாரே... ஏன்? பதவித் திமிரா?

"சார், மரியாதை கொடுத்துப் பேசுங்க' என்றாள் கோபமாக.

"கொடுத்துட்டாப் போச்சு. சீரும் உக்காரும்மா. பேசி ஒரு முடிவுக்கு வரலாம். உன் சம்மதம் இல்லாம இங்கே எதுவும் நடக்கப் போறதில்லை. சிட் டவுன் ப்ளீஸ்..."

தன் நாற்காலியில் அமர்ந்தாள். ஷியாம் அமராமல், எதுவும் பேசாமல் அவளை எதிர் பார்க்க வைத்து, தவிக்க வைத்து... நடந்து சென்று வாட்டர் கூலரில் தண்ணீர் பிடித்துக் குடித்துவிட்டு, ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு அவள் மேஜையை அணுகி, லெட்ஜர்களை நகர்த்திவிட்டு ஓர் ஓரத்தில் அமர்ந்தான்.

"நிவிதா, நீ ரொம்ப அழகா இருக்கே" என்றான் நிதானமாக.

"சார்! இதைச் சொல்லத்தான் என்னை ஆபீஸ் முடிஞ்சதும் இருக்கச் சொன்னீங்களா?"

"இது முன்னுரை நிவிதா."

"நான்சென்ஸ்! நீங்க நடந்துக்கிற முறை எதுவும் எனக்குப் புரியலை. ஆனால் நாகரிகமா இல்லைன்னு மட்டும் புரியுது."

"அப்படியா? நீ முதலில் நாகரிகமா நடந்துக்கிட்டதுக்கப்புறம், மற்றவங்ககிட்டேயும் நாகரிகத்தை எதிர்பார்க்கிறது நல்லது."

"நான் என்ன சார் தப்பா நடந்துக்கிட்டேன்?"

"நான் அவ்வளவு தூரம் எச்சரிக்கும், கண்டிக்கும் கேவலம் இருபத்தையாயிரம் ரூபாய்க்காக இந்தக் கம்பெனிக்குத்துரோகம் செஞ்சிட்டியே... இந்த ஆபீஸ் இன் சார்ஜுங்கிற முறையிலே நான் நடவடிக்கை எடுக்காம இருக்க முடியுமா?"

"புரியலை. நான் என்ன துரோகம் செஞ்சேன்?"

"ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் வழக்கு சம்பந்தப்பட்ட முக்கியமான ஆதாரங்களை என் ரூம்லேர்ந்து திருடி உன் கைப்பையிலே வச்சிருக்கியே இது துரோகமில்லையா?"

"நானா? இப்ப நீங்கதானே என் கைப்பையைக் கேட்டு வாங்கி அதிலே வச்சீங்க. அதிலே வச்ச கவர் அந்த ஆதாரங்கள் கொண்ட கவரா? ஏன் வச்சீங்க? இப்ப ஏன் இப்படிப் பேசறீங்க?"

"நிவிதா, இப்ப நான்தான் வச்சேன். ஒத்துக்கறேன். இதை உங்கிட்டே மட்டும் தான் ஒத்துப்பேன். இப்ப நான் போன் செய்யப் போறேன். யாருக்கு? நம்ம ஏரியா போலீஸ் ஸ்டேஷனுக்கு. என்ன சொல்லப் போறேன்? 'சார், சார், என் மேஜை டிராயர்ல ஒரு வழக்கு சம்பந்தப்பட்ட முக்கியமான டாகுமெண்ட்சைக் காணோம். அதை இங்கே வேலை பார்க்கிற நிவிதாங்கிற பொண்ணு எடுத்திருக்கணும்ங்கிறது என் சந்தேகம். அந்தப் பொண்ணு இப்போ

ஓவர்டைம் வேலை செஞ்சிக்கிட்டிருக்கு. வந்து விசாரிங்க'ன்னு சொல்வேன். இன்ஸ்பெக்டர் வருவார். மேஜையைத் திறப்பார். கைப்பை இருக்கும். கைப்பையைத் திறப்பார். டாகுமெண்ட்ஸ் கவரும் இருக்கும். அது மட்டுமா இருக்கு? டிராஃப்ட் வேறே இருக்கே. அவர்கிட்டே பையில் கவரை நான்தான் வெச்சேன்னு நான் ஒப்புக்குவேனா? நான் என்ன அவ்வளவு மடையனா? இதுக்கா இவ்வளவு பொறுமையாத் திட்டம் போட்டேன்? நீயே சொல்லும்மா."

"திட்டமா? போலீஸா? என்ன சார்? ஏன் இப்படி எல்லாம் பேசறீங்க? அபாண்டமாப் பழிசுமத்தப் பார்க்கறீங்களே... எனக்கு முழுக்கப் புரியலே. என்ன இதெல்லாம்?"

"புரியலே? நிஜமாப் புரியலே?"

ஷியாம் மேஜையிலிருந்து குதித்தான். பேண்ட்டின் இரு பாக்கெட்டுகளிலும் கைகளை நுழைத்துக் கொண்டு சற்று உலாத்தினான்.


"நிவிதா, வரிசையா சில அதிர்ச்சிகளைத் தர வேண்டியிருக்கு தாங்கிக்க. உனக்கு உன் ஹாஸ்டலுக்குப் போக்கே அனுப்பினது... நான்தான்."

"சார்!" என்று அதிர்ந்தான்.

"ஆமாம். உனக்குப் புடைவை பார்சல் அனுப்பினது... நான்தான். உன்னோட போன்ல பேசி ஹோட்டலுக்கு நீ போய் ஏமாற வழி வகுத்தது நான்தான். உனக்கு டிராஃப்ட் வர ஏற்பாடு செஞ்சதும் நான்தான். இனிமேல் சஸ்பென்ஸ் வேணாம். இதெல்லாம் ஏன் செஞ்சேன்? உன்னை இந்தச் சிக்கல்ல மாட்டி வைக்க. நீ புத்திசாலிப் பொண்ணு. இப்ப நீ எவ்வளவு பெரிய பிரச்னையிலே மாட்டிக்கிட்டிருக்கேன்னு புரிஞ்சிருக்கும். ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் கிட்டே பணம் வாங்கிக்கிட்டு கம்பெனிலேர்ந்து ரெக்கார்ட்ஸ் திருடினதா போலீஸ் உன்னைக் கைது செஞ்சு கேஸ் போட வசதியா சட்ட பாய்ண்ட்ஸ் பூரா தயார். உனக்கு போன் வந்ததை செக்ஷன் ஹெட் சாட்சி சொல்வார். உன்னை ஹரி நேரில் சந்திக்கச் சொல்லி வந்த லெட்டர் பிரதி இருக்கு. நான் உன்னைச் சந்தேகப்பட்டு விசாரிச்சதையும் அந்தோணி சாட்சி சொல்வார். உன் பேர்ல டிராஃப்ட் வந்திருக்கு ரெஜிஸ்டர்ட் தபால். நீயே கையெழுத்துப் போட்டு வாங்கி இருக்கே. இந்த வழக்கு ஆதாரங்களிலே உன் ரேகைகள் இருக்கு. அதைப் பதிய வைக்கத்தான் காலேல இயல்பா கொடுத்துப் படிக்க வைச்சேன். இப்போ என் பாக்கெட்ல இருக்கிற சாவியைப் போட்டு உன் மேஜை டிராயரை இன்ஸ்பெக்டர் திறக்க வேண்டியதுதான் பாக்கி. நான் போலீசுக்குப் போன் செய்ய வேண்டியதுதான் பாக்கி. செஞ்சிடட்டுமா?"

நிவிதா அப்படியே உறைந்து போய் அமர்ந்திருந்தாள். எவ்வளவு பெரிய விபரீதத்தில் சிக்கியிருக்கிறோம் என்பது உறைத்





''பீச் பக்கத்தில் இருக்கிற உங்க ஹோட்டலில் வியாபாரம் எப்படி?''


''நல்லாக் காத்து வாங்குது!''

— அ. பெ. ரவி.



முல்லா நஸ்ருத்தீனின் சவாரிக் கழுதை ஒரு நாள் காணமற் போய் விட்டது. அதைப் பற்றி விசாரிக்க வந்த நண்பரிடம் முல்லா மகிழ்ச்சியுடன், ''நான் அல்லாவுக்கு நன்றி செலுத்துகிறேன்'' என்றார். நண்பர் வியப்புடன், ''ஏன்?'' என்று கேட்க, முல்லா கூறினார், ''அது காணமற் போகும் போது நல்ல வேளையாக அதன் மேல் நான் இல்லை. இருந்திருந்தால் நானும் காணமற் போயிருப்பேனே!''

—மஞ்சு தேவன்.



''ஒரு பெண் வேட்பாளருக்காக உங்க தொகுதியை விட்டுக் கொடுத்திட்டீங்களாமே! யாருங்க அந்தப் பெண்?''

''வேற யார்? என் சம்சாரம்தான்!''

— சாணக்கியன்.

தது. நேர்த்தியாக இதில் சிக்க வைத்திருக்கிறான் இவன். ஏன்?

''என்ன பார்க்கிறே? எல்லாம் சரி. எதுக்காக என்னை இப்படிச் சிக்கல்லே மாட்டி வெச்சிருக்கேடா பாவி? இதுதானே உன் கேள்வி? சொல்லிடறேன். எல்லாம் உனக்காகத்தான்.''

''எனக்காகன்னு?''

''நிவிதா, இன்னும் உடைச்சிச் சொல்லணுமா? ஐ நீட் யூ. கவனமாத்தான் சொல்லியிருக்கேன். ஐ லவ் யூன்னு சொல்லியிருந்தா நீ முறைக்கலாம். நீ எனக்குத் தேவை. ஒரே ஒரு தடவை தேவை. இன்னும் புரியலேன்னு...''

''யூ... ஸ்கௌண்ட்ரல்! ச்சே! இவ்வளவு மோசமான ஆளா நீ!''

''ஆமாம். மோசமான ஆள்தான் — இந்த விஷயத்திலே மட்டும். அவசரமே இல்லே. நிதானமா யோசிச்சி முடிவுக்கு வந்தால் போதும். உன் காதல்லயோ, வாழ்க்கையிலயோ நான் அதுக்கப்புறம் தலையிடவே மாட்டேன். என்ன பார்க்கிறே? எல்லாம் தெரியும். அவன் பேர்கூடத் தெரியும். வினோத்குமார். உங்க ரெண்டு பேருக்கும் என் நல் வாழ்த்துக்கள்.''

''சாக்கடையாப் பேசற அதே வாயால வாழ்த்தும் சொல்றியே... வெக்கமா இல்லே உனக்கு?''

''தனித்தனியா ரெண்டு வாய் இருந்தா, இது நல்லதுக்கு, இது கெட்டதுக்குன்னு பிரிச்சுப் பேசலாம். நிவிதா, இதோ பாரு... தெரிஞ்சோ, தெரியாமலோ நீ என்னைச் சபலப்படுத்திட்டே. நான் ஒரு பொண்ணு மேல் குறி வெச்சிட்டா அப்புறம் அடையற வரைக்கும் தூங்கறதில்லே. நீ பூவுக்கும், புடைவைக்கும் மயங்கற ஜாதி இல்லேன்னு புரிஞ்சுக்கிட்டேன். புத்தியுள்ள பொண்ணு. ரோஷமுள்ள பொண்ணு. காதல்ல விழுந்துட்ட பொண்ணு. அதனாலே உன்னைப் புத்தியை வெச்சித்தான் மடக்கணும்னு நினைச்சேன். படிப்படியா திட்டம் போட்டு இப்போ இறுதிக் கட்டம். இப்போ இந்த நிமிஷம் உன் பலவீனம் என்னன்னு யோசி. என் பலம் என்னன்னு யோசி. முடிவுக்கு வா.''

''நோ! இவ்வளவு பேச அனுமதிச்சதே தப்பு. நகருங்க. நான் போறேன்.''

''எங்கே?''

''என் ஹாஸ்டலுக்கு.''

''போய்ட்டா? பிரச்னை முடிஞ்சு போச்சா? இவ்வளவு நேரம் நான் பேசினது எல்லாம் விளையாட்டுன்னு நினைச்சிக்கிட்டிருக்கியா? சீரியஸ்! ஹண்ட்ரட் பர்ஸெண்ட் சீரியஸ்! லஞ்சம் வாங்கின குற்றம், திருடின குற்றம், நம்பிக்கை துரோகக் குற்றம் எல்லாம் சேர்ந்து அஞ்சு வருஷத்துக்குக் குறையாம கிடைக்கும். அதுக்கு மேல கிடைக்க வைக்க முடியுமான்னு நான் பார்ப்பேன்.''

நிவிதா முகம் வெளுத்தாள். ரத்தம் துரித ஓட்டம் நிகழ்த்திக் கொண்டிருந்தது. படபடப்பு லேசான மயக்கத்தையே தந்தது.

இவன் கேட்ட கேள்விக்குத் 'தூ' என்று


வாசகர்களின்
முழு ஆதரவினால்
தனது மூன்றாவது ஆண்டை
தொடங்குகிறது க்ரைம் நாவல்.
இந்த இதழ் 262 பக்கங்கள் கொண்ட
ராஜேஷ்குமார் சிறப்பு மலராக வந்துள்ளது.
அது மட்டுமல்ல, நடிகை ராதா மற்றும் ராஜேஷ்
குமார், ஆசிரியர் அசோகன் ஆகியோரது வண்ணப்
போஸ்டர்களும்.

துப்பியிருக்க வேண்டும். காலில் உள்ளதைக் கழற்றி, கன்னத்தில் முத்திரை பதித்திருக்க வேண்டும். வார்த்தைகளை நெருப்பாய்ச் சுழற்றிக் கொட்டிவிட்டு வெளியேறியிருக்க வேண்டும்.

செய்யவில்லை. செய்ய முடியவில்லை. அவன் கோபத்தை, ஆத்திரத்தைத் தன் சதியால் தடுத்து நிறுத்தியிருக்கிறான்.

எவ்வளவு கேவலமானவன் இவன்! இந்த அளவு கீழ்த்தரமான எண்ணங்களை வைத்துக் கொண்டு ஆரம்பம் முதலே நரித்தனமாகத் திட்டம் தீட்டி...

இப்போது என்னைச் சரியான இக்கட்டில் நிறுத்தியிருக்கிறான். சட்டப்படி எனக்கு எதிராக அற்புதமாகச் சாட்சிகளையும், சாட்சியங்களையும் உருவாக்கி வைத்திருக்கிறான். சட்டம் அவற்றைத்தான் பார்க்கும். அவை உண்மையானவையா, தயாரிக்கப்பட்டவையா என்று யோசிக்காது...

இந்த நிமிடம் இவன் போலீசுக்கு போன் செய்து அவர்களும் வந்து என்னைக் கைது செய்தால்... தண்டனை படு நிச்சயம். 'இதெல்லாம் இவன் சதி' என்கிற என் குரலை எவரும் நம்பப் போவதில்லை. நம்ப வைக்க என்னிடம் ஆதாரமாக எதுவும் இல்லை. வாக்குமூலம் போல இவ்வளவு நேரம் இவன் பேசின விஷயங்களுக்குச் சாட்சி ஏது?

அய்யோ! என்ன செய்வது?

நாக்கு உலர்ந்து போன நிவிதாவுக்குக் கண்கள் இருண்டன. திமிறலாய் அழுகையும், ஆத்திரமும் வெடிப்பதற்குச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தன.

"நிவிதா, கொஞ்சம் பதற்றம் குறைஞ்சு நிதானத்துக்கு வந்திருப்பேன்னு நினைக்கிறேன். எனக்கு இந்த விஷயத்திலே வன்முறை பிடிக்காது. இப்போ நீ என்கிட்டே வசமா மாட்டிக்கிட்டிருக்கே. உனக்கு முன்னாடி ரெண்டே வழிகள்தான். ஒண்ணு, சுலபமானது. என் ஆசைக்குச் சம்மதிக்கிறது. என் தனி ரூமுக்குப் போய்டலாம். இந்தச் சிக்கல்லேர்ந்து நானே உன்னை விடுவிச்சிடுவேன். ரெண்டு கசப்பானது. என் வாழ்க்கை எப்படிப் போனாலும் சரி, நான் அவமானப்பட்டு ஜெயிலுக்குப் போனாலும் சரி, ஊரே என்னைப் பார்த்துச் சிரிச்சாலும் சரி, என் கற்புதான் எனக்கு முக்கியம்னு நீ நினைச்சுப் பிடிவாதமா இருந்துட்டேன்னா... நான் முதல்ல சொன்னபடி போலீசைக் கூப்பிட வேண்டியதுதான். உனக்கு இன்னும் நல்லா யோசிக்க ஒரு மணி நேரம் டைம் தர்றேன். நான் இப்போ போறேன் வெளியே. சரியா ஒரு மணி நேரம் கழிச்சு வர்றேன். இந்த ரெண்டு வழியில எதுன்னு முடிவு பண்ணி வை. இந்த இடத்தை விட்டுத் தப்பிச்சிடறது சுலபம். ஆனா போலீஸ்கிட்டேர்ந்து தப்ப முடியாது. அதை நினைவிலே வெச்சிக்கிட்டு யோசி. வர்றேன் பேபி.''

டாக், டாக் என்று ஷூ சப்திக்க ஷியாம் நடந்து அலுவலகத்தை விட்டு வெளியேற, படபடக்கும் இதயத்துடனும், பளபளக்கும் விழிகளுடனும் அப்படியே நின்று கொண்டிருந்தாள் நிவிதா — ஓவியமாக.

(தொடரும்)

இந்தச் சிறுவனுக்குக் கவர்னராவது கைகொடுப்பாரா?

கிராமப்புறப் பகுதிகளில் சிறந்த முறையில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் தேசியப் படிப்புதவித் தொகையைப் பெற 1985 — ஆம் ஆண்டில் நான் தேர்வை எழுதினேன். அதில் நான் இரண்டாம் ரேங்கில் வெற்றி பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக நாகர்கோவில், முதன்மைக் கல்வி அலுவலர் சான்றிதழ் வழங்கினார்.

பின்னர் நான் உயர் கல்விக்காகத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள விக்கிரமசிங்கபுரத்திலிருக்கும் ''பாபநாசம் தொழிலாளர் நல உரிமைக் கழக மேல்நிலைப் பள்ளியில் 9 — ஆம் வகுப்பில் சேர்ந்து, தற்போது +1 படித்துத் தேர்வு எழுதி வருகிறேன். 8 — ஆம் வகுப்பில் தேசிய படிப்புதவித் தொகையைப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படையில் அதற்கான வருடாந்திர உதவித் தொகையான ரூ. 750 — ஐ வழங்கக் கோரி, தற்போது பயிலும் பள்ளித் தலைமை ஆசிரியர் மூலம் 21.10.85ல் மாவட்டக் கல்வி அதிகாரி அவர்களுக்கு முறையான விண்ணப்பம் சமர்ப்பித்தேன். தொடர்ந்து, தற்போதைய தலைமை ஆசிரியர் அவர்களும் முன்பு நான் படித்த நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் அவர்களும் பல முறை நினைவூட்டியும் எனக்கு அளிக்கப்பட வேண்டிய 85 — 86, 86 — 87, 87 — 88 ஆண்டுகளுக்கான உதவித் தொகைகள் இதுவரை வழங்கப்படவில்லை.

எனது தந்தையின் மாதச் சம்பளம் தவிர, எனது குடும்பத்திற்கு வேறு வருவாய் ஏதும் இல்லை. நான் முற்படுத்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவன் என்பதால் இது போன்ற கல்வி அடிப்படையில் கிடைக்கும் உதவித் தொகை தவிர அரசில் வேறு எந்தவிதச் சலுகையும் எனக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. அந்த உதவித் தொகையும் உரிய காலத்தில் கிடைக்காமல் காலதாமதம் ஏற்படுவதால் என் போன்றோர் வாழ்க்கை எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பதை இதன் மூலம் அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். எனக்கு இவ்விஷயத்தில் யாரேனும் உதவுவார்களா?

மு. வனராஜ்சங்கர் அகஸ்தியர்பட்டி,
நெல்லை.



இவர்தான் முதல்வர்!

தமிழகத்தின் முதல்வராக மூப்பனார் வர வேண்டும்.

காரணம்: தலைவரின் சிறப்புகள்.

சாந்தமான குணம். அதிகப்பிரசங்கித்தனமான நடவடிக்கைகளில் இறங்காதவர். வம்பு தும்புக்குப் போகாதவர். எதிராளியை, பொறுக்கி, விபசாரி என்று மட்டரகமான வார்த்தைகளால் திட்டாத கண்ணியம். ஒருவருக்கு ஒருவர் சிண்டு முடிந்து விட விரும்பாதவர்.

பெரிய தனக்காரர். ஆளும் கட்சியில் இருந்தும் தமது அபரிமிதச் செல்வாக்கை உபயோகித்துச் சொத்துச் சேர்க்காத நேர்மையான மனிதர். யாரும் எப்போதும் சந்திக்கலாம்; இவரை.

எளிதில் உணர்ச்சிவசப்பட்டு, எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற அறிவிப்புகள் செய்ய மாட்டார். சிவாஜி கணேசன் விலகியதைப் பற்றிக் கேட்டபோது, வெகு சர்வ சாதாரணமாக, 'அவசரப்பட்டு விட்டார்' என்று மட்டும் சொன்னாரே, அது தன்னடக்கத்தின் பிரதிபலிப்பு. இன்னொருவராய் இருந்தால், "சிவாஜி ஒரு சுயநலமி. முப்பதாண்டு காலமாய்க் காங்கிரஸால் பிழைப்பு நடத்திவிட்டு, தீட்டிய மரத்திலேயே கூர் பாய்ச்சும் துரோகி" என்றெல்லாம் மட்டரக வார்த்தைகளைக் கொட்டியிருப்பார்கள்.

தமிழ்நாட்டில் இதுவரை ஆட்சி செய்த இரு பெரும் தலைவர்கள் — முதன் மந்திரிகள் செய்தது என்ன?

கருணாநிதி: தினமும் மத்திய சர்க்காரின் வெறுப்பைச் சம்பாதிக்கும் விதமாகவே பேசியவர், செயலாற்றியவர். அதனால் தமிழகம் பல வழிகளில் பின்தங்கி விட்டது.

எம். ஜி. ஆர்.: ஒரே சரணாகதி — தோப்புக்கரணம் போடு என்றால், 'எண்ணிக் கொள்' என்பது போல் நடந்து கொண்டார். இதனால் மத்திய சர்க்கார் நம்மை அலட்சியப்படுத்தித் தொழிற்சாலைகளை மற்ற மாநிலங்களுக்குக் கொடுத்தது.

முதன் மந்திரிக்குத் தேவைப்படும் மிக முக்கிய குணங்கள்:

கண்ணியத்துடன் நடப்பது — எதிராளிகளின் மனமும் புண்படாமல் நடந்து கொள்வது. மக்கள் நலனில் அதிக அக்கறை காண்பிப்பது. தம் நலனுக்கும் தம் கட்சி நலனுக்கும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாமலிருப்பது. வாய்ப்பந்தல் போட்டு மக்களை ஏமாற்றாமல் இருப்பது, ஆகியன. இந்தக் குணங்கள் மூப்பனாருக்கு உண்டு.

1947 முதல் 1967 வரை காங்கிரஸ் ஆட்சி நடந்தது. நேர்மையான முதல்வர்கள் இருந்தார்கள். தொழில் முன்னேறியது. ஃபைல்கள் வேகமாக நகர்ந்தன. பொது மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்கள்.

பின் ஏன் தோற்றார்கள்?

லஞ்ச விவகாரத்தாலா? உட்கட்சிச் சண்டையினாலா?

இல்லவே இல்லை —



தமிழகம் முன்னேற மூப்பனாரே முதல்வர்

மந்திரவாதி போல் 'ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுவோம்' என்று செப்பிடு வித்தை காட்டியதை நம்பி அவர்களுக்கு வோட்டுப் போட்டார்கள் மக்கள்.

மூன்று படி போட்டார்களா? இல்லை. கதை அளந்தார்கள்!

அதன்பின் கலைஞர் ஆட்சியில் சர்க்காரியா கமிஷன் விசாரணை — கோதுமை பேர ஊழல் வழக்கு.

எம். ஜி. ஆர். காலத்தில் ஃபைல்களை நகரவில்லை. கட்சியில் வெளியே தெரியாத பிளவு — சொத்து சேர்ப்பதில், லஞ்சம் வாங்குவதில் போட்டா போட்டி! வாயைத் திறந்தால் தரக்குறைவான பேச்சுக்கள்.

போதுமடா சாமி. முன்னே போன வாக்காளர்கள் கிணற்றில் விழுந்தால், பின்னால் வருபவனாவது உஷாராகி விட வேண்டாமா?

— என். சுப்பிரமணியன், சீர்காழி.

பறக்கும் நேரத்தைப் பணியச் செய்யுங்கள்!



புகைப்படம்: கே. வி. ஆனந்த்.

"என்ன கிருஷ்ணன்! மூந்தா நாள் டைப் அடிக்கக் கொடுத்த ஸ்டேட்மெண்ட் என்ன ஆச்சு...?"

"இல்லே சார்! நேற்று நிறைய வேலே இருந்ததால், அதைத் தொடவே இல்லே..."

•

"என்ன கௌரி! இந்தச் சட்டையில் பட்டன் தைக்கணும்னு சொல்லி நாலு நாளாகிறது. இன்னும் தைக்கலே!"

"நான் என்னங்க பண்ண? எனக்குக் கையே ஒழியலே"

•

"சத்தீஷ்! ஏன் அசைன்மெண்ட் முடிக்கலே?"

"நேற்று ஒரு டெஸ்ட். அதற்குத் தயார் பண்ணிக் கொள்ள வேண்டியிருந்தது. அதுக்கே டைம் போறலே..."

இப்படி யாரைப் பார்த்து, ஏன் காரியம் ஆகவில்லேயென்றாலும், உடனடியாக வரும் பதில் — நேரமில்லே என்பதுதான். உண்மையிலேயே நேரம் இல்லாமல் போகிறதா? இதற்குக் காரணம் என்ன? இதைச் சமாளிப்பது எப்படி? இந்தப் பேட்டியில் விளக்கமாய்ச் சொல்கிறார், அசோக் கிறிஸ்டோஃபர். இவர் தனியார் நிறுவனமொன்றில் மார்க்கெட்டிங் எக்ஸிகியூடிவ். 'டைம் மேனேஜ்மெண்ட்' என்று அழைக்கப்படும் நேரத்தை நிர்வகித்தல் குறித்து நிறைய உரையாற்றி வருகிறார். பல நிறுவனங்களில் இவரை அழைத்துத் தங்கள் ஊழியர்களிடம் சொற்பொழிவாற்றச் சொல்கிறார்கள்.

நிருபர்: உண்மையிலேயே நேரம் என்பது ஒரு பற்றாக்குறையான விஷயமா?

அசோக்: (சிரிக்கிறார்) அவ்வாறு என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. பார்க்கப் போனால், ஏழை, பணக்காரர், படித்தவர், படிக்காதவர், இளைஞர், முதியவர், ஆண் —பெண் என்று வித்தியாசமின்றி அனைவருக்கும் சமமாய்க் கிடைத்துள்ள ஒரு செல்வம் நேரம்.

நிருபர்: அப்படியெனில் நேரமில்லே என்று காரணம் சொல்பவர்களுக்கு உங்கள் பதில் என்ன...?

அசோக்: அவர்கள் அப்படிச் சொல்லக் காரணம் சரியாகத் திட்டமிடாததுதான். இழந்த எதையும் திருப்பிச் சம்பாதிக்க முடியும் — நேரத்தைத் தவிர. அதனால், திட்டமிட்டு, ஒவ்வொரு காரியமாகச் செய்தால், நேரம் நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்கும். இதைத்தான் ஆங்கிலத்தில் 'டைம் மேனேஜ்மெண்ட்' என்று குறிப்பிடுகிறார்கள்.

நிருபர்: சரியான திட்டமிடுதல் என்று எதைச் சொல்கிறீர்கள்...?

அசோக்: ஒரு நாளில் என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்று முத

சீக்கிரம் எழுந்திருந்தால் நேரம் நம் வசம்...



லில் பட்டியல் போட்டுக் கொள்ள வேண்டும். பின் அந்தக் காரியங்களுள் மிக முக்கியமானவை எவை என்று தீர்மானிக்க வேண்டும். அதாவது ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் செய்து முடிக்கா விட்டால் விபரீதமான பின் விளைவுகள் நேரிடக் கூடும் என்ற அளவுக்கு அவசரமான, முக்கியமான வேலைகளைத் தனியாகக் குறித்துக் கொள்ள வேண்டும். பிறகு ஓரளவுக்கு முக்கியமானவை, அவ்வளவாக முக்கியம் இல்லாதவை என்று வேலைகளை வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு காரியத்தையும் செய்து முடிக்கத் தோராயமாய் எவ்வளவு நேரம் ஆகும் என்றும் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு காரியமாய்ச் செய்து முடித்ததும் 'டிக்' செய்து கொண்டே வரவேண்டும். அன்று இரவு படுக்கப் போகு முன்பு, அன்று செய்த வேலைகளைப் பற்றி ஒரு மதிப்பீடு செய்ய வேண்டும். ஒரு காரியத்தை முடிக்க முடியவில்லையெனில், ஏன் முடிக்கவில்லை? தவறு உங்கள் மீதா? இல்லை வேறு யார் மீதாவதா? உங்கள் மீது தவறு என்றால், அந்தத் தவறு மறுபடி நிகழாதிருக்க என்ன செய்ய வேண்டும்? இன்னொருவர் தவறுஎன்றால், எதிர் காலத்தில் அதைத் தவிர்ப்பது எப்படி? என்றெல்லாம் அலசிப் பார்க்க வேண்டும்.

நிருபர்: திட்டமிடவே நிறைய நேரம் ஆகி விடும் போலிருக்கிறதே....!

அசோக்: ஆரம்பத்தில் அப்படித் தோன்றலாம். ஆனால் போகப் போகத் திட்டமிடுவதால் நிறைய நேரம் மிச்சமாவதை உணரலாம். தினமும் இரவு, படுக்கு முன், அன்றைய காரியங்களை அலசிய பின், மறு நாளைய வேலைகளையும் பட்டியலிட்டு விடுவதுதான் நல்லது. இந்தப் பட்டியலுக்கு 'To do chart' என்று பெயர். இதில் நேரத்தை நிர்வகிப்பது தவிர மனத்துக்கும் டென்ஷன் குறைந்து நிம்மதி பிறக்கிறது. கவலையற்ற ஆழ்ந்த உறக்கம் சாத்தியமாகிறது.

நிருபர்: எவ்வளவுதான் திட்டமிட்டாலும் சில சமயங்களில் நாம் நினைத்தபடி வேலைகள் முடிவதில்லையே...

அசோக்: இலக்கு ஒன்றை நிர்ணயிக்கும் போது நமது சக்திக்கு உட்பட்டதாக இருக்கும்படியும் பார்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாய், ஒரு புத்தகத்தை — சுமார் நானூறு பக்கம் — பத்து நாட்களில் முடிக்கத் திட்டமிட்டால் தினமும் நாற்பது பக்கம் படிக்க வேண்டியிருக்கும். நாற்பது பக்கங்கள் படிக்க உங்களுக்கு ஒரு மணி நேரம் தேவை என வைத்துக் கொள்வோம். தினந்தோறும் உங்களால் ஒரு மணி நேரம் உட்கார்ந்து படிக்க முடியுமா? என்று முதலில் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சில சமயங்களில் நம்மை மீறி, பிறர் ஒத்துழையாமை காரணமாக, நமது திட்டம் நிறைவேறாமல் போகும். அனாவசியமாய் காத்திருக்கவோ அல்லது பயனின்றி ஓர் இடத்துக்குப் போய் வரவோ நேரிடும். இத்தகைய சமயங்களில் பதற்றமோ கோபமோ அடையாமல் அமைதியாக யோசித்தால் அந்தப் பொழுதையும் வீணாக்காமல் ஓரளவு பயனுள்ளதாக்கிக் கொள்ள முடியும். பிறருக்குக் காத்திருக்கும் நேரத்தில் புத்தகம் படிக்கலாம் அல்லது இழந்த நேரத்தை எப்படி ஈடுகட்டுவது என்று யோசித்தே அன்றைய பணி அட்டவணையில் திருத்தம் செய்து கொள்ளலாம்.

நிருபர்: அதிகாலையில் எழுந்திருப்பது நேரத்தை மிச்சப்படுத்த உதவுமா?

அசோக்: திடகாத்திரமான மனிதனுக்குச் சராசரியாய் ஆறு முதல் எட்டு மணி நேரத் தூக்கம் போதுமானது. மறைந்த பிரதமர் இந்திரா காந்தி தினமும் மூன்று மணி நேரமே தூங்குவார்! தூங்கி எழுந்திருக்கும் போது சுறுசுறுப்பாய்க் காணப்படுவார் என்பார்கள். எனவே, சீக்கிரம் எழுந்திருப்பது என்பது நல்ல பழக்கம்தான். நம் கைவசம் நிறைய நேரம் இருக்கும். ஆனால் அந்த நேரத்தையும் புத்திசாலித்தனமாய், உபயோகமான முறையில் பயன்படுத்துவது, நம்



பஸ்ஸுக்குக் காத்திருக்கும் நேரத்தில்...



* அரட்டையிலும் வம்பிலும்...

கையில்தானே இருக்கிறது!

நிருபர்: குடும்பத் தலைவிகளைக் காலை வேளையில் பார்க்க எவ்வளவு பரிதாபமாய் இருக்கிறது தெரியுமா? உங்கள் டைம் மேனேஜ்மெண்ட் அவர்களுக்கு உதவாதா?

அசோக்: ஏன் உதவாது! இங்கேயும் அடிப்படை திட்டமிடுவதுதான். குடும்பத் தலைவியும் தன் மறுநாளைய வேலைகளை முதல் நாளே திட்டமிட்டு, To do chart தயாரித்து விட வேண்டும். ஆனால் அவரைப் பொறுத்தவரை, தினப்படி ஒரே மாதிரியான காரியங்கள்தான் என்பதால், ஒரே ஃபார்முலாவைப் பின்பற்றலாம். எல்லா வேலைகளையும் நாமே செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இழுத்துப் போட்டுக் கொள்ளக் கூடாது. குழந்தைகளைச் சிறிய வேலைகள் செய்யப் பழக்க வேண்டும். கணவனின் உதவியையும் கேட்டுப் பெற வேண்டும். மறுநாள் சமையல், மற்றும் டிபனுக்குத் தேவையான பொருட்கள் உள்ளனவா என்று முதல் நாளே சரிபார்த்துக் கொள்ள வேண்டும். சமைக்கத் தயாரான நிலையில் எல்லா பொருட்களையும் சுத்தப்படுத்தி, ஆய்ந்து, நறுக்கி வைத்துக் கொண்டு அடுப்பைப் பற்ற வைக்க வேண்டும். இப்படிச் செய்தால் எரிபொருளும் மிச்சம். நேரமும் மிச்சம். சமைத்துக் கொண்டே பிற காரியங்களில் ஈடுபடுவது விரும்பத்தக்கதல்ல.

எல்லோரும் கிளம்பிச் சென்ற பிறகு குடும்பத் தலைவி எவ்வளவோ பணிகளைச் செய்து முடிக்கலாம். ஆனால் காலை வேளையில் பம்பரமாய்ச் சுழன்று டென்ஷனுடன் வேலை செய்யும் பெண்கள், பத்து மணிக்குப் பின், நேரத்தை எப்படியெல்லாம் வீணாக்குகிறார்கள் தெரியுமா?

நிருபர்: காலையில் வேலைகள் முடிந்ததும், குடும்பத் தலைவிகள் ஓய்வெடுப்பதில் தவறு ஒன்றுமில்லையே!

அசோக்: கடுமையாய் வேலை செய்கிறார்கள்; கொஞ்சம் ஓய்வு அவசியம் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அதுவும் அளவோடு இருக்க வேண்டும். மிஞ்சும் நேரத்தை அரட்டையிலும், வம்பிலும் வீணடிக்காமல் உருப்படியாகக் கழிக்க வேண்டும்.

நிருபர்: நீங்கள் இப்போது சொல்வது சில குடும்பத் தலைவிகளைப் பொறுத்த வரை உண்மையாய் இருக்கலாம். ஆனால் வேலைக்கும் போய்க் கொண்டு வீட்டையும் நிர்வகித்து வரும் பெண்களுக்கு ஓய்வைப் பற்றிச் சிந்திக்கக் கூட நேரமிருப்பதில்லை... இவர்களுக்குத் தூக்கத்தில் கூட 'டென்ஷன்'தான்....

அசோக்: இவர்களுக்குத்தான் to do chart பேருதவியாய் இருக்கும். குறித்து வைத்துக் கொள்வதால் எந்த வேலையும் மறந்து போகாது. இவர்கள் வீட்டு வேலையைக் கூடியவரை எளிமையாக்கிக் கொள்ளலாம். மாலை நேரங்களில் டி.வி. பார்ப்பதை ஒரு நியதியாகச் செய்யும் பெண்கள், நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டே அந்த அரை அல்லது முக்கால் மணி நேரத்தில் மறுநாள் காலைக்குத் தேவையான காய்களை ஆய்ந்து, சுத்தப்படுத்தி வைத்துக் கொள்ளலாம்; அல்லது துவைத்த துணிகளை மடித்து வைக்கலாம்; பட்டன்கள் தைக்கலாம். ஓரளவு முன்யோசனை, திட்டமிடுதல் இரண்டும் இருந்தால் வாழ்க்கையை எளிமையாக்கிக் கொள்ள முடியும். சமையலை முடிவு செய்வது தொடங்கி எல்லாவற்றிலும் இந்த புத்திபூர்வமான அணுகுமுறை இருக்க வேண்டும் — ஒரே நாளில் கீரை, கொத்தவரை என்று இரண்டு காய்களையும் சமைத்தால் நிச்சயம் அவற்றை ஆய்ந்து, சுத்தப்படுத்துவதிலேயே நிறைய நேரம் போய் விடும். இதைப் போன்ற தவிர்க்கக் கூடிய தாமதங்களை, யோசித்துத் தவிர்க்கலாமே.

நிருபர்: அலுவலகத்தில் நேரத்தை நிர்வகிப்பது பற்றிச் சொல்லுங்கள்....

அசோக்: இப்போது சொல்வது, ஆண், பெண் இருபாலாருக்குமே பொருந்தும்.



* தினமும் To do chart தயாரியுங்கள்

காலை ஆபீஸுக்குப் போனால், சூடாய் டீ சாப்பிட்டு விட்டு, வேலையை ஆரம்பிக்கலாம் என்று அதுவரை பேசிக் கொண்டிருப்பார்கள். அது டீ குடித்து முடித்த பிறகும், சிறிது நேரம் தொடரும். அப்புறம் வேலையை ஆரம்பிப்பார்கள். இந்த ஆரம்ப நிதானத்தை உடைத்தெறிந்து முதலிலேயே சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்கினால் நிறைய வேலை செய்ய முடியும். ஒரு கடிதம் எழுதிச் சாதிக்கக் கூடிய பணிக்கு போன் செய்யாதீர்கள். போன் மூலமே நடத்தக் கூடிய காரியத்துக்கு நேரில் போகாதீர்கள். போன் பேச ஆரம்பிக்கும் முன் நம்பரையும் பேச வேண்டிய தகவலையும் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். சாப்பாட்டு இடைவேளையின் போது சீக்கிரம் சாப்பிட்டு விட்டுச் சொந்தக் கடிதங்களை எழுதி முடிக்கலாம்.

நிருபர்: பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு ஏதாவது டிப்ஸ் கொடுங்களேன்.

அசோக்: சாதாரண ஊழியர்களுக்கான விதியே இவர்களுக்கும் பொருந்தும். இன்னொரு முக்கியமான விஷயம்: வேலைகளை இன்னொரிடம் ஒப்படைத்தால், கச்சிதமாய் முடியும் என அறிந்து, அவரிடம் ஒப்படைத்தல். இப்படிச் செய்தால் அவ்வப்போது நிலைமை என்ன என்று கேட்டறிந்தால் போதுமானது. இதனால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகள் நடக்கின்றன. அனாவசிய டென்ஷன், இருக்காது. வேகமாய் அதே சமயம் விஷயத்தை கிரகித்துக் கொள்ளும் வகையில் படிக்கிற பழக்கத்தை அதிகாரிகள் வளர்த்துக் கொள்ள வேண்டும். நேரத்தை வீணாக்க வருபவர்களிடமும், ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். அந்த மாதிரி ஆசாமிகளை, தட்டிக் கழிக்கவோ, இல்லை, ஒரு வார்த்தை பேசி அனுப்பி விடவோ தயங்கக் கூடாது.

நிருபர்: படிக்கிற மாணவர்கள் நேரத்தை எப்படி உபயோகமாய்ச் செலவிடலாம்?

அசோக்: மாணவர்களுக்கு அந்த இளம் வயதில் பொறுப்புக்கள் குறைவு. அவர்கள் வசம் ஏராளமான நேரம் இருக்கும். ஆனால் அவர்களின் சுதந்திரத்தைப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஒரு வரையறைக்குள் வைத்திருக்காவிட்டால், அது எதிர்காலத்தைப் பாழாக்கிவிடும். ஓய்வு நேரத்தை உபயோகமாய்ப் பயன்படுத்திக் கொள்ளச் செய்ய வேண்டும். தினமும் விளையாடச் செய்வதன் மூலம் உடலும் திடகாத்திரமாய் இருக்கும். மனமும் ஆரோக்கியமாய் இருக்கும். சின்ன வயதிலேயே இதைச் செய்ய வேண்டும்.

நிருபர்: 'டைம் மேனேஜ்மெண்ட்' எல்லாம் சின்னக் குழந்தைகளுக்குப் புரியுமா?

அசோக்: ஏன் புரியாது? ஒரு குழந்தை எப்போது, எண்களை, அடையாளம் தெரிந்து கொள்ளுகிறதோ, அப்போதே நேரத்தின் முக்கியத்துவத்தைச் சொல்லிக் கொடுத்து, எதையும் நேரப்படிச் செய்கிற பழக்கத்தை ஏற்படுத்தி விட வேண்டும். இன்னும் சொல்லப் போனால், இப்போது தான் இருபது, முப்பது ரூபாய்க்குக் கைக் கடிகாரம் கிடைக்கிறதே! ஒரு கடிகாரத்தைக் குழந்தைக்கே வாங்கிக் கொடுத்து விடலாம்!

பேட்டி: **எஸ். சந்திரமௌலி**

மேலட்டை வண்ணப்படம்:

கே. வி. ஆனந்த்

புகைப்படங்கள்: **சோமு**

யோகா

அடுத்த இதழில்...

அர்ச்சனா:

'87 ஆம் ஆண்டின்

சிறந்த நடிகை

அட்டைப்படச்

சிறப்புக் கட்டுரை





பண்டமாற்று

ஜெயமோகன்

வழக்கம் போல் உப்பு பெறாத ஏதோ விஷயத்தில்தான் சண்டை ஆரம்பித்தது. அவன் அவளது குடும்ப ரகசியங்களில் புகுந்து விளையாட ஆரம்பிக்க, அவள் அவனது கலியாணத்துக்கு முந்தைய 'தெய்வீக' உறவுகளை இழுத்துப் போட்டு அலச ஆரம்பித்தாள். சண்டையின் உக்கிரத்தில் எங்கிருந்து எப்போது அது ஆரம்பித்தது என்பது இரண்டு பேருக்கும் மறந்து போயிற்று. முடிந்தவரை மற்றவர் மனத்தில் குறி வைத்து அடிப்பதிலேயே கவனமாக இருந்தார்கள். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அவள் நாற்காலியில் அமர்ந்து மேஜை மேல் முகம் புதைத்து அழ ஆரம்பித்தாள். சண்டையின் கடைசி அங்கம் நிறைவு பெறுகிறது என்று அர்த்தம். அவன் தன் மேஜைக்குப் போய், புத்தகத்தைப் பிரித்து மடி மேல் வைத்துக் கொண்டான். ரொம்ப நேரம் கழித்துத்தான் புத்தகத்தைத் தலைகீழாகப் பிடித்திருக்கிறோம் என்று உணர்ந்தான். அப்போது கொதிப்பு ஆறிப் போயிருந்தது. பசித்தது.

அவளது விசும்பல் கேட்டுக் கொண்டுதான் இருந்தது. அவனுக்குச் சங்கடமாக இருந்தது. கடிகாரத்தைப் பார்த்தான். மணி பத்து. இனிமேல் எப்போது சாப்பிட்டு விட்டுப் படுப்பது?

கொஞ்ச நேரம் யோசித்தான். பிறகு நயமான குரலில் "கமலா" என்றான்.

பதிலில்லை.

எழுந்து அவளருகே போய் நின்று மீண்டும் "கமலா" என்றான். அவள் உடல் முழுக்க ஓர் இறுக்கம் ஏறியது. அவன் மெல்லக் கையை அவள் தோள் மேல் வைத்தான்.

"சீ கையை எடுங்க!"

அவன் பயந்து போய் விட்டான். கை திடுக்கிட்டுத் தெறித்து விலகிக் கொண்டது.

"இனிமேல் என்னைத் தொடாதீங்க" என்றாள்.

எச்சில் முழுங்கி "ஏன்?" என்றான்.

"எனக்கு உங்களைப் பார்த்தாலே அருவருப்பா இருக்கு."

அவனுக்குக் கோபம் வந்தது. "பின்ன எதுக்குக் கல்யாணம் பண்ணிகிட்டே?"

"இப்படின்னு யார் கண்டது!"

— அவன் தெய்வீக உறவுகளை நினைத்துக் கொண்டு சொன்னாள்:

"அது சரி. தெரிஞ்சாச்சில்ல அப்ப விட்டுட்டுப் போறதுதானே."

"போகத்தான் போறேன்."

"போயேன்"

"ராத்திரிலயா? விடியட்டும்."

"ஒழி நானாவது நிம்மதியாக இருப்பேன்.

"என் தலையெழுத்து இப்படி..."

அவள் மறுபடியும் அழ ஆரம்பித்தாள்.

"ஏய் பசிக்குது. சாப்பாடு போடப் போறியா இல்லியா?"

அவள் பேசாமல் இருந்தாள்.

திடுதிடுவென்று நடந்து அவன் படுக்கையறைக்குப் போய்த் தடாலென்று படுக்கையில் விழுந்தான். கண்ணை மூடிக் கொண்டான்.

அறை வாசலில் ஓசை கேட்டது.

"பட்டினியா படுத்துக்கிட்டு. இனி அந்தப் பாவமும் எனக்கு வேண்டாம்." — அவள் குரல்.

"எனக்கு வேண்டாம்!"

"நான் பரிமாறி வச்சிருக்கேன். வேணும்னா சாப்டறது. இல்லேன்னா அங்கியே இருக்கட்டும்."

அவன் விசுக்கென்று எழுந்து அவளைத் தாண்டிச் சமையலறைக்குப் போனான். சாப்பாடு தயாராக இருந்தது.

சிடு மூஞ்சியாக இருந்தாலும் நன்றாகத்தான் சமைக்கிறாள் என்று நினைத்துக் கொண்டான்.

கை கழுவி உரக்க ஏப்பம் விட்டபின் கேட்டான்: "நீ சாப்பிடலியா?"

"எனக்கு வேணாம்."

"ஏன்?"

"பசியில்லே."

"பசியெல்லாம் இருக்கு — சாப்பிடு!"

அவனை மினுமினுவென்று பார்த்தாள்.

"சாப்பிடு!" என்றான். முன் ஹாலுக்கு வந்து அமர்ந்தான். பாத்திர ஓசைகள் கேட்டன. சாப்பிடுகிறாள்.

அவளும் முன்புறம் வந்தாள்.

என்ன பேசுவதென்று தெரியாத மௌனம்...

"நீ ரொம்பத்தான் கோபப்படறே" என்றான்.

"யார் நானா? பேசறதையும் பேசிட்டு அப்புறம் இது வேற... எங்க பெரியப்பா மஞ்சக் கடுதாசி குடுத்தா அது அவர்

படத்தில் நடிப்பவர்கள்:
சுந்தர், திருமதி தேன்மொழி சுந்தர்.

படம்: கே. வி. ஆனந்த்.

நஷ்டம்; உங்களுக்கு என்ன போச்சு?''

''சரி, சரி! மறுபடியும் ஆரம்பிச்சிராதே.''

''உங்களுக்கு என்னைக் கண்டாலே பிடிக்கலே.''

''உன்னோட இந்த கோபம்தான்...''

''இந்த மாதிரி பேசினால் கோபப்படாமல் கொஞ்சுவாங்களாக்கும்?''

''இதப் பாரு. பேசினாதானே வம்பு. ஒண்ணு செய்வோம். நீ ஒரு பேப்பர் எடுத்துக்க. நானும் ஒண்ணு எடுத்துக்கறேன். எங்கிட்ட உனக்கு என்னென்ன பிடிக்கலியோ அதையெல்லாம் வரிசையா நீ எழுது. உங்கிட்ட எனக்குப் பிடிக்காத விஷயங்களையெல்லாம் நான் எழுதறேன். பரஸ்பரம் மாத்திக்குவோம். என்ன?''

''எதுக்கு அப்படி?''

''குறைஞ்சபட்சம் நாம ஒருத்தரையொருத்தர் எப்படிப் பார்த்துக்கறோம்னாவது தெரியுமே.''

''சரி.''

ஆளுக்கொரு தாள் எடுத்துக் கொண்டார்கள்.

''ஒரு சைக்கலாஜிகல் பத்திரிகையில படிச்சேன். ஒருத்தரோட மத்தவங்க ஒத்துப் போறதுக்கு ரொம்ப சிம்பிளான வழியாம் இது'' — அவன் சொன்னான்.

''எழுதுங்க'' அவள் சொன்னாள்.

அவள் எழுதுவதைக் குறுகுறுவென்று பார்த்தான். என்ன எழுதுகிறாள் இத்தனை நீளமாய். அவனுக்குப் படபடப்பாக இருந்தது.

''பேய் எட்டியெல்லாம் பார்க்கக் கூடாது சொல்லிட்டேன்!''

''எங்கிட்டதானே குடுக்கப் போறீங்க.''

''அது அப்புறம். நீ எழுதலியே!''

''சரி!'' அவள் எழுதினாள்.

அவன் மீண்டும் ஏதோ எழுதி முடித்து நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு உடனே குனிந்து, தன் தாளில் எழுத ஆரம்பித்தாள்.

''ஆச்சா?'' அவன் கேட்டான்.

''ம்.''

''இந்தா அதை இங்கே குடு.'' தான் எழுதியதைப் பார்த்து விட்டுத் தாம் தூமென்று குதிக்கப் போகிறாள் என்று அவனுக்குத் தோன்றியது. அவள் பார்வையே அத்தனை சரியாக இல்லை.

அவள் தந்த தாளை வாங்கும் போது அவனுக்கு மனம் படபடத்தது. என்ன எழுதியிருக்கிறாள். ஏதாவது எசகு பிசகாக எழுதி விட்டிருப்பாளோ?

அவன் தாளை மெல்லப் பிரித்தான். அவன் முகம் ஓங்கி ஓர் அறைபட்டது போல மாறியது. உடம்பு சிலிர்த்தது.

பெண்மை ததும்பும் கையெழுத்தில் அவள் 1. ஐ லவ் யூ. 2. ஐ லவ் யூ. 3. ஐ லவ் யூ என்று பத்து வரை எழுதியிருந்தாள்.

அவன் பாய்ந்தான். ''கமலா ப்ளீஸ் அதைப் படிச்சிராதே. பிளீஸ்... படிக்காதே...!''

இருள் வரும் நேரம்

3

டாக்டர் ராம்பிரகாஷ் மற்றவர்கள் சிக்கலையெல்லாம் நிதானமாகச் சிந்தித்து, தர்க்க பூர்வமாக வாதாடி தீர்த்து வைக்கக் கூடியவர். தனக்கே ஒரு சிக்கல் வந்த போது சிந்திக்க முடியாமல் தவித்தார். டெலிபோனை எடுத்தார். எண்களைப் பாதி சுழற்றலில் புறக்கணித்து நகத்தைக் கடித்தார். சன்னலுக்கு வெளியே ஆட்டோ சப்தங்களைக் கவனித்தார். எங்கே எப்படித் தொலைந்து போயிருப்பாள்? இந்த நெருக்கடிக்கு அவர் சுத்தமாகத் தயாராக இல்லை. போலீஸுக்குப் போன் பண்ண வேண்டும் என்று எப்போது தீர்மானிப்பது? பஸ்ஸில் வரத் தவறிய மனைவிக்காக எத்தனை நேரம் வரை காத்திருக்க வேண்டும்? எப்போது நண்பர்களுக்கு அல்லது போலீஸுக்கு.... அம்ருதா எங்கே இருக்கிறாய் நீ? ரிஸப்ஷனுக்காக விலை உயர்ந்த நகைகள் அணிந்து கொண்டிருந்தாயா? கவனிக்கத் தவறி விட்டேனே! உன் நகைகளால் யாராவது கவரப்பட்டு அல்லது உன் சிவந்த மேனியால் யாராவது கவரப்பட்டு... சே சே அப்படியில்லை... அப்படி நடக்கவில்லை. ஆட்டோ பிடித்து, இதோ வரப் போகிறாய். இதோ இதோ!

மணி பார்ப்பதற்குப் பயப்பட்டார். அம்ருதாவின் அறைக்குச் சென்றார். நெட்டையாக டிரஸ்ஸிங் டேபிளின் கண்ணாடிக்கு எதிரே ஸ்டூல். அவள் அவசரம் படுக்கையில் வாரியிறைத்திருந்த புடவை, பாவாடை, அலங்காரச் சாதனங்களில் தெரிந்தது. இந்த அறைக்குள் நான் நுழைந்து நான்கு ஐந்து மாதங்கள் ஆகியிருக்கும். ஒரு நாள் நானும் அவளும் சிறு குழந்தைகள் போல் ஓடி விளையாட, அவள் என் புத்தகத்தைப் பறித்துக் கொண்டு உள்ளே வர, அவளைத் துரத்தி இந்த அறைக்கு வந்து, இதோ இங்கேதான் அவளை வீழ்த்தி... அப்பா என்ன அவசரப்பட்டோம். ஒருவரை ஒருவர் கடித்துச் சாப்பிட! அம்ருதா எங்கே போனாய்?

பதினொன்றரையானதும், ராம்பிரகாஷ் தம் நம்பிக்கைகளில் தொண்ணூறு சதம் இழந்து டெலிபோனை வெறித்துப் பார்த்துவிட்டு யாருக்கு போன் பண்ணுவது? கோபிதான், இல்லை வர்ஷாவுக்கா? இந்த நேரத்திலா...? எழுப்புவார்களா? இல்லை அவசர போலீஸ் உதவிக்காகவா?

''கோபி! ராம் ஹியர்''

''ஆய் ராம்.போன் பண்ண வேறு வேளை கிடைக்கவில்லையா? நல்ல தூக்கத்தைக் கெடுத்தாயே!''

''கோபி ஐம் இன் ட்ரபிள்!''

''என்ன ராம்?''

சுஜாதா

''என் மனைவி...''

''வாட் இஸ் இட் ராம்!''

''என் மனைவி, என் மனைவியைத் தொ தொ தொலைத்து விட்டேன்...''

''என்னப்பா சொல்றே? மனைவி என்ன பொம்மையா இல்லை பஸ் பாஸா தொலைக்கிறதுக்கு!''

''பஸ்ல வர்றப்ப பிரிஞ்சுட்டோம்!''

''வெய்ட் எ மினிட்! கார்லனு ரிஸப்ஷனுக்கு வந்தாப்பல ஞாபகம்?''

''கார் நடுவழியில நின்னு போச்சு. அங்கிருந்து பஸ் பிடிச்சு...''

''எங்கிருந்து...''

''கபன் பார்க் விதான் சௌதா கார்னர் இல்லை, அங்கிருந்து...''

''இரு நோட் பண்ணிக்கறேன் எங்க சொன்னே?''

''இட்ஸ் நோ யூஸ் கோபி நான் அந்த இடத்தைத் துப்புரவாத் தேடியாச்சு, வரலை!''

''எத்தனை மணி நேரமா?''





"மூணு நாலு மணி நேரம் இருக்கலாம்."

"ராம் ஒரு காரியம் பண்ணு. லீவ் த போன் நௌ. நான் இன்னும் அஞ்சு நிமிஷத்தில போன் பண்றேன்."

"என்ன பண்றது கோபி! ஐம் வொரிட்!"

"கொஞ்ச நேரம் எதையும் நெனைக்காதே. கவலைப்படாதே. நான் நான்... ஐல் டேக் ஓவர். அங்கேயே போன்ல இரு..."

டெலிபோனை வைத்துவிட்டு அதையே வெறித்துப் பார்த்தார். திறந்திருந்த படுக்கை அறையைப் பார்த்தார். 'உனக்கா வயசாச்சு? இந்த ரூம்ல நடக்கிற அக்கிரமங்களைக் கேட்டா யாராவது அப்படிச் சொல்வாங்களா?'

"அம்ரு. ஆர் யூ ஹாப்பி?"

"ரொம்ப!"

"எத்தனை சந்தோஷம்னு காமி...!"

"எப்படிக் காமிக்கிறது?"

"எத்தனை சந்தோஷமோ அத்தனை அழுத்தமா முத்தம் கொடுக்கணும்."

"ம்ஹூம்."

"ஏன்?"

"அத்தனை அழுத்தினா ரத்தம் வந்துரும்..."

கன்னத்தில் அறைவது போல போன் ஒலிக்க, திடுக்கிட்டு அதை எடுத்தார்.

"அலோ!"

"டாக்டர் ராம்

பிரகாஷ்?''

''எஸ்.''

''நமஸ்காரம்! என் பேர் சோமசேகர் டிஎஸ்பி க்ரைம்ஸ். ப்ரொபஸர் கோபிநாத் சொன்னார் உங்க மனைவியைக் காணம்னுட்டு. டாக்டர் உங்க விடு சரியா எங்கே இருக்குன்னு... சொல்லுங்க. நான் வர்றேன் கோபியும் அங்க வர்றதா சொல்லியிருக்கிறார்''

''இந்த வேளையில...''

''போலீஸ்காரர்களுக்கு வேளையெல்லாம் கிடையாது.''

''உங்களுக்குக் கோபியை...''

''என் டாட்டர் மூலமா தெரியும். என் டாட்டர் உங்க ஸ்டூடண்ட் கூட.''

சோமசேகரின் குரலில் ஒலித்த சாந்தமும் தன்னம்பிக்கையும் திடமும் டாக்டர் ராம் பிரகாஷுக்கு ஆதரவாக இருந்தன. போனை வைத்துவிட்டு மெதுவாக ப்ரிஜ்ஜைத் திறந்து, குளிர்ந்த நீர் ஊற்றிக் கொண்டார். சன்னல் திரைகள் கோடைக்காற்றில் உற்சாகமாக அசைந்தன. அவ்வப்போது குப் குப் என்று உடலில் குளிர் தழுவியது. ராம் பிரகாஷுக்கு என்னவோ ஒரு விதத்தில் நம்பிக்கை வர, ப்ரிஜ்ஜில் அதது அதனதன் இடத்தில் பாலிதீன் உறைகளில் அடங்கியிருந்தது.

"பட்டாணியை இப்படி வெக்கணும், டீப் ப்ரீஸ்ல என்ன வைக்கணும், மோரை எங்க வெக்கணும், முட்டையை எங்க வெக்கணும். எல்லாத்துக்கும் ஒரு இடம் இருக்கில்லே...?''

''எஸ் மாஸ்டர் எஜமானரே!''—பாவனை!

''ஏன் அம்ரு இப்படி இத்தனை டிஸ்ஆர்கனைஸ்டா இருக்கே?''

''நீங்க ரொம்ப ஆர்கனைஸ்டா இருக்கீங்களே, அதனால ஒரு வீட்டில ரெண்டு பேர் ஒழிச்சா பைத்தியம் புடிச்சுரும். நீங்க ஒழிக்க, ஒழிக்க, நான் குப்பை போட்டுக்கிட்டே வர்றேன் கண்ணு.''

''பாரு, கண்ணு, கண்ணுன்னெல்லாம் கூப்டாதே. என்னவோ சினிமாத்தனமா இருக்குது.''

''நல்லது மாமோய்!''

''கண்ணுவே பரவாயில்லே!''

வாசலில் ஜீப்பு சீறுவது கேட்டது. உடனே கதவு பொத்தான் ஒலித்தது.

சோமசேகர் அத்தனை ராத்திரியிலும் சுத்தமான சீருடையில் இருந்தார். அடர்த்தியான புருவங்களின் கீழ் கண்களில் லேசான மகிழ்ச்சி எப்போதும் மை தடவினாற் போல இருக்க, ஒத்துழைப்பாகச் சிரித்த பற்கள், வரிசையாகப் பளிச்சென்று இருந்தன. நெற்றிக்குக் குறுக்கே ஒரு தழும்பு உறுத்தியது. சீக்கிர வழுக்கை.

''டாக்டர் ராம்பிரகாஷ்...?''

''நான்தான்.''

''உங்களை இன்னும் கொஞ்சம் பார்மலா சந்திச்சிருக்கலாம். சாரி நீங்க கொஞ்சம் பரபரப்பில் கவலைல இருக்கிறப்ப சந்திக்கிறோம். பரவாயில்லே, காலைக்குள்ள எல்லாம் கிளியர்.''

''உக்காருங்க. வாட் வில்யூ ஹேவ்?''

''உங்க வீட்டில சர்வண்ட் இருக்காளா?''

''இல்லே.''

''அப்ப ஏதும் வேண்டாம். சொல்லுங்க. என்ன நடந்தது?''

''சாயங்காலம் ஒரு ரிஸப்ஷன் போயிருந்தோம் ஸார்.''

''எங்கே?''

''வாசவி கல்யாண மண்டபம் பஸவன் குடியில்! திரும்பறப்ப கார் டிரபிள் கொடுத்தது.'' — நடந்ததைச் சிக்கனமாக ராம்பிரகாஷ் விவரிக்க, குறுக்கிடாமல், முகத்தில் உணர்ச்சிகளில் மாறுதல் இல்லாமல் சோமசேகர் கவனித்தார்.

''ராம்பிரகாஷை நிமிர்ந்து பார்த்து, ''டாக்டர், நான் ஒரு போலீஸ்காரன் என் கேள்விகள் முரட்டுத்தனமாக இருந்தால் நீங்கள்...''

''பரவாயில்லே, கேளுங்கள்...''

''உங்கள் மனைவிக்கு என்ன வயசு?''

''இருபத்தெட்டு.''

அலமாரியில் வைத்திருந்த போட்டோவைப் பார்த்து, 'அட்ராக்டிவ்' என்றார். ''டாக்டர், நீங்கள் உங்கள் மனைவியுடன் ஏதாவது சண்டை போட்டீர்களா, சமீபத்தில்?''

''இல்லே'' என்றார் புன்னகையுடன்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''நீங்கள் ஒரு போலீஸ்காரர், நான் ஒரு சைக்காலஜிஸ்ட். உங்கள் சிந்தனை, சம்பிரதாயச் சுவட்டில் போவதைக் கவனித்துச் சிரிப்பு வந்தது.''

''முதலில் சம்பிரதாயமான காரணங்களில்தான் ஆரம்பிக்கிறோம். அப்புறம்தான் அசாதாரணமான காரணங்கள்.''

''சம்பிரதாய காரணங்கள் எதுவும் இல்லே. அம்ருதா—அதுதான் அவள் பெயர்—அவளும், நானும் இருவரும் கொஞ்சம்



மனைவி: எதிர் வீட்டு ஏகாம்பரத்துக்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமிச்சிருக்கீங்களாமே... ஏன்?

அரசியல்வாதி: புறம்போக்கு நிலத்தையே ஆக்கிரமிச்சு ஆக்கிரமிச்சுப் போரடிச்சுப் போச்சு... ஒரு சேஞ்சுக்குத்தான்!

— உ. ராஜாஜி.

வயசு வித்தியாசமிருப்பினும் ரொம்ப சந்தோஷமாகவே இருந்தோம்.''

''குழந்தைகள்?''

''ஒத்திப் போட்டிருக்கிறோம்.''

''டாக்டர், ஆர் யூ ரிச்?''

''என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது.''

''சொல்லுங்கள், எப்படி பஸ் தவறியது?''

''கொஞ்சம் சாமர்த்தியம் போதாதவள்! பஸ்ஸில் ஏறிப் பழக்கமில்லை. அதனால் பஸ் தவறி விட்டது. அதற்கப்புறம்தான் என்ன நிகழ்ந்திருக்கும்...? இத்தனை நேரம் வரவில்லை!''

சோமசேகர் தம் பென்சிலை எடுத்துச் சிறிய புத்தகத்தில் குறிப்பு எழுதிக் கொண்டு அதை மீண்டும் பைக்குள் செருகிக் கொண்டார். ''கேன் ஐ யூஸ் தி போன்?'' என்றார்.

நம்பரை அலட்சியமாகச் சுழற்றி, ''கண்ட்ரோல் ரூம்? டி எஸ் பி பேசுகிறேன். கொஞ்சம் ஹை கிரவுண்ட் போலீஸ் ஸ்டேஷன் கொடுப்பா!'' என்றார். காத்திருந்து விட்டு அவர் திரும்பவும் கன்னடத்தில் பேசினார். ராம்பிரகாஷுக்குப் பாஷை தெரியாவிட்டாலும் பேசுவது புரிந்தது. 'கப்பன் பார்க் பக்கம் பட்ரோல் ஜீப்பை எடுத்துக்கிட்டுப் போய் ஒரு ரோந்து பார்த்துட்டு வந்துருங்க. நான் காத்திருக்கேன்' என்று டாக்டரின் நம்பர் கொடுக்க, அதற்குள் ராம் பிரகாஷ், சமையலறைக்குச் சென்று பாலைச் சுட வைத்து இரண்டு கப் மால்ட் போட்டுக் கரைத்துக் கொண்டு வந்தார்.

''எதுக்கு டாக்டர் ட்ரபிள்? இந்தப் புத்தகங்கள் எல்லாம்?''

''நான்தான் படிக்கிறது...''

''காலின் வில்சன்! டாக்டர், உங்களுக்கு 'அக்கல்ட்டில்' கொஞ்சம் இஷ்டம் உண்டோ?''

''மனம் சம்பந்தப்பட்ட எல்லாத்திலயும் இண்ட்ரஸ்ட்டு.''

''உங்கள் மனைவி படிக்கிற புத்தகங்கள் இந்த அலமாரியில் இருக்கா?''

''இல்லை. எல்லாமே கிச்சன்லதான்.''

''என்ன மாதிரி புத்தகம் படிப்பாங்க?''

இதற்குள் வாசலில் கார் வந்து நிற்க டாக்டர் பரபரப்பானார்.

''ஒருவேளை என் மனைவியா இருக்கலாம்...?''

சோமசேகர் எட்டிப் பார்த்து, ''இல்லை, கோபிதான் வருகிறார்!'' என, கோபிநாத் உள்ளே நுழைந்ததும், ''என்ன ராம், வந்தாச்சா?'' என்றார்.

''இல்லை, கோபி.''

''என்ன சோமசேகர்! என்ன மாதிரி போலீஸ்காரர் நீங்க! இன்னுமா கண்டு பிடிக்கலை? இது என்ன ஆர்லிக்ஸா?'' என்று சுதந்திரமாக அதைப் பாதி தம்ளரில் ஊற்றிக் குடித்தார். ''ஏம்பா, பொண்டாட்டியைச் சரியா வெச்சுக்கத் தெரியாம தொலைச்சுட்டியே? உனக்கு ப்ரமோஷன் வேறயா...?''

''கோபி, இது ஜோக் பண்ற விஷயமுமில்லை, சமயமுமில்லை!''

''ஸாரி, டென்ஷனைக் குறைக்கலாம்னு என்னவோ சொல்லப் போயி... சோமசேகர் அவரே...?''

''எதுவும் சொல்ல முடியலை சார். ஆனா ஐந்து மணி நேரமா அவங்களைக் காணலைன்னு கொஞ்சம் கவலைப்பட வேண்டிய விஷயமா இருக்கும். அந்த வட்டாரத்தில் தேடச் சொல்லியிருக்கேன். பட்ரோல் ஜீப் போயிருக்குது. ஏதாவதுன்னு ரேடியோ மூலமா போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் தந்து, அவங்க நமக்கு உடனே தகவல் தந்துடுவாங்க...''

''என்ன ஆகியிருக்கும்ங்கறீங்க? எப்படி திடுதிப்புன்னு...? ராம், ஏதாவது அம்னிசியாவா இருக்குமா?''

''டோன்ட் பி ஸில்லி.''

''உறவுக்காரங்கவீட்டில்எல்லாம்கேட்டுப் பார்த்தியா?''

''பெங்களூர்ல யாரும் இல்லையே!''

''உன் சைடுல?

''ஒருவேளை சினிமா கினிமா போயிருப்பாளோ?''

''கோபி! ஏதாவது பேசித்தான் ஆகணும்னு கட்டாயம் இல்லை!''

''ஹி இஸ் டென்ஸ்.''

அப்போது டெலிபோன் மணி அடிக்க, அதை உடனே எடுத்து, ''சோமசேகர்'' என்றார்.

கொஞ்ச நேரம் கேட்டுக் கொண்டிருந்தார். ''இஸிட்! இஸிட்! ம்! ம்'' என்றார். அவர் தாடை நரம்புகள் இறுகின. ''ஐம் கமிங்.'' போனை வைத்து யோசித்தார். ஒரு கணம் தயங்கினார்...

''டாக்டர் ராம்பிரகாஷ், உங்க மனைவியைக் கப்பன் பார்க்கில...''

''கப்பன் பார்க்கில...?''

''போலாம்'' என்று ஜீப்புக்கு நேராக நடந்தார்.

(தொடரும்)

* சிறந்த நடிகர்!



நீங்கள் கேட்டவை — தராசு

* மனோபாரதி, பாண்டிச்சேரி.

? தேசியம் என்பது இ. காங்கிரஸுக்கு மட்டுமே சொந்தமானதா?

! இல்லையே! எம். ஜி. ஆர். ஒரு தேசிய வாதி என்று ராஜீவும் ஜெயலலிதா தேசிய வாதி என்று கே. என். சிங்குமே சொல்லி யிருக்கிறார்களே! ஆக, இ. காங்கிரஸுக்கு ஜால்ரா போடத் தயாராக இருப்பவர்கள் எல்லாம் தேசியவாதிகள்தாம்!

* இடலை சுதா, குளத்தூர்.

? 'இட ஒதுக்கீடு என்பது சமூக, பொருளா தார அடிப்படையில்தான் இருக்க வேண் டும்' என்ற மத்திய அமைச்சர் சிவசங்கரின் கருத்து பற்றி...?

! நல்ல கருத்துத்தான், பாராட்டலாம். இதையே கட்சிக் கொள்கையாக்கி வோட் டுக் கேட்கத் துணிந்தால் அவரைத் தலை

கப்பட்டார்; இனி 'ஹாலிவுட்டின் கமல ஹாஸன்' என்று அமெரிக்கர்கள் பேசட்டும்!

* ஆர். மாறன், சீர்காழி.

? 'தேர்தலுக்குப் பிறகு கருணாநிதியின் தோல்விக்குக் காரணம் என்ன என்று ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிப் பலர் டாக்டர் பட்டம் பெற வேண்டும்' என்று ஜெயலலிதா கூறுகிறாரே...?

வின்சத்தாவின் சாட்சியம் பற்றி....?

மேல் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாட லாம். ஆனால், 'அது என்னுடைய தனிப் பட்ட கருத்து' என்று கூறி நழுவி விட்டால் பிரயோஜனமில்லை. முதலில் தமது கருத்தைத் தமது கட்சி ஏற்க சிவசங்கர் பாடுபடட்டும்.

* கெஜலெட்சுமி ராஜேந்திரன், லால்குடி.

? இரண்டாவது முறையாகக் கமலஹாஸன் இந்தியாவின் சிறந்த நடிகர் பட்டத்தை வாங்கி விட்டாரே?

! முன்பு, 'தமிழ்நாட்டின் மார்லான் பிராண்டோ' என்று ஒருவர் இங்கு வர்ணிக்



* சொந்தக் கருத்து...?

* சாட்சியம் செல்லாது!



! 'உடன்கட்டை ஏற நினைத்தேன்' என்ற உளறலுக்காகவும், "எம். ஜி. ஆர். மரணத் தில் மர்மம்" என்ற பிதற்றலுக்காகவும் திருச்சி கூட்டக் கலவரத்தின் காரணம் பற்றிய முரண்பாடான அறிக்கைகளுக் காகவும் ஆராயப்பட வேண்டியது ஜெயலலி தாவின் மனநிலைதான். மனோதத்துவ ஆராய்ச் சிக்கு நிறையவே இடமிருக்கிறது.

* இரா. மாதவராமன், கிருஷ்ணகிரி.*

? 'மனிதாபிமானக் கண்ணோட்டம் ஆழ மாய்ப் பதிந்துள்ள கட்சி' என்று தமிழகத் தில் எதைக் குறிப்பிடுவீர்கள்?

! இனிதான் தோன்ற வேண்டும். மனிதாபி மானம் என்பது இலவசத் திட்டங்கள் மட்டும் அல்ல. சிறந்த மனிதர்களை உருவாக் குவதே உயர்ந்த மனிதாபிமானம். மனிதன் என்றொரு நாடகம் டி. கே. எஸ். சகோத ரர்கள் நடத்தி, நான் சிறுவனாக இருந்த போது பார்த்தேன். "டைட்டில் ஸாங்" இன் னும் நினைவிருக்கிறது:

'மதமிலான்;
மானியான்;
உத்தமன்;
மன்னிப்பான்;
மனிதன்!'

மனிதன் என்ற சொல்லின் முதல், இரண்டாவது, மூன்ருவது, கடைசி எழுத்தை வைத்து வார்த்தைகள் பின்னப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். மற்ருென்று: மதமிலான் = கர்வமில்லாதவன்.

* பாஸ்கரன், மாஞமதுரை.

? 'துப்பாக்கி ஏந்தியாவது காங்கிரஸை ஆட்சியில் அமர்த்தியே தீருவோம்' என்று இ. காங்கிரஸ் எம். பி. ராஜேசுவரன் கூறியுள்ளாரே?

! பஞ்சாப் பயங்கரவாதிகளை ஊக்குவித்து விட்டு இப்போது திண்டாடுகிருர்கள்; விடுதலைப்புலிகளுக்குச் சாமரம் வீசிவிட்டு இப்போது திக்கு முக்காடுகிருர்கள்; இனி இவர்களே துப்பாக்கி ஏந்தப் போகிருர்களா? உருப்பட்டாற் போலத்தான்!

* எம். குணசேகரன், வேலாயுதம்பாளையம்.

? 'கருணுநிதியைத் தோல்வியுறச் செய்யும் ஆற்றல், திறமை, சொல் வன்மை இவை அனைத்தும் ஜெயலலிதாவுக்குத்தான் இருக்கிறது' என்று திருநாவுக்கரசு கூறியிருக்கிருரே?

! இது என்னய்யா அக்கிரமம்! இறைவன் கொடுத்திருக்கும் வரப்பிரசாதத்தைப் பட்டியலில் சேர்க்க மறந்து விட்டீரே! உமக்கு மன்னிப்பே கிடையாது!

* கி. குருராஜன், விருத்தாசலம்.

? சமீபத்தில் உங்களை ஆச்சர்யத்தில் ஆழ்த்திய நிகழ்ச்சி....?

! சமீபத்தில் தில்லி சென்றிருந்த நமது நிருபர்கள் ஆட்டோவுக்கு இரண்டு பேராக, இரண்டு ஆட்டோக்களில் பயணம் செய்தார்கள். பத்து கி. மீ. என்று இறங்கிப் பார்த்தால், இரு மீட்டர்களிலும் பைசா பிசகின்றி ஒரே சார்ஜ்! 'போட்டுத் தரும்' விவகாரமும் இல்லை!

* த. சேகர், திருத்துறைப்பூண்டி.

? எதிர்க்கட்சிகளிடையே 77—ல் தோன்றிய எழுச்சி மீண்டும் உருவாகுமா?

! தானுகப் பழுக்கட்டும்; தடிகொண்டு அடித்துப் பழுக்கச் செய்தால் வெம்பிப் போகிறது என்பதே முன் அனுபவம்.

* பிரியபாரதி, போடிநாயக்கனூர்.


? தற்போது படித்துக் கொண்டிருக்கும் புத்தகம் பற்றி...?

! முதலாளித்துவ நாடான அமெரிக்காவில், ஒரு விளையாட்டுப் பந்தயத்தைக் காணச் சொந்தக் காரை ஓட்டி வரும் சாமானியர்கள் காரை நிறுத்த ஸ்டேடியத்தில் வசதி

• மனிதன் யார்?



• "வரப்பிரசாதம்"



இல்லை. வெகுதூரத்துக்கு வெகு தூரம் சாலையோரங்களில்தான் நிறுத்தவேண்டும். ஆனல் டிரைவருடன் வரும் பணக்காரர்களின் கார்கள், முதலாளியை இறக்கி விட்டபின், அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட இடத்துக்குப் போய் வசதியாகநிறுத்தப்படலாம்! இதனை அநீதி என்று கருதிய விக்டர் கியாம், டிரைவர் போல் சீருடை அணிந்தார்; நடித்தார். மனைவியையும் நண்பர்களையும் ஸ்டேடியம் வாசலில் இறக்கி விட்டார். காரை வசதியாக நிறுத்திஞர். காருக்குப் பின் மறைவாக நின்று உடை மாற்றிக் கொண்டார். சீருடையை டிக்கியில் வைத்துப் பூட்டிவிட்டு மனைவி, நண்பர்களுடன் சேர்ந்து கொண்டார். சில ஆண்டுகளில் அதே ஸ்டேடியத்துக்கு டிரைவர் ஓட்டும் காரில் வந்து இறங்கும் அளவுக்கு வாழ்க்கையில் உயரவும் செய்தார்! வாழ்க்கையில் வாய்ப்புக்களை மட்டுமல்ல, தடங்கல்களையும் தனக்குச் சாதகமாக்கிக் கொள்பவனே முன்னேற முடியும் என்பதற்குமேற்படி நிகழ்ச்சியைமட்டுமின்றி வேறு பல சம்பவங்களையும் தமது சுயசரிதையில், உதாரணமாகத் தருகிருர், விக்டர் கியாம். ரிமிங்டன் நிறுவனம் சரிந்து கொண்டிருந்த போது, துணிந்து அதன் பங்குகளை வாங்கி, அதனை நிமிர்த்தியதுடன் உன்னத நிலைக்கு உயர்த்தியவர் விக்டர் கியாம்.

* ப. சுகுமார் ராஜ், தூத்துக்குடி.

? 'போஃபர்ஸ் நிறுவனத்திடம் நான் பெற்றது கட்டணமே; கமிஷன் அல்ல' என்று வின்சத்தா கூறியிருப்பது பற்றி?

! அவர் பல நிபந்தனைகளை விதித்து, அதை இந்திய அரசு ஏற்றுக் கொண்ட பிறகு இங்கே சாட்சியம் கூற வந்திருக்கிருர். எனவே, அவருடைய சாட்சியம் செல்லாக் காசாகிறது. ஆனல் நாடாளுமன்றக் கமிட்டித் தலைவரோ அவரது சாட்சியத்தில் திருப்தி தெரிவித்திருக்கிருர்! இது நாடாளுமன்ற விசாரணைக் கமிட்டி என்பதே ஒரு கண் துடைப்பு நாடகம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

இரா. மாதவராமன்,
13, தெற்கு மாடத் தெரு,
கிருஷ்ணகிரி — 635 001.

வட்டமேஜை

இத்தனை ராமர்கள் இருந்தும்...

* அட்டைப்படம் உள்ளிட்ட தில்லி சிறப்பிதழ் படங்களும், கட்டுரைகளும் மிக அருமை.

திருநெல்லிக்காவல், எஸ். அரிஅரன்.

* உண்மையில் தில்லித் தமிழர் சிறப்பிதழ் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்தது. இங்கே தமிழர்களின் உயர்வே தங்கள் வாழ்வின் இலட்சியம் எனக் கூச்சல் போடும் வெற்றுப் பேச்சு அரசியல்வாதிகளுக்கு, சேலம் மக்களின் பேட்டியும், கப்புடுவின் கட்டுரையும் நல்ல சூடு.

மேலூர், மு. க. இராசேந்திரன்

* தமிழ் அரசியல்வாதிகள் உதவுவதேயில்லை எனத் தில்லி தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கூறியதைப் படித்தேன்... ஒருவேளை, ஓட்டு லாபம் இல்லாத இடத்தில் ஏன் உதவி செய்ய வேண்டும் என நம் ஆட்கள் நினைத்து விட்டார்களோ என்னவோ?

திருத்துறைப்பூண்டி, டி. ஜே. பிரிட்டோ.

* தில்லிவாழ் தமிழர்களில் நான்கு லட்சம் பேர் சேலத்துக்காரர்கள் என்று கப்புடு அவர்கள் கூறியுள்ளார்கள். "இவர்களைப் பரிபாலிக்க வேண்டியவனும் சாட்சாத் அந்த ராமன்தான்" என்றும் குறிப்பிட்டுள்ளார். இன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த வெங்கட்ராமன் அவர்கள்தானே குடியரசுத் தலைவராக இருக்கிறார்? தில்லியில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக இருந்த ராஜாராமனும் சேலத்துக்காரர்தானே? டில்லிக்கு நெருங்கிய நண்பர் ராமச்சந்திரனும் (பண்ருட்டி) தமிழர்தானே? அப்படியிருந்தும் தில்லி தமிழர்களுக்கு விடிவு ஏற்படா விட்டால் இனி எப்போது ஏற்படுமோ?

ஆலடியூர், வெள்ளகால் இரா. சந்தையா.

* தெரிந்து கொள்ள வேண்டிய தேவையான செய்திகளுடன் பளிச்சென்று அழகிய வண்ண அச்சுத் தெளிவுடன் வெளிவந்தது தில்லி தமிழர் சிறப்பிதழ். வாழ்த்துக்கள்.

திருச்சி, நல்லான் ராமசாமி.

* தில்லி தமிழர் சிறப்பிதழ் பாராட்டுக்குரிய முறையில் அமைந்திருந்தது! பயனுள்ள செய்திகளுடன், இலங்கைப் பிரச்னையில் கல்கிக்கு மாறுபட்ட கருத்தைக் கொண்ட ஏ. பி. வெங்கடேசுவரனின் பேட்டியையும், இலங்கைப் பிரச்னை பற்றிய அவருடைய கருத்துக்களையும், பாரபட்சம் இன்றி வெளியிட்டிருந்ததும் சிறப்பிதழுக்கே சிறப்பு சேர்த்தது! வாழ்த்துக்கள்!!

விருதுநகர், கே. டி. ஆர். சேகர்.

* நான் ராயபுரம் பிரம்ம தீர்த்தத்தில் (ஈமக்கடன் செய்யும் இடம்) ஸொர்க்காகப் பணிபுரிகிறேன். சில மங்கள காரியங்களுக்குச் செல்லும் போது நீங்கள் எங்கே வேலை செய்கிறீர்கள் என்று கேட்டால் அபசகுனம் மாதிரி பிரம்ம தீர்த்தத்தில் என்று கூற நான் தயங்கியது உண்டு. ஆனால் 17.4.88 கல்கியில் 'கப்புடு' கட்டுரையில், (நூறு யாகங்கள் செய்வதைக் காட்டிலும் ஓர் ஈமக் கடனுக்கு உதவி செய்வது சாலவும் சிறந்தது என்று வேதம் சொல்வதாக அவர் எழுதிய கருத்தைக் கண்டு மிகவும் ஆறுதல் அடைந்தேன். இனி எனக்கு மற்றவர்களிடம் என் வேலையைப் பற்றிக் கூறத் தயக்கம் ஏற்படாது.

சென்னை — 1, கிட்டு.

* தராசு பதில் இல்லாதது படு ஏமாற்றம்...! இதற்கு என்ன தண்டனை தரலாம் என யோசிக்கிறேன்.

விருத்தாசலம், சித்ரபானு.

* காவிரியை நம்பித்தான் தஞ்சை வாழ வேண்டுமா...? என்பதை விட அந்தத் தஞ்சையை நம்பித்தான் நமது தமிழ் மக்கள் வாழ்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, **அதன் வளர்ச்சி** பற்றி ஒரு பெரிய கருத்தரங்கு கூட்டி, அதற்குத் தீர்வு காணத் துடிக்கும் டாக்டர் உதயமூர்த்தியின் பெருமுயற்சி பாராட்டுக்குரியது.

கோவை, கா. க. வே. ரோகிணி.

* இந்திய நாட்டு அரசியல்வாதிகள் வெளிநாடுகளிலிருந்து லஞ்சம் பெறுவது மட்டுமல்ல, வெளிநாட்டினருக்கு லஞ்சம் கொடுப்பதிலும் வல்லவர்களாக விளங்குகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுதான், பிரபாகரனுக்குத் தரப்பட்ட ஐம்பது லட்சம் பண விவகாரம். 'பஞ்சாப் தீவிரவாதிகளுக்குப் பாகிஸ்தான் ஊக்கமளிக்கிறது' என்று நாம் ஓலமிடுவதில் அர்த்தமே இல்லை!

சிறுமுகை, ஜி. கதிரேசன்.

* எம். எஸ். உதயமூர்த்தி அவருடைய ஆக்க பூர்வமான எண்ணங்களை எழுதுவதுடன் நிறுத்திக் கொள்ளாமல் செயல்படுத்திடவும், முனைந்துள்ள செய்தி மகிழ்ச்சியளித்தது. அவருடைய திட்டங்கள் வெற்றி பெற நமது வாழ்த்துக்கள்.

ஐ. கே. ஷரீஃப் எழுதிய 'இவர்தான் முதல்வர்' கட்டுரை பாராட்டும்படி அமைந்திருந்தது. ஆனால், அவர் சொல்லுவது போல் டாக்டர் கலாநிதி முதல்வராக வேண்டுமானால் அவர் சார்ந்துள்ள கழகத் தலைவர் வழிவிட வேண்டுமே! டாக்டர் கலாநிதிக்கு டாக்டர் கருணாநிதி வழி விடுவாரா...?

காட்டூர், எஸ். அருள்மொழி.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 380/—; விமானத் தபால் ரூ. 680/—.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



எழுந்தது...வேர்க்குருவுக்கு
ஒரு புத்தம்புது எதிரி.
ஷவர் டு ஷவர்
MEDICATED
Shower to Shower
PRICKLY HEAT POWDER
இனி, வெய்யிலும் கானலும் இனிய நண்பர்கள் உமக்கு.
எந்தப் பவுடரிலும் நீங்கள் கண்டிராத வன்மையோடு வேர்க்குருவை விரட்டுகிறது புதிய ஷவர் டு ஷவர். இதிலுள்ள சிறப்பான மருந்துத் திறன், அரிப்பு நமைச்சல்களை நொடியில் போக்கி ஆறுதலளிக்கிறது. அதே வேகத்தில், வேர்க்குரு பிரச்சினையையே தீர்க்கிறது விருக்கென. ஷவர் டு ஷவர் மூலமாக உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் குன்றாத குளுமை, உலர்வான சுக வசதி, சௌகரியம்—நாள் முழுதும், கோடைகால முழுதும். தூவிக் கொள்வீர் இன்றே துளியளவு. உலாச் செல்வீர் வெளியே, குளிர்காய்வீர் சூரிய ஒளியின் சுகமான நட்பிலே.
உயர்ந்த செயல்திறன்
துரித நிவாரணம்.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

பாலிஷ்கள் எவற்றிலும் கிடைக்காத பாதுகாப்பை டச்வுட் உங்கள் மர ஃபர்னிச்சர்களுக்கு அளிக்கும் விதம்.



இப்போது ஏஷியன் பெயிண்ட்ஸ் வழங்குகிறது. டச்வுட் பாலியூரத்தேன் கிளியர் வுட் ஃபினிஷ். உங்கள் மர ஃபர்னிச்சர்களின் மீது உறுதியான கவசமாக படிகிறது. பாலிஷ்களை விட பல மடங்கு சிறப்பாக கீறல்களிலிருந்தும், கறைகளிலிருந்தும் பாதுகாக்கிறது.

பாலிஷ்களுக்கு வலிமை போதாது

பாலிஷ்கள் பூசிய உடன் ஃபர்னிச்சர்களை பளபளக்க செய்கிறது. ஆனால் இந்த பளபளப்பு நீடிப்பதில்லை. இதற்கு காரணம் பாலிஷ் மரத்தின்மீது மிகவும் மெல்லிய பூச்சாக படிகிறது. இதனால் காபி, டீ, தண்ணீர் போன்றவை சிந்தியவுடன் கறைகள் விழுகின்றன. கீறல்களும் எளிதில் விழுகின்றன. உங்கள் மர ஃபர்னிச்சர்கள் எழில் குலைந்து காட்சி அளிக்கின்றன.

டச்வுட்: பாலியூரத்தேன் வலிமை

'டச்வுட்'டில் மர பூச்சுகளுக்கு வலிமையூட்டும் பாலியூரத்தேன் என்கின்ற பொருள் உள்ளது. இது மரத்தின் இயற்கை எழிலுக்கு மெருகேற்றுவதுடன் மரத்தை விடாப்பிடியாக இறுகப் பற்றிக் கொள்கிறது. சுடு நீரோ, குளிர் பானமோ சிந்தினாலும் கறை படாமல் காக்கின்றது எளிதில் கீறல்கள் விழாமல் தடுக்கிறது. பூசிய சில நாட்களில் மங்கிவிடும் பாலிஷ்போல் இல்லாமல், பல்லாண்டுகள் உங்கள் ஃபர்னிச்சர்களை பொலிவுற வைத்திருக்கிறது.

பிரஷ் கொண்டு பூசலாம். நிதானமாக உலர்ந்தாலும், உறுதியான பாதுகாப்பு.

சாதாரண பெயிண்டைப் போல டச்வுட்டை பிரஷ் கொண்டு பூசலாம். எளிதான இந்த பூச்சு முறையினால், உங்கள் ஃபர்னிச்சர்களுக்கு டச்வுட்டை எந்த பெயிண்ட்டரைக் கொண்டும் பூச வைக்கலாம். பெயிண்டைப் போல இருப்பதினால் மர வேலைப் பாடுகளின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஊடுருவிப் படிகிறது டச்வுட்.



பாலிஷ்களைப் போல் அல்லாமல் டச்வுட் உலர சற்று அதிக நேரம் பிடிக்கும். ஆனால் கதவு, ஜன்னல்களுக்கு பூசும் பெயிண்டை விட விரைவாகவே உலர்ந்து விடுகிறது. இவ்வாறு உலர்வதினால் டச்வுட் இறுக படிந்து கவசம் போன்று ஃபர்னிச்சர்களை பாதுகாக்கிறது.

பாலிஷை விட சற்றே விலை கூடுதலானாலும், டச்வுட்டின் நீண்ட ஆயுள் உங்கள் செலவுக்கு மேலாகவே ஈடு செலுத்தி விடுகிறது. ஆம், டச்வுட் பாலிஷ்களை விடப் பலமடங்கு காலம் நீடித்திருக்கும் உயர்ந்த ஃபினிஷ்.

இரு வித ஃபினிஷ்கள்: பள பள கிளாசி, மினுக்காத மேட்.

பாலிஷ்களைப் போலன்றி, டச்வுட் இருவித மெருகுகளிலும் கிடைக்கிறது: பள பள கிளாசி ஃபினிஷ், மினுக்காத மேட் ஃபினிஷ், மேலும் டச்வுட் ஸ்டெயின்கள் உபயோகித்து சாதாரண மரத்தையும் வால்நட், ரோஸ்வுட் உட்பட மூன்று வித சிறப்பு வண்ணங்களில் பொலிவுற செய்யலாம்.

எங்கும் கிடைக்கும் டச்வுட்.

எல்லா ஏஷியன் பெயிண்ட்ஸ் விற்பனையாளர்களிடமும் டச்வுட் கிடைக்கும்.

ஒருமுறை உபயோகித்து பாருங்கள். டச்வுட் உங்கள் ஃபர்னிச்சர்களின் எழிலை பாதுகாப்பதின் மேன்மையை.

TOUCH WOOD



'மரத்தின் இயற்கை எழிலுக்கு நிரந்தர பாதுகாப்பு.

ஏஷியன் பெயிண்ட்ஸ்

OBM/9350/TAM/R